விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஆடி 01 சனிக்கிழமை (16.07.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 210

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

## சர்வதேச நீதிபதிகள் விவகாரம்

# நெருக்கடியைச் சமாளிக்க இலங்கை கையாண்ட உத்தி

### இப்போது இவை சூன்யம் என்கிறார் சரத் என் சில்வா




(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் போர்க் குற்றங்கள் குறித்து சர்வதேச நீதிபதிகள் அல்லது வெளிநாட்டு சட்டவாளர்களை உள்ளடக்கிய விசாரணை பொறிமுறைக்கு அரசாங்கம் ஜெனிவாவில் கைச்சாத்திட்டுள்ளமையானது அன்று ஏற்பட்ட நெருக்கடியை சமாளித்துக் கொள்வதற்கு கையாண்ட உத்தியே தவிர அதன் தார்மீக தன்மை என்பது இன்று வெறும் சூன்யமானதொன்றென முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்தார்.

ஜெனிவா தீர்மானத்திற்கு அமை

23ஆம் பக்கம் பார்க்க....

### பிரான்ஸில் பயங்கரம் 85 பேர் உயிரிழப்பு



12ஆம் பக்கம் பார்க்க....

### இலங்கைக்கு சீனா எப்போதும் உதவும்

(கொழும்பு)

இலங்கைக்கு அனைத்து வழிகளிலும் உதவப்போவதாக சீன அரசாங்கம் அறிவித்துள்ளது.

சீனாவின் தேசிய கொள்கை மற்றும் பொருளாதார விடயங்களுக்கான அமைச்சு இதனைத் தெரிவித்துள்ளது.

அந்த அமைச்சின் வர்த்தக ஆலோசகராக இலங்கையில் உள்ள சீன தூதரகத்தில் பணியாற்றும்

24ஆம் பக்கம் பார்க்க....

### நாமலுக்கு சிறைச்சாலைக்குள் சொகுசு மெத்தை, தலையணை!

(கொழும்பு)

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு வீட்டிலிருந்து தருவித்துக் கொண்டுள்ள சொகுசு மெத்தையொன்றை பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த அரசாங்க காலத்தில் இடம்பெற்ற 70 மில்லியன் ரூபா நிதிமோசடி தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, தற்போது கொழும்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

சிறைச்சாலையில் அவருக்கு ஜே சிறைக்கூடம் வழங்கப்பட்டுள்ளது. ஒரு அறை மற்றும் அதற்கான தனியான குளியலறை உள்ளிட்ட வசதிகளும், நாமல் ராஜபக்ஷவை

24ஆம் பக்கம் பார்க்க....

### 'தடம் மாறுகிறதா தமிழ்த் தேசியம்' கருத்து பகிர்வுறவாடல் நிகழ்வு நாளை

#### மன்னார் பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் "தடம் மாறுகிறதா தமிழ் தேசியம்" எனும் மகுடத்திலான கருத்தாய்வு நிலை கருத்துப் பகிர்வுறவாடல் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை மன்னார் ஞானோதயம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

குறித்த உயர் நிலைக் கருத்துரையாடலில் பிரதானமாக ஐந்து தலைப்புக்களில் துறைசார்ந்த நிபுணத்துவ கருத்தியலாளர்கள் ஆய்வியல் நோக்கில் கருத்தாடல் நிகழ்த்தவுள்ளனர்.

தொடர்ந்தும் அடக்கு முறைக்குட்படும் இனத்திற்கு தூறலாகி விட்ட மனிதவுரிமை, தமிழ்த் தேசிய அரசியலின் இன்றைய வகிபாகமும் அதன் நிலையியலும், இராஜதந்திர நகர்வில் தமிழ்தேசியவாதம் நலி

24ஆம் பக்கம் பார்க்க....

#### உக்ரைனில் மறைந்து வாழ்கின்ற

### முன்னாள் தூதுவர் உதயங்கவை கைது செய்யுமாறு கோரிக்கை



(கொழும்பு)

உக்ரைனில் மறைந்து வாழ்வதாக நம்பப்படும் ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவரும், மகிந்த ராஜபக்ஷவின் மைத்துனருமான உதயங்க வீரதுங்கவை கைது செய்ய உத்தரவு பிறப்பிக்குமாறு கொழும்பு கோட்டே நீதிமன்றத்தில் நிதிக்குற்றவியல் விசாரணைப் பிரிவினர் கோரிக்கை விடுத்துள்ளனர். 2005-2006ஆம்

24ஆம் பக்கம் பார்க்க....

### 18 ஆயிரம் இராணுவத்தினர் சட்ட பூர்வமாக நீக்கம்!

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து தப்பிச் சென்ற 18 ஆயிரத்து 417 இராணுவ வீரர்கள் பொது மன்னிப்பின் கீழ் சட்டரீதியாக இராணுவ சேவையில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

இதில், 16 ஆயிரத்து 920 இராணுவ சிப்பாய்களும் 868 கடற்படையினரும் 629 விமானப்படையினரும் உள்ளடங்குவதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ஜயநாத் ஜயவீர தெரிவித்தார்.

இதேவேளை பொதுமன்னிப்பு காலத்தில் ஆஜராகாத இராணுவ வீரர்களை கைது செய்ய நடவடிக்

24ஆம் பக்கம் பார்க்க....

க.பொ.த (உ/த)
பரீட்சை
மாதிரி வினாத்தாள்
இரசாயனவியல் II

உள்ளே...

### பிரதமர் நாளை சிங்கப்பூர் பயணம்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமாக நாளை சிங்கப்பூருக்கு பயணம் செய்யவுள்ளார்.

சிங்கப்பூரில் நாளை மறுதினம் 18 மற்றும் 19ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள தென் ஆசியாவின் புலம்பெயர் அமைப்பு மாநாட்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

24ஆம் பக்கம் பார்க்க....

### சர்வதேச விசாரணையைக் கோருவது இலங்கை அரசியலமைப்புக்கு முரணானது

#### ஜே.வி.பியின் தலைவர் அநுர யாழில் கருத்து



(யாழ்ப்பாணம்)

இலங்கை மீது சர்வதேச விசாரணையைக் கோருவது இலங்கை அரசியலமைப்புக்கு முரணாகும், இவ்வாறு முரணாக நடைபெற்றால சர்வஜன வாக்கெடுப்புக்கு அது வழிகோலும், ஆகையால் இலங்கையின் அரசியல் அமைப்புக்கு ஏற்றவகையிலேயே அனைத்தும் நடைபெற வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலை

24ஆம் பக்கம் பார்க்க....

### 6 கைக்குண்டுகள் மீட்டு செயலிழப்பு

(கரணவாய்)

ஓமந்தை அரசமுறிப்புப் பகுதியில் வெடிக்காத நிலையில் இருந்த ஆறு கைக்குண்டுகள் மீட்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டதாக ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று வெள்ளிக்கிழமை காலை 7.00 மணியளவில் பனை மரம் ஒன்றுக்கு கீழ்ப்பகுதியில் கைக்குண்டுகள் இருப்பதைக் கண்ட அ

23ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## 500 ரூபாயுடன் அப்பாவை கைவிட்ட 5 பிள்ளைகளுக்கு அழைப்பாணை

(கொழும்பு)

பாணந்துறை வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்றுவரும் 80 வயது வயோதிபரின் பிள்ளைகள் 5 பேரையும் எதிர்வரும் 25ஆம் திகதி, பாணந்துறை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு மேலதிக நீதவான் கல்ஹாரி லியனகே உத்தரவிட்டுள்ளார்.

குறித்த வயோதிபரிடம் 500 ரூபாய் பணத்தை கையில் கொடுத்த அவரது மகன்களில் ஒருவர், கேகாலையிலிருந்து கடந்த 26ஆம் திகதி பஸ்ஸில் ஏற்றி அனுப்பியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

முதியவர், பாணந்துறை பஸ் நிலையத்தில் வந்து இறங்கியதுடன் சுகவீனமடைந்த நிலையில், பயணியொருவரினால் பாணந்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முதியவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறித்து பிள்ளைகள் 5 பேருக்கும் இரண்டு தடவைகள் அறிவித்தும் அவர்கள் வந்து பார்க்கவில்லை எனவும் அவரின் ஒரு மகன் பொலிஸில் சேவையாற்றுவதாக பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

அதனையடுத்தே, முதியவரின் 5 பிள்ளைகளையும் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட்டு நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது. (செ-11)

## சாராயம் விற்றவர் பொலிஸாரால் கைது!

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பகுதியில் அரச சாராயத்தை விற்பனை செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் சாராயப் போத்தல்களும் மீட்கப்பட்டதாக பருத்தித்துறை பொலிஸ் நிலைய தலைமைப் பீட பொலிஸ் பொறுப்பதிகாரி நுவான் பி.டந்தநாராயணா தெரிவித்தார்.

நாகர்கோவில் கிழக்குப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் அரச சாராயம் விற்பனை செய்யப்படுவதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் அங்கு சென்ற பொலிஸார்,

180 மில்லிலீற்றர் அளவு கொண்ட 30 சீல் செய்யப்பட்ட சாராயப் போத்தல்களையும் அதே அளவு கொண்ட ஒரு உடைக்கப்பட்ட சாராயப் போத்தலையும் கைப்பற்றியதுடன் அதனை விற்பனை செய்து கொண்டிருந்த அப்பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய குடும்பஸ்தரையும் கைது செய்ததாக பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (செ-60)

## அபிவிருத்திப் பணியில் முப்படையினர்

நாட்டைக் கட்டியெழுப்பும், அமைதியைத் தோற்றுவிக்கும் செயற்பாடுகளில், முப்படைகளையும் காத்திரமான வகையில் ஈடுபடுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

இதற்காக, சிவில் - இராணுவ ஒருங்கிணைப்பு அமைப்பு ஒன்றும் உருவாக்கப்படவுள்ளது. கடந்த 13-ம் திகதி செவ்வாய்க்கிழமை நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில், பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்திருந்தார். இதற்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

இதற்கமைய முப்படைகளினது அறிவும், வளங்களும், நாட்டைக் கட்டியெழுப்பும் மற்றும் அமைதியைப் பேணும் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படவுள்ளது.

புதிதாக உருவாக்கப்படவுள்ள தேச அபிவிருத்தி அமைப்பில் படையினர் முக்கிய பங்கு வகிக்கவுள்ளனர் என்று, அமைச்சரவையின் இணைப் பேச்சாளரான கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார். (செ-11)


**விற்பனையாளர் தேவை**

புடைவை அனுபவமுள்ள
பெண் விற்பனையாளர் தேவை
சிவகணேசன் ரெக்ஸ்ரைலஸ்
41, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.
(5233)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


இணுவில் இந்துவின்

## கண்ணீர் காணிக்கை



எமது பாடசாலையின் வளர்ச்சிக்காக பழைய மாணவர் சங்கம், இணுவில் இந்து கல்வி அபிவிருத்தி நிதியம் என்பவற்றின் ஆலோசகராக இருந்து வழிகாட்டும் பேராசிரியர் க. தேவராசா அவர்களின் பாசமிகு தாயார்

திருமதி **கந்தையா அன்னம்மா**

இறைபதம் அடைந்தமையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்துடன் நாமும் துயரினைப் பகிர்ந்து கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக்கழகம்**
**இணுவில் இந்துக் கல்லூரி**

## யாழ்ப்பாணம் மாநகரசபை

**நல்லூர் கந்தசுவாமி கோயில்**
**மஹோற்சவ கால தற்காலிக கடைகளை**
**குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2016**

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ கால தற்காலிக கடைகள் அமைப்பதற்கான நிலையங்களை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகளுக்கான விண்ணப்பப்படிவங்களை மாநகர சபையின் நானாவித இறைவரிப்பகுதியில் கட்டணம் செலுத்திப் பெற்றுக் கொள்ளமுடியும்.

| | |
|---|---|
| கேள்விப் படிவக்கட்டணம் | : ரூபாய் 500.00+ VAT+NBT |
| கேள்விப்படிவம் விநியோகிக்கும் திகதி | : 18.07.2016 தொடக்கம் 01.08.2016 பிற்பகல் 2.30 மணி வரை |
| கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் | : 02.08.2016 முற்பகல் 9.30 மணி வரை |
| கேள்வி திறத்தல் | : 02.08.2016 முற்பகல் 10.00 மணிக்கு |

- மாநகர சபை துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையத்துக்கான மீளளிக்கக் கூடிய வைப்புப்பணம் - ரூபாய் 11,700.00
- ஏனைய கடைகளுக்கான மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் - ரூபாய் 2,925.00

விண்ணப்பப்படிவங்கள் யாவும் ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் என முகவரியிடப்பட்டு நானாவித இறைவரிப்பகுதியில் வைக்கப்படும் கேள்விப் பெட்டியினுள் 02.08.2016 முற்பகல் 9.30 மணிக்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும். கேள்வியில் சித்தி பெற்றவர்கள் கேள்வித்தொகையினை 03.07.2016 பிற்பகல் 02.30 மணிக்கு முன்னர் முழுமையாக செலுத்தி குறிக்கப்பட்ட இடத்தினை பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை மற்றும் நிபந்தனைகளை மாநகரசபை, நானாவித இறைவரிப்பகுதியில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்வதுடன் வரைபடத்தையும் பார்வையிடலாம்.

கேள்விச்சபையின் முடிவே இறுதியானது.

**குறிப்பு :**

- ஆலய சுற்றாடலில் உள்ள நிரந்தரக்கடைகளும், உற்சவகாலத்திற்கு மாநகர சபையால் வழங்கப்படும் கடைகளும் தவிர வேறு கடைகள் தனியார் காணிகளிலோ அல்லது தனிப்பட்ட இடங்களிலோ சபையின் அனுமதியின்றி திறந்து வியாபாரம் நடத்தவும், விளம்பரங்கள், விளம்பர பதாகைகள் அமைப்பதற்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது என்பதுடன் அவ்வாறு அனுமதியின்றி நடத்தப்படும் நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத் தருகின்றேன்.
- கோவில் சுற்றாடலில் உள்ள நிரந்தரக்கடைகள் வியாபார மாற்றம் செய்வதாயின் அதற்கான உரிமத்தை யாழ்ப்பாணம் மாநகரசபையிலிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.
- துவிச்சக்கரவண்டிக்கு ஆகக்கூடிய தொகையாக ரூபாய் 5.00 உம், மோட்டார் வண்டிக்கு ரூபாய் 10.00 உம் மட்டுமே அறவிடப்பட வேண்டும். தலைக்கவசத்துக்கு பணம் அறவிடப்படலாகாது.
- உணவு கையாளும் நிலையங்கள் மேலதிகமாக சுகாதார வைத்திய அதிகாரியினால் வழங்கப்படும் படிவத்தினை பூர்த்தி செய்து பொது சுகாதார பரிசோதகரினால் உறுதிப்படுத்திய பின்னர் விண்ணப்பப்படிவத்துடன் இணைத்துச் சமர்ப்பிக்க வேண்டும்.

**பொ.வாகீசன்,**
**ஆணையாளர், மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

13.07.2016

(சி-5199)

## 70ஆவது திருமண வாழ்த்துக்கள்

திரு. திருமதி
**நாகேந்திரம் சிவபாக்கியம்**



தமது எழுபதாவது திருமணநாளை இன்று (16.07.2016) சனிக்கிழமை தமது இல்லத்தில் பிள்ளைகள் சூழ வெகுவிமர்சையாகக் கொண்டாடுகிறார்கள். புது தம்பதியினரை மனதார நூற்றாண்டுகள் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.



வாழ்த்துவோர் :
*பிள்ளைகள்,*
கீதா குடும்பம் - சுவிஸ்,
உஷா குடும்பம் -ஜேர்மனி,
லதா குடும்பம் - டென்மார்க்,
இழங்கீரன் குடும்பம் -சுவிஸ்,
நர்மதா குடும்பம் - சுவிஸ்,
சிவாகரன் குடும்பம் -சுவிஸ்,
ரஞ்சிதா குடும்பம் - லண்டன்

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(5230)

# நுண் நிதி சட்ட மூலம் அமுலுக்கு வருகிறது

## பிரதமர் அறிவிப்பு


2016 -ஜூலை 11 வர்த்தமானி அறிவித்தலின் 2016 இலக்கம் 16 என்ற நுண் நிதி சட்டமூலத்தை அமுல்படுத்தப் போவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தேசிய கொள்கை மற்றும் பொருளாதார விவகார அமைச்சர் என்ற வகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வழங்கியுள்ள உத்தரவுக்கு அமைய இந்த சட்டமூலம் அமுல்படுத்தப் படவுள்ளதாக பிரதமரின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில், வறிய மக்களின் பெரும்பாலானவர்களுக்கு குறிப்பாக பெண்களுக்கு கடன் வசதிகளை வழங்கும் நுண் நிதி கடன் அமைப்புகள் முதல்முறையாக இலங்கையில் நிர்வாக கட்டமைப்புக்குள் கொண்டு வரப்படவுள்ளது.

இது வரலாற்று சிறப்பு மிக்க சந்தர்ப்பம் எனவும் வரையறைகள் இல்லாத காரணத்தினால் நுண் நிதி கடன் என்ற பெயரில் சக்விதி, தண்டுவம் முதலி போன்ற போலி வியாபாரிகள் உருவாகினார்கள். அவர்களிடம் அப்பாவி மக்கள் ஏமாற்றமடைந்தனர்.

ஆனால் இதற்கு பின்னர், இவ்வாறான முறைகேடு மோசடிகளுக்கு இடமில்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (இ-10)



(கேலிசித்திரம்)

# புலம்பெயர்ந்தோரின் அழுத்தங்களை அரசாங்கம் சரியாக கையாள வேண்டும்

## பிரதியமைச்சர் ஹர்ச டி.சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

*நல்லாட்சி அரசாங்கத்தின் மீது புலம்பெயர் மக்கள் கொண்டுள்ள எதிர்பார்ப்புகள் மற்றும் அழுத்தங்கள் என்பன அதிகளவிலான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. அதனை தகுந்த முறையில் கையாள வேண்டியதொரு கடப்பாடு தற்போதைய அரசாங்கத்துக்கு உண்டு என்பதனை மறுப்பதற்கில்லை என வெளிநாட்டலுவல்கள் பிரதியமைச்சர் ஹர்ச டி. சில்வா தெரிவித்துள்ளார்.*



கடல் கடந்த இலங்கையர்களை ஊக்குவிப்பதற்கான பாதை எனும் நூல் வெளியீடு நேற்று முன்தினம் லக்ஸ்மன் கதிர்காமர் நிலையத்தில் நடைபெற்றது. குறித்த நிகழ்வில் சிறப்பு பிரதிநிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் புலம்பெயர் மக்களின் பங்களிப்பு எனும் தலைப்பின்கீழ் விசேட கலந்துரையாடலும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

# பிரான்ஸ் தாக்குதலுக்கு ஜனாதிபதி கடும்கண்டனம்

(கொழும்பு)

பிரான்ஸில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்டுள்ள தீவிரவாத தாக்குதலுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளார்.

குறித்த தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு தனது ஆழ்ந்த அனுதாபத்தையும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இதேவேளை குறித்த தாக்குதலினால் இலங்கையர் எவரும் பாதிக்கப்பட்டுள்ளார்களா? என்பது தொடர்பில் இதுவரை தகவல்கள் வெளியாகவில்லை எனவும் குறிப் பிடப்பட்டுள்ளது.

இது குறித்து பிரான்ஸிலுள்ள இலங்கை தூதுவராலயம் தகவல்களை சேகரித்து வருவதாக பிரான்ஸின் வெளிவிவ்கார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் மஹேசினி கொலொன்ன தெரிவித்துள்ளார். (இ-10)

# பையில் குழந்தை இளம்பெண் கைது

குழந்தை ஒன்றை பிரசவித்த 19 வயதான பெண் ஒருவர் அந்த குழந்தையை பையொன்றில் போட்டு எடுத்துச் சென்றுக்கொண்டிருந்த போது பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ராகலை பொலிஸார் இந்தப் பெண்ணை நேற்று கைது செய்துள்ளனர்.

பெண் ஒருவர் குழந்தையை பையில் இட்டு எடுத்துச் செல்வதாக பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

இதனையடுத்தே பொலிஸார் அவரை கைது செய்துள்ளனர். (இ-10)

# மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழுவின் யோசனைகளை சட்டமாக்க நடவடிக்கை

## மின்சக்தி அமைச்சு அறிவிப்பு

மக்கள்பயன்பாட்டு ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்டுள்ள சில யோசனைகளை சட்டமாக்குவதற்கு மின்சக்தி மற்றும் புதுப்பித்தல் சக்தி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய மின்சக்தி தொடர்பான பொறுப்பு மற்றும் செயற்றிறனை அதிகரித்தல் உள்ளிட்ட பல்வேறு யோசனைகளை சட்டமாக மாற்றுவதற்குரிய வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியிடப்படும் என அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

மின்சாரத்தை பிறப்பித்தல் மற்றும் விநியோகித்தல் செயற்பாடுகளை செயற்றிறனுடன் முன்னெடுத்தல், பாவனையாளர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் தொடர்பிலான பல்வேறு யோசனைகள் மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார். பாவனையாளர்களுக்கு தடையின்றி தொடர்ச்சியாக மின்சாரம் விநியோகிக்கப்படாமை மற்றும் சேவையில் காணப்படுகின்ற குறைபாடுகள் தொடர்பில் சட்டங்களுக்கு அமைவாக எதிர்காலத்தில் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதாகவும் அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார். (இ-10)

# விலக்களிக்கப்பட்ட சேவைகளுக்கும் பொதுமக்கள் வரி செலுத்தியுள்ளனர்

## சரத் என் சில்வா விசனம்

வற்வரியில் விலக்களிக்கப்பட்டிருந்த சேவைகளுக்கும் வரி விதிக்கப்பட்டமையானது, சட்டவிரோதமானது. இந்தநிலையில் மக்கள் அந்த சேவைகளுக்காக மேலதிக பணத்தைச் செலவிட்டுள்ளதாக முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்

**வற்வரியில் இருந்து விலக்களிக்கப்பட்டிருந்த சுகாதார சேவைகளுக்கும் பொதுமக்கள்15வீத வரியை செலுத்தியுள்ளனர்.**

சர்வதேச நாணய நிதியத்தின் கோரிக்கைக்கு இணங்கவே அரசாங்கம் வற்வரியை விதித்தது.

இதனால் அரசாங்கத்துக்கு 220 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வருமானமாக கிடைத்துள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

**சர்வதேச நாணய நிதியத்தின் கோரிக்கையை நிறைவேற்றியமை காரணமாகவே அந்த நிதியம் இலங்கைக்கு 1.5பில்லியன் டொலர் கடன்திட்டத்தில் முதல் தவணையை வழங்கியது என்றும் அவர் தெரிவித்தார்.**

11வீதமாக இருந்த வற்வரி கடந்த மே 2ஆம் திகதி முதல் 15வீதமாக அதிகரிக்கப்பட்டது.

**இந்தநிலையில் வற்வரி அதிகரிப்பையும் தேசிய கட்டட வரியையும் உயர்நீதிமன்றம் இந்த வாரத்தில் இடை நிறுத்தம் செய்துள்ளது.**



**இதேவேளை நாடாளுமன்றத்தின் அனுமதியில்லாமல்,வரி அதிகரிப்பை அமுல்செய்ய முடியாது என்றும் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார். (இ-10)**

# கேகாலை பிரதேசத்தில் மண்சரிவு எச்சரிக்கை

கேகாலை-அரநாயக்க பிரதேசத்தில் மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்ட இடங்கள் தொடர்பில் இன்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என கட்டட ஆய்வு மத்திய நிலையத்தின் பணிப்பாளர் ஆர்.எம். எஸ்.பண்டார தெரிவித்துள்ளார்.

அத்துடன் கேகாலை மாவட்டத்தில் மண்சரிவு ஏற்படக் கூடிய இடங்கள் தொடர்பில் **விரிவான ஆய்வுகளை முன்னெடுத்த தேசிய கட்டட ஆய்வு நிலையத்தினால் ஆய்வுகள் தற்போதும் முன்னெடுக்கப்பட்டு** வருவதுடன், கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய உயர் பாதிப்புக்கள் ஏற்படக் கூடிய பிரதேசம், மத்திய தர பாதிப்புக்கள் ஏற்படும் பிரதேசங்கள் தொடர்பாகவும் முழுமையான அறிக்கைகளை சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

**குறித்த அறிக்கையானது இன்று இடம்பெறவுள்ள கேகாலை மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் அவர்தெரிவித்துள்ளார்.(இ-10)**

# வோர்ன் - முரளி கிண்ணம் 26ஆம் திகதி ஆரம்பம்




உலகில் தோன்றிய மிகச்சிறந்த பந்து வீச்சாளர்களில் இருவராகக் கருதப்படும் இலங்கையின் முத்தையா முரளிதரன், அவுஸ்திரேலியாவின் ஷேன் வோர்ன் ஆகியோரின் பெயரைத் தாங்கிய வோர்ன் -முரளி கிண்ணம், இலங்கை, அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் இம்மாதம் 26ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள டெஸ்ட் தொடரின் வெற்றியாளர்களுக்கு மீண்டும் வழங்கப்படவுள்ளது.

இதுவரையில் 3 தொடர்கள் இடம்பெற்றிருந்த நிலையில், அவை மூன்றிலுமே அவுஸ்திரேலிய அணி வென்றிருந்தது. இம்முறை இடம்பெறவுள்ள 3 போட்டிகள் கொண்ட தொடரைச் சமப்படுத்தினாலேயே, இக்கிண்ணத்தை அவுஸ்திரேலியா, தன்வசம் . வைத்துக் கொள்ளும். இலங்கையினதும் அவுஸ்திரேலியாவினதும் நட்சத்திர வீரர்களின் பெயரை இக்கிண்ணம் தாங்கியிருந்தாலும், இலங்கை சார்பில் பெயரைக் கொண்ட முரளிதரன், அவுஸ்திரேலிய அணியின் ஆலோசகராகச் செயற்படுகின்றமை, இக்கிண்ணத்தில் காணப்படும் 2 பெயர்களுமே, அவுஸ்திரேலியாவின் பக்கமாக உள்ள நிலைமையை ஏற்படுத்தியுள்ளது.


உலகின் முதல்நிலை டெஸ்ட் அணியாக அவுஸ்திரேலியா உள்ள நிலையில், இலங்கை அணி 7ஆம் இடத்திலுள்ளது. பாகிஸ்தானுக்கெதிரான தொடரை இங்கிலாந்து வென்று, இந்தத் தொடரை அவுஸ்திரேலியா அணி தோற்றால் முதலிடத்தைஅவ்வணிஇழக்கும் என்ற நிலை காணப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# சர்வதேச பட்மிண்டன் தரவரிசை சாய்னா நேவால் 5ஆவது இடம்



சர்வதேச பட்மிண்டன் வீரர் - வீராங்கனை தரவரிசை பட்டியல் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது. இதில் இந்திய நட்சத்திர வீராங்கனை சாய்னா நேவால் 5-வது இடத்தில் நீடிக்கிறார். மற்றொரு வீராங்கனையாக பி.வி.சிந்து 10-வது இடத்தில் உள்ளார். சமீபத்தில் நடந்த அமெரிக்க பட்மிண்டன் ஓபனில் அரை இறுதிக்கு முன்னேறிய இந்திய வீரர் அஜய் ஜெயராம் 20-வது இடத்துக்கு முன்னேறி உள்ளார். ஸ்ரீகாந்த் 11-வது இடத்திலும், பிரணாய் 29-வது இடத்திலும், சாய்பிரனீத் 35-வது இடத்திலும் சமீர் வர்மா 38-வது இடத்திலும் உள்ளனர். (க)

# வலுவான நிலையில் பாகிஸ்தான் இங்கிலாந்து சிறந்த ஆரம்பம்



யசீர் ஷாவின் கலக்கலான சுழல்பந்து வீச்சில் சிக்கிய இங்கிலாந்து அணி நேற்றைய 2ஆம் நாள் ஆட்டநேர முடிவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 253 ஓட்டங்களை எடுத்துள்ளது. இதன்மூலம் 3 விக்கெட்டுக்கள் கைவசமிருக்கும் நிலையில் 86 ஓட்டங்களால் பின்தங்கியுள்ளது.

இங்கிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி அங்கு 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்குபற்றுகிறது. இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி லோட்ஸ் மைதானத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது. போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி நேற்று முன்தினம் முதலாம் நாள் ஆட்டநேர நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 282 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் நேற்று தனது முதல் இன்னிங்ஸை தொடர்ந்த பாகிஸ்தான் அணி 339 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் மிஸ்பா 114, சபீக் 73 ஓட்டங்களை அதிகபட்ச ஓட்டங்களாக எடுத்தனர். தொடர்ந்து தமது முதல் இன்னிங்சுக்காக துடுப்பாட்டத்தை தொடர்ந்த இங்கிலாந்து அணி, அணித் தலைவர் குக், ரூட் ஆகியோர் சிறப்பாக துடுபபெடுத்தாடிய போதிலும் மற்றைய வீரர்களின் பொறுப்பற்ற துடுப்பாட்டத்தாலும் யசிர் ஷாவின் அச்சுறுத்தலான சுழல் பந்து வீச்சிலும் சிக்கி நேற்றைய 2ஆம் நாள் ஆட்டநேர முடிவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 253 ஓட்ட ங்களை எடுத்துள்ளது. துடுப்பாட்டத்தில் குக் 81, ரூட் 48 ஓட்டங்களை எடுத்தனர். போட்டியின் 3ஆம் நாள் ஆட்டம் இன்றாகும். (க)

# ஒய்வுக்கு பிறகு ரகசியம் தெரிவிப்பேன் – அப்ரிடி மிரட்டல்



ஓய்வுக்கு பிறகு ரகசியங்களை தெரிவிப்பேன் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு அப்ரிடி மிரட்டல்விடுத்து உள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் அப்ரிடி, டெஸ்ட், ஒருநாள் போட்டிகளில் ஓய்வுபெற்று 20 ஓவர் போட்டியில் விளையாடி வருகிறார். 20 ஓவர் உலக கோப்பைக்கு பிறகு ஓய்வு பெறுவார் எனறு எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவர் ஓய்வு பெறவில்லை. இந்த நிலையில் தனியார் தொலைககாட்சிக்கு அளித்த பேட்டியில் அப்ரிடி பாகிஸ்தான் கிரிககெட் சபைக்கு மிரட்டல் விடுத்து உள்ளார். அவர் கூறியதாவது.

அணியில் உள்ள சில வீரர்களை விட நான் விளையாடுவதாக உணர்ந்தேன். இதனால் உலக கோப்பைக்கு பிறகு ஓய்வுபெறவில்லை. பாகிஸ்தானில் கிரிக்கெட் எப்படி மோசமான நிலையில் உள்ளது என்பதை ஓய்வு பெற்ற பிறகு வெளியிடுவேன்.

கிரிக்கெட் நிர்வாகம் நிறைய தவறுகள் செய்துள்ளது. வீரர்கள் தரம் சர்வதேச அளவில் இல்லை. ஓய்வுக்கு பிறகு ரகசியங்களை தெரிவிப்பேன் என்றார். (க)

# இலங்கை வங்கியின் விளையாட்டு விழா

இலங்கை வங்கியின் வடமாகாண ரீதியலான வருடாந்த விளையாட்டு விழா இன்று காலை 8 மணிக்கு சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (க)

# டி வில்லியர்ஸ் சிறப்பாட்டம் பார்படோஸ் அணி வெற்றி



கரீபியன் பிரீமியர் லீக் போட்டியில் ஏபி டி வில்லியர்ஸ் 54 பந்தில் 82 ரன்கள் குவித்தார். இதனால் அவரது பார்படோஸ் அணி வெற்றி பெற்றது. மேறகிந்திய தீவுகளில் கரீபியன் பிரீமியர் லீக் இருபது-20 கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகறது.

நேற்று முன்தினம் நடை பெற்ற போட்டியில் பார்படோஸ் டிரென்ட்ஸ்-செயின்ட் கிட்ஸ் அண்ட் நெவிஸ் பேட்ரியாட்ஸ் அணகள் மோதின. நாணய சுழற்சியில் வென்ற செயின்ட் கிட்ஸ் அணி முதலில் க ளத்தடுப்பை தேர்வு செய்தது. அதன்படி பார்படோஸ் அணியின் ஸ்டீவன் டெய்லர், ரெய்பர் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். இருவரும் முறையே 2, 1 ரன்களில் அவுட்டாகி ஏமாற்றம் அளித்தனர். 3-வது வீரராக வந்த சோயிப் மலிக் 16 ரன்கள் எடுத்து வெளியேறினார். 4-வது விக்கெ ட்டுக்கு ஏபிடி வில்லியர்ஸ் உடன் நிக்கோலஸ் பூரண் ஜோடி சேர்ந்தார்.

இந்த ஜோடி செயின்ட் கிட்ஸ் அணியின் பந்து வீசசை துவம்சம் செயதது. பூரண் 19 பந்துகளை சந்தித்து 2 பவுண்டரி, 4 சிக்சர்களுடன் 38 ரன்கள் சேர்த்தார். அடுத்து வந்த பொல்லாரட் நிதானமாக விளையாட டி வில்லியர்ஸ் அதிரடி காட்டினார். பொல்லார்ட் 21 பந்தில் 27 ஓட்டம் சேர்த்தார். டி வில்லியர்ஸ் 54 பந்தில் 9 பவுண்டரி, 3 சிக்சர்களுடன் 82 ரன்கள் சேர்த்தார். இவரது அதிரடி ஆட்டத்தால் பார்படோஸ் 20 ஓவர்கள முடிவில் 6 விக்கெட் இழப்பிற்கு 180 ரன்கள் சேர்த்தது.

அடுத்து 181 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக் குடன் செயின்ட் கிட்ஸ் அண்டு நெவிஸ் பே ட்ரியாட்ஸ் அணி களம் இறங்கியது. அந்த அணியின் தொடக்க வீரர்கள் சிம்மன்ஸ், ஸ்மடஸ் முறையே 18, 13 ரன்களில் ஆட்டம் இழந்தனர். அடுத்து வந்த கப்டன் டு பிளிசிஸ் 34 பந்தில் 42 ரன்களும், ஜோனாதன கார்டர் 38 பந்தில் 46 ரன்களும் சேர்த்தனர். மற்றவ ர்கள் சொற்ப ரன்களில் ஆட்டம் இழக்க, அந்த அணி 20 ஓவர்கள முடிவில் 155 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதனால் பார் படோஸ் அணி 25 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. 82 ரன்கள எடுத்த பார்படோஸ் வீரர ஏ பி டி வில்லியர்ஸ் ஆட்ட நாயகன் விருது பெற்றார். (க)

# மக்களின் பிரச்சினைகளுக்கு மகிந்த தீர்வு வழங்கவில்லை



## அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல குற்றச்சாட்டு

மகிந்த அரசாங்கம் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கவில்லை என அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல குற்றம் சாட்டியுள்ளார்.

கதிர்காமத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்தில் நாட்டு மக்களின் அடிப்படைத் தேவைகளை மறந்து தங்களது பெயரை பிரசித்தி செய்யும் நோக்கில் தேவையற்ற அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டன.

தேவையற்ற அபிவிருத்தித் திட்டங்களுக்காக பெருந்தொகைப் பணம் செலவிடப்பட்டது. இந்தப் பகுதிகளுக்கு வரும் போது நான் ஆச்சரியமடைகின்றேன்.

குறிப்பாக மொன்ராகல, அம்பாந்தோட்டை மக்களுக்கு குடிக்க தண்ணீர் இல்லை. வேலையில்லாப் பிரச்சினை கடுமையாக காணப்படுகின்றது.

பிரதேச மக்களுக்கு தேவையான அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதா என்பது கேள்விக் குறியேயாகும்.

அம்பாந்தோட்டையில் துறைமுகம் அமைக்கப்பட்டது. அதற்கு கப்பல்கள் வருவதில்லை, அமைக்கப்பட்டுள்ள விமான நிலையத்திற்கு ஒன்றிரண்டு விமானங்களே வருகின்றன.

விளையாட்டு மைதானமொன்று அமைக்கப்பட்டது. அதில் வருடத்திற்கே ஒன்றிரண்டு போட்டிகளே நடைபெறுகின்றன.

5 ஆயிரம் பேர் பங்கேற்கக் கூடிய மாநாட்டு மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டது. எனக்குத் தெரிந்த வகையில் இந்த மாநாட்டு மண்டபம் கடந்த இரண்டு வருடங்களில் பயன்படுத்தப்படவேயில்லை.

இவற்றை பார்க்கும் மக்கள் சாபமிடுகின்றார்கள். நாட்டில் இன்று வித்தியாசமான ஓர் அரசியல் கலாசாரம் காணப்படுகின்றது.

வரலாற்றில் முதல் தடவையாக இரண்டு பிரதான அரசியல் கட்சிகளும் இணைந்து செயற்படுகின்றன.

சிங்கள பௌத்த மக்களின் உரிமைகளை உறுதி செய்வது போன்றே சிறுபான்மை மக்களின் உரிமைகளையும் உறுதி செய்யக்கூடிய வகையில் அரசியல் அமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

சிலர் பௌத்த மதத்திற்கான முக்கியத்துவம் இல்லாமல் செய்யப்படவுள்ளதாக குற்றம் சுமத்துகின்றனர்.

அவ்வாறு ஒருநாளும் நடக்கப் போவதில்லை, பௌத்த மதத்திற்கு வழங்கப்படும் முன்னுரிமை புதிய அரசியல் அமைப்பில் மேலும் வலுப்படுத்தப்படும் என லக்ஸ்மன் கிரியெல்ல மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

# கல்முனை கரையோர மாவட்டத்தை தனியான மாவட்டமாக ஏற்கவும்

## இல்லையேல் பதவியைத் துறப்பேன்—ஹரிஸ்

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை கரையோர மாவட்டத்தை தனியான மாவட்டமாக ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் தான் பிரதியமைச்சர் பதவியை இராஜினாமா செய்யப் போவதாக விளையாட்டுத்துறை பிரதியமைச்சரான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதித் தலைவர் எச்.எம்,எம். ஹரிஸ் தெரிவித்துள்ளார்.

கல்முனை மாநகர முதல்வரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

கல்முனை கரையோர மாவட்டத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. புதிய அரசியலமைப்பு திருத்தத்திற்கு எதிராக வாக்கை பயன்படுத்தப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.



கல்முனை கரையோர மாவட்டம் என்பது அம்பாறை மாவட்ட முஸ்லிம் மக்களின் நீண்டகால கோரிக்கையாகும்.

அமைச்சர் சம்பிக்க ரணவக்க எதிர்க்கின்றார் என்பதற்காக முஸ்லிம் மக்களின் உரிமைகளை குழி தோண்டி மூட இடமளிக்க முடியாது.

அம்பாறை மாவட்டத்தில் 70 வீதம் தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். எனினும் மாவட்டத்தை சிங்கள அதிகாரிகளே நிர்வகித்து வருகின்றனர் எனவும் பிரதியமைச்சர் ஹரிஸ் தெரிவித்தார். (இ-10)

# மினி சூறாவளியால் மொறட்டுவையில் 30வீடுகள் சேதம்

மொறட்டுவை, கொரளவெல்ல பிரதேசத்தில் நேற்று வெள்ளிக்கிழமை காலை வீசிய மினி சூறாவளி காரணமாக, சுமார் 30 வீடுகள் சேதமடைந்துள்ளன. அத்துடன், அப்பிரதேசத்தின் மின்சார கட்டமைப்பும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், மின் விநியோகமும் துண்டிக்கப்பட்டுள்ளது. சம்பவத்தை அடுத்து, அப்பிரதேசத்துக்குச் சென்ற இடர் முகாமைத்துவ



மத்திய நிலைய அதிகாரிகள், பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கியுள்ளதுடன், மின்விநியோகத்தை மீண்டும் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு, மின்சார சபை அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-10)

# ஜனாதிபதி மைத்திரியை விமர்சனம் செய்தோருக்கு வேட்புமனு இல்லை

## மகிந்த அறிவிப்பு

(கொழும்பு)

கட்சியையும் கட்சியின் தலைவருமான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும் விமர்சனம் செய்தோருக்கு வேட்புமனு வழங்கப்படாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் மகிந்த அமரவீர இதனைத் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு அவர் இதனைத் தெரிவித்தார். கட்சியையும், கட்சித் தலைவரையும் விமர்சனம் செய்த முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் எவருக்கும் எதிர்வரும் தேர்தலில் வேட்புமனு வழங்கப்படாது.

இவ்வாறானவர்களுக்கு பதிலாக புதிய நபர்களுக்கு இம்முறை வேட்பு மனு வழங்கப்படும்.

சுதந்திரக் கட்சியின் சார்பில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட திறமையான படித்த இளையவர்கள் பலர் நேர்முகத் தேர்வுகளில் ஆர்வமாக பங்கேற்று வருகின்றனர்.

நாள் ஒன்றுக்கு மூன்று உள்ளூராட்சி மன்றங்களுக்கான நேர்முகத் தேர்வுகள் நடத்தப்படுகின்றன. ஒரு மாத காலத்திற்குள் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்பாளர் தெரிவு நடவடிக்கைகள் பூர்த்தியாகும்.

எதிர்வரும் ஆண்டில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினை வெற்றியீட்டச் செய்யக் கூடிய திறமையான குழுவொன்றை தேர்தலில் நிறுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

# இராசி பலன்

16.07.2016
(ஆடி 01, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
துவாதசி பின்னிரவு 3.46 மணிவரை
அனுசம் பிற்பகல் 12.39 மணிவரை
சுபநேரம் 3.00-4.30 மணிவரை
இராகுகாலம் 9.00-10.30 மணிவரை
ஆடிப்பிறப்பு

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>அச்சுவினி, பரணி | | சூரி<br>சுக்<br>புத |
| | | | குரு<br>ராகு |
| | சனி<br>செவ்<br>சந் | | |

**மேடம்:** மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், மற்றவர்களுக்காக பொறுப்புச் சொல்வதை தவிர்ப்பது நல்லது, உடல்நலனில் கவனம் தேவை, வேலைச்சுமை கூடும்.

**இடபம்:** பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**மிதுனம்:** உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், கடன்களை தீர்க்கும் சிந்தனை மேலோங்கும், வியாபார விருத்தியுண்டு, பகைவர்கள் விலகுவர், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும்.

**கடகம்:** தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், தனவரவு திருப்தி தரும், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**சிம்மம்:** உறவினர்கள் வழியில் உதவிகள் கிடைக்கும், சுப செய்திகள் வந்து சேரும் நாள், மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம், வாகன சுகமுண்டு.

**கன்னி:** உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், தொழிலில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், வழிபாடு மகத்துவம் தரும், போசன சுகமுண்டு.

**துலாம்:** புதிய பாதை புலப்படும் நாள், பொருளாதார நிலை உயரும், பெரிய மனிதர்கள் வீடு தேடி வருவர், பொதுவாழ்வில் புகழ் கூடும் நாள், எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**விருச்சிகம்:** பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், உறவினர் பகை அகலும், எண்ணங்கள் எளிதில் நிறைவேற அம்பிகையை வழிபட வேண்டிய நாள்.

**தனுசு:** அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், அமைதிக் குறைவுகள் ஏற்படலாம்.

**மகரம்:** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**கும்பம்:** என்றோ நடக்கவிருந்த நல்ல காரியமொன்று இன்று நடைபெறலாம், அன்பு நண்பர்கள் ஆதரவு தர முன்வருவர், புதிய முயற்சிகள் கைகூடும்.

**மீனம்:** தேகநலன் சீராகும், சொத்துத் தகராறுகள் நல்ல முடிவுக்கு வரும், மறதியால் விட்டுப் போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள்.

# தமிழ் மக்களைக் கொன்று குவித்து பேய்களாக்கியது பேரினவாத அரசே

## அனந்தி சசிதரன் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

***தமிழ் மக்களைக் கொன்று குவித்து பேய்களாக்கியது மத்தியில் உள்ள பேரினவாத அரசு தான். அந்த அரசில் அங்கம் வகித்துக்கொண்டு, ஓமந்தையை பேய்கள் உலாவரும் இடமென்று கிராமிய பொருளாதார அமைச்சர் ஹரிசன் விமர்சிக்க முடியாது. எமது மக்களின் அபிவிருத்தியை தீர்மானிப்பதற்கு அவருக்கு எந்த அருகதையும் இல்லை என வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.***

மத்திய அரசினால் பொருளாதார மத்திய நிலையத்திற்கான திட்டம் ஒன்று வடக்கு மாகாணத்திற்கு வழங்கப்பட்டு அதனை தாண்டிக்குளத்தில் அமைக்குமாறும் அறிவுறுத்தியிருந்தனர். எனினும் தாண்டிக்குளத்தில் அமைக்கப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்த முதலமைச்சர் தலைமையிலான வடக்கு மாகாண சபையின் பெரும்பான்மை உறுப்பினர்கள் அதனை ஓமந்தையில் அமைக்குமாறும் அறிவுறுத்தியிருந்தனர்.

இது தொடர்பில் மாற்றுக் கருத்துக்கள் ஏற்பட, பொருளாதார மத்திய நிலையம் அமைப்பது தொடர்பில் நாடாளுமன்ற மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களிடையே நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பில் ஓமந்தையே வெற்றிபெற்றது. இதனையடுத்து ஓமந்தையிலேயே பொருளாதார மத்திய நிலையம் அமையும் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அறிவித்திருந்தார்.

முதலமைச்சரது இந்த அறிவிப்பை அடுத்து மத்திய அமைச்சின் கிராமிய பொருளாதார அமைச்சர் பி.ஹரிசன், மக்கள் நடமாட்டம் இல்லாத பேய்கள் உலாவரும் இடத்தில் எந்தவொரு கட்டடத்தையும் கட்ட முடியாது எனவும் வவுனியா நகரிலிருந்து இரண்டு கிலோமீற்றர் தூரத்தில் தான் பொருளாதார வலயம் அமைய வேண்டும் எனவும், இல்லாவிட்டால் நிதி திறைசேரிக்கு திரும்பிவிடும் எனவும் கூறியிருந்தார்.

இது தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே வடக்கு மாகாண சபை உறுப்பினர்



அனந்தி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமைச்சர் ஹரிசன் ஓமந்தையை எவ்வாறு பேய்கள் வாழும் இடமென்று கூற முடியும்? தமிழ் மக்களை தமது அரசு கொன்று குவித்ததனால் ஓமந்தையில் பேய்கள் உலாவுகின்றன என அமைச்சர் கூறுகின்றாரா?

ஓமந்தையிலும் மக்கள் தான் வசிக்கின்றனர். இதற்கு அண்டி பொருளாதார மத்திய நிலையம் அமையுமாக இருந்தால், யுத்தத்தினாலும், யாரும் கண்டுகொள்ளாத நிலையாலும் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் ஓரளவிற்கு அபிவிருத்தியை எதிர்நோக்குவார்கள். ஆகவே அமைச்சர் ஹரிசன் தேவையற்ற கருத்துக்களை கூறுவதனை தவிர்த்து, வடக்கு மக்களின் பெரும்பான்மை அரசியல் தலைமைகள் கூறுவதை ஏற்றுக்கொண்டு அதன்படி நடந்து கொள்வதே அமைச்சர் ஹரிசனுக்கு நல்லது. அதனை விடுத்து பேய்கள், பிசாசுகள் என எம்மை வர்ணித்தால் அவர் வடக்கு வருவதற்கு சிரமப்பட வேண்டியிருக்கும் என எச்சரித்தார் அனந்தி சசிதரன். (இ-4)

## வரிச்சுமைக்கு எதிராக யாழில் துண்டுப்பிரசுரம்




புதிய அரசினால் மக்கள் மீது சுமத்தப்படும் வரிச்சுமைக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணியினால் யாழில் நேற்றைய தினம் துண்டுப்பிரசுர விநியோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நேற்று காலை 9 மணியளவில் யாழில் நடைபெற்ற இந்த துண்டுப்பிரசுர விநியோகத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க கலந்து கொண்டு துண்டுப்பிரசுரங்களை வழங்கியிருந்தார்.

யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் நடைபெற்ற இந்த துண்டுப்பிரசுர விநியோகத்தின் போது, யாழில் உள்ள அனைத்து தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோருக்கு வற்வரி அதிகரிப்பினால் ஏற்பட்டுள்ள சுமைகள் தொடர்பில் விளக்கமளிக்கும் துண்டுப்பிரசுரங்களும் கையளிக்கப்பட்டன. இதன்போது ஜே.வி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் சந்திரசேகரமும் கலந்து கொண்டிருந்தார்.

கடந்த மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் குடும்ப ஆட்சியை போன்று மைத்திரிபால-ரணில் விக்கிரமசிங்க கூட்டு அரசாங்கமும் புதிய சுற்றில் வரிகளை அதிகரித்து மீண்டும் மக்களின் கழுத்தை நெரிக்க ஆரம்பித்துள்ளது. கடந்த வரவு-செலவு திட்டத்தில் நிறைவேற்றப்படாத வற்வரியை 15 வீதத்தால் அதிகரித்து கடந்த மே மாதம் இரண்டாம் திகதி முதல் அமுல்படுத்தியுள்ளது.

ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்படும் ஊழல் மோசடியை மக்கள் மீது திணிப்பதே தமது கடமையென ஆட்சியாளர்கள் நினைக்கின்றனர். வரலாற்றில் பச்சை நிறத்தாலும் நீல நிறத்தாலும் பெற்றுக்கொண்ட சகல கடன்களையும் நிறபேதமின்றி, இனபேதமின்றி மக்கள் செலுத்த வேண்டுமென நினைக்கின்றனர். தற்போதைய கூட்டு அரசாங்கமும் இந்த வரி அமுல்படுத்தலை நியாயப்படுத்தி இருப்பது அவ்வாறாகும்.

பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையால் நிறைவேற்றப்பட்ட 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தின் முன்மொழிவானது 8 வீதம் மற்றும் 11 வீதமான வற்வரியாகும். இது எமது எதிர்ப்பின் மத்தியில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி மற்றும் ஐ.தே.கவின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது. இவ்வாறு பொது மக்கள் மீது சுமத்தப்படும் தேவையற்ற வரி சுமைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தே துண்டுப்பிரசுர போராட்டம் இடம்பெற்றுள்ளது.

அரச தரப்பின் வயிற்று பிழைப்புக்காக மக்கள் மீது வரிச்சுமைகளை ஏற்றுவதற்கு எதிராக அணிதிரளும்படி இலங்கை வாழ் மக்களிடம் நாம் கேட்டுக் கொள்கின்றோம் என அந்த துண்டுப்பிரசுரத்தில், தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரிசுமையால் ஏற்படும் பாதிப்புக்கள் எவற்றினால் வரிச்சுமைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன என விளக்கமளிக்கும் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் துண்டுப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. (இ-4)




## எழுகதிர் கலை மன்ற மாபெரும் கலை விழா

(கரணவாய்)

எழுவைதீவு-எழுகதிர் கலை மன்றம் நடத்தும் மாபெரும் கலை விழா இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு எழுவைதீவு புனித தோமையார் கடற்றொழிலாளர் சங்க பொது விளையாட்டு மைதானத்தில் கலை மன்றத்தைச் சேர்ந்த அ.மேரி அஜந்தா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் கே.என். விந்தன் கனரட்ணம், ஊர்காவற்றுறை பிரதேச சபை செயலாளர் சு.சுதர்சன் ஊர்காவற்றுறை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் கா.நிருபா, இலங்கை மின்சார சபை மின் அத்தியட்சகர் சி.கிருஷாந்தன், தீவக பிரதிக் கல்விப்பணிப்பாளர் ச.பாஸ்கரன் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-60)

## விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வடமாகாண வருடாந்த விளையாட்டு விழா இன்று 16 ஆம் திகதி காலை 8 மணிக்கு யா/ சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம் பெறும். (இ)

## புதிய தலைமுறையை உருவாக்க ‘பண்பாட்டு மறுமலர்ச்சிக்கூடம்’

### கலாநிதி சிதம்பரநாதன் தெரிவிப்பு



தமிழர்களின் அடையாளங்களைப் பேணிக் கொள்ளவும், தனித்துவமான தன்னம்பிக்கை உடைய ஒரு புதியதலைமுறையை உருவாக்கவும் அரங்க செயற்பாட்டுக் குழுவினால் “பண்பாட்டு மறுமலர்ச்சிக் கூடம்” ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி க.சிதம்பரநாதன் தெரிவித்துள்ளார்.

அரங்கசெயற்பாட்டுக் குழுவினால் புதியதொரு சமூகத்தை உருவாக்கும் வேலைத் திட்டம் தொடர்பாக அரங்க செயற்பாட்டு குழு கூடத்தில் நேற்றையதினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தத்தில் நேரடியாகப் பாதிக்கப்பட்ட மக்களின், போராளிகளின் சமூக, பொருளாதார.பண்பாட்டுவாழ்வு இன்றும் நெருக்கடிக்குள்ளானதாகவே இருக்கிறது. மக்களுக்கிடையேயான உறவுகளிலும் பிரதேசங்களுக்கிடையேயான தொடர்புகளிலும் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

இதனால் பண்பாட்டுத் தளத்தில் ஒருமக்கள் இயக்கமாகச் செயற்பட்டுப் புதிய பண்பாட்டைக் கட்டியெழுப்பி, ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்க வேண்டியது சமூக அக்கறை கொண்டவர்கள் அனைவரதும் பணியாகிறது. இதற்காக “பண்பாட்டு மறுமலர்ச்சிக் கூடம்” என்றதொரு பண்பாட்டு வேலைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளோம்.


இதன் அடிப்படையில் முதலாவது பண்பாட்டு மறுமலர்ச்சிக்கூடத்தினை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கும், நல்லூருக்கும், நகரத்திற்கும் அண்மிய பகுதியில் நாம் அமைத்துள்ளோம். இதன் தொடர்ச்சியாக தமிழர் தாயகப் பிரதேசங்களின் பல்வேறு இடங்களிலும் இப் பண்பாட்டு மறுமலர்ச்சிக் கூடங்கள் அமைக்கப்படும்.

பண்பாடு தொடர்பான தேடல் மிகுந்த ஆர்வலர்களுக்கு உதவும் வகையில் களப்பயணத்தைஉள்ளடக்கிய பண்பாட்டுச் சுற்றுலாக்கள், பண்பாட்டு மறுமலர்ச்சிக் கூடத்தால் ஒழுங்கு செய்யப்படும். தமிழர் பண்பாடு தொடர்பான ஆய்வுகளைச் செய்யும் மாணவர்கள், ஆய்வாளர்கள் இலங்கையில் தமது களப்பணிகளை மேற்கொள்வதற்கான உதவி களையும் இப் பண்பாட்டு மறுமலர்ச்சிக் கூடம வழங் கும்.இத் திட்டம் தொடர்பாக மேலதிக தகவல்கள் தேவைப்ப டின் 077 314 6188 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளமுடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# உலகின் அதிவேகப் புகையிரத பரீட்சார்த்த பயணம் சீனாவில்



## ஆய்வாளர்கள் சாதனை



உலகிலேயே அதிவேக புகையிரதத்திற்கான முன்னோட்டம் ஒன்று நேற்று வெள்ளிக்கிழமை காலை சீனாவில் இடம்பெற்றுள்ளது. மணிக்கு 420 கிலோமீற்றர் வேகத்தில் பயணிக்கக் கூடிய புதிய புகையிரதம், சீன ஆராய்ச்சியாளர்களால் மேற்கொள்ளப்படும் புதிய சா்தனையாக அமைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் வர்ணித்துள்ள இந்த கடுகதி புகையிரதமானது மணிக்கு 420 கிலோமீற்றர் வேகத்தில் பயணிக்கக்கூடியது என்றும் சீனாவின் மத்திய மாகாணத்தின் ஜங்ஜாவ் நகரை ஒரு மணிநேரத்தில் கடக்கும் சக்தி கொண்டது என்றும் குறிப்பிடப்படுகின்றது.

இதேவேளை, இதேவகையான இரண்டு அதிவேக புகையிரதங்கள் ஒன்றை ஒன்று கடந்து செல்லும் போது இரண்டினதும் கடந்துசெல்லும் வேகம் மணிக்கு 840 கிலோமீற்றராக அமையும் என்றும் இது விமானம் ஒன்றின் வேகத்திற்கு நிகரானது என்றும் ஆய்வாளர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த பரீட்சார்த்த நடவடிக்கையினால் பெறப்பட்ட முடிவுகள் இதுவரை இறுதி செய்யப்படவில்லை என்றும், அவை ஆய்வாளர்களால் கணிப்பிடப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

உலகின் சிறந்த முயற்சியான இது எதிர்கால ஆராய்ச்சியாளர்களுக்கு ஒரு முழுமையான முதல்தர தகவல் மூலமாக அமையும் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (இ-10)


## யாழ்ப்பாணம் மாநகரசபை வீதிக்குப் பெயர் சூட்டுதல்

மக்களின் வேண்டுகோளிற்கிணங்க சிவப்பிகாசம் வீதி 3 ஆம் ஒழுங்கையினை **வைரவர் கோயில் ஒழுங்கை** எனவும் சூரியவெளி மத்தியில் உள்ள வீதியினை **அருட்தந்தை பெனட் அடிகளார் வீதி** எனவும் பெயர் சூட்டப்படவுள்ளமையால் இதற்கான பொதுமக்களின் கருத்தினை எதிர்பார்க்கின்றோம். மக்களின் கருத்துக்களை/ அபிப்பிராயங்களை இன்றிலிருந்து 14 நாட்களுக்குள் ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

ஆணையாளர்,
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

(c5197)


## தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை குறித்து பொய்க்குற்றச்சாட்டுக்கள்

தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை தொடர்பில் உலகம் முழுவதும் பொய்க் குற்றச்சாட்டுக்கள் பரப்பப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த செயலை இலங்கையிலுள்ள பெண் வர்த்தகர் ஒருவரும், அவரது குழுவினரும் முன்னெடுத்து வருவதாக மிருக வதைக்கு எதிரான சங்கம் தெரிவித்துள்ளது.

மிருகக்காட்சிச்சாலையின் அமைவிடம் பெறுமதியான இடமென்பதால் அதனை அபகரிக்கும் நோக்கில், இங்கு மிருகவதை இடம்பெறுவதாக குறிப்பிட்டு போலியாக தயாரிக்கப்பட்ட ஒளிப்பதிவினையும் குறித்த பெண் இணையங்களில் பதிவேற்றி வருவதாகவும் சங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர் சாந்த ஜயவீர தெரிவித்துள்ளார்.

அத்துடன் குறித்த பெண்ணுக்கு நல்லாட்சியின் பிரபல அரசியல்வாதியின் செல்வாக்கு காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் தெஹிவளை மிருகக்காட்சிச்சாலையில் இருந்து திருட்டுத்தனமாக வெளிநாடுகளுக்கு மிருகங்கள் கடத்தப்படுவதாகவும் குறித்த பெண் குற்றச்சாட்டுகளை பரப்பி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே குறித்த மிருகக்காட்சிச்சாலை தொடர்பில் பொய்த் தகவல்களை பரப்பி அரசாங்கத்தினதும், உலக நாடுகளினதும் கவனத்தை திரும்ப வைத்து மிருகக்காட்சிச்சாலையினை மூடுவதே இவர்களுடைய நோக்கமாகும். இது தொடர்பான உண்மையான அறிக்கையை இம்மாதம் 22ஆம் திகதி வனஜீவராசிகள் அமைச்சிடம் கையளிக்கவுள்ளதாகவும் சங்கத்தின் உறுப்பினர் தெரிவித்தார். (இ-10)


## காணி விற்பனை

K.K.S.றோட்டுக்கு அண்மையில் சபாபதி லேன் தலையாளியில் 4 1/2 பரப்பு காணி 12' பாதையுடன் உண்டு.
தொடர்பு:
075 233 0392

(5217)



**September 24th & October 29th 2016 இல்**
**யாழ்ப்பாணத்தில் நடைபெறும் பரீட்சைகளுக்கு ஆயத்தப்படுத்தும் வகுப்புக்கள்**



16 - Practice Tests with Explanations
Daily Writing Practice
Daily Speaking and Listening Practice
It is an Inovative Training Programme

**IELTS**



September 24th & October 29th 2016 ஆகிய திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் IELTS பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் விசேட வகுப்புக்கள் திங்கள் தொடக்கம் வியாழன் வரை காலை 8.30 மணி முதல் 11.30 மணிவரை நடைபெறும்.

**OUR TARGET IS BAND : 9**

IELTS பாடங்களைப் படிப்பிக்கும் அதேவேளை Grammar and Vocabulary போன்றவற்றை புதியதோர் ஆங்கிலப் பாடநெறி மூலம் போதிக்கப்படும்.
**Pearson English Course Level B2**

**வகுப்புக்கள் – 18.07.2016 ஆரம்பம்**

**COURSE SCHEDULE**

| Mon, Tues, Wed, Thus | Saturday & Sunday |
|---|---|
| 60 Hours | 60 Hours |
| 8.30 - 11.30, 5.00 - 7.00 | Time: 8.30 - 12.00 |

**IELTS** **LIFE SKILLS** **A1, B1**

March, April, May, June - 2016 ஆகிய மாதங்களில் நடைபெற்ற A1, B1 பரீட்சைகளில் எமது நிறுவனத்தில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் 100% சித்தியடைந்துள்ளனர் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம். அடிப்படையில் இருந்து ஆங்கிலம் 2 மாதங்களில் பூரணமான அறிவைப் பெற்று பரீட்சையில் சித்தியடைய வைப்போம்.

IELTS Registration Centre for British Council

**BRITISH COLLEGE OF ENGLISH**
No. 192, Navalar Road, Jaffna.
(பெருமாள் கோயிலுக்குச் சமீபமாக)
Tel : 021 222 0384 , 077 880 3887



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா:24<br>தகைமை/தொழில்:BSc/ QSஓமான்<br>தொ.இ: B/6086 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 31<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:HNDA/அரசதொழில்<br>தொ.இ: G/5762 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 27சூரிசெவ் 6 இல்<br>உயரம்: 168cm<br>தகைமை/தொழில்:BSc, Phd/<br>பொறியியலாளர் லண்டன்<br>தொ.இ: B/6087 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 85 செவ் 7 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BSc, MSc/<br>அரசதொழில்<br>தொ.இ: G/5767 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 23<br>உயரம்:5'8"<br>தகைமை/தொழில்:O/L/சொந்த<br>தொழில் பிரான்ஸ் NOT PR<br>தொ.இ: B/6088 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 59 செவ் 1 இல்<br>உயரம்: 152cm<br>தகைமை/தொழில்:A/L/தனியார்<br>தொழில்<br>தொ.இ: G/5773 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 104<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:A/L/<br>அரசதொழில்<br>தொ.இ: B/6089 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்:அவிட்டம்<br>கி.பா: 3.5<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:B.COM, CIMA<br>கணக்காளர்<br>தொ.இ: G/5775 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005,021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# நீதிமன்ற அபராதங்கள்

கிளிநொச்சிப்பகுதியில் பாடசாலைக்கு பிள்ளைகளை அனுப்பாது அவர்களை சட்டவிரோத செயற்பாடுகளுக்குப் பயன்படுத்திய தாய் ஒருவரை எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் மதுபோதையில் பிள்ளைகளை துன்புறுத்திய தந்தையை பிணையில் செல்லுமாறும் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சி கண்டாவளை பிரதேசசெயலர் பிரிவின் கீழ் உள்ள பரந்தன் சிவபுரம் பகுதியில் பாடசாலைகளுக்குச் செல்லாத சிறுவர்களை கற்றல் செயற்பாடுகளில் மீள இணைத்துக் கொள்ளும் பொருட்டு கண்டாவளைப்பிரதேச செயலகத்தின் சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள், மாவட்ட சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள், சிறுவர் அபிவிருத்தி அதிகார சபை என்பன இணைந்து நேற்று முன்தினம் மேற்கொண்ட விசேட நடவடிக்கையின் போது பாடசாலைகளுக்குச் செல்லாத 16 சிறுவர்கள் பிடிக்கப்பட்டு அன்றையதினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து நான்கு சிறுவர்களை சான்று பெற்ற நன்னடத்தை பாடசாலையில் தங்கவைக்குமாறும் ஆறு சிறுவர்களை சிறுவர் இல்லங்களில் இணைக்குமாறும் ஏனைய ஆறு சிறுவர்களை அவர்களது பெற்றோர்கள் கடுமையாக எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பாது அவர்களை சட்டவிரோத செயற்பாடுகளுக்கு பயன்படுத்திய தாய் ஒருவரை எதிர்வரும் 28ஆம் திகதி வரைக்கும் விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. அத்துடன் மதுபோதையில் பிள்ளைகளை துன்புறுத்திய குற்றச்சாட்டுடன் தொடர்புபட்ட தந்தையை பிணையில் செல்வதற்கும் நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பின்தங்கிய கிராமங்களில் சிறுவர்கள் பாடசாலைகளுக்கு அனுப்பப்படாமல் அவர்களை சட்டவிரோத செயற்பாடுகளுக்கு பயன் படுத்துதல், சிறுவர் தொழிலாளர்களாக பயன்படுத்துதல், துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்குதல் ,போதைப்பொருள் விற்பனைகளுக்கு பயன்படுத்துதல் போன்ற பல்வேறு குற்றங்களுக்கு இவ்வாறு பயன்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இவற்றை தடுத்து சிறுவர்களை பாதுகாக்கும் வகையில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் அது சார்ந்த திணைக்களங்கள் நீதிமன்ற ஆலே சனைகளுக்கு அமைவாக பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

இதன் அடிப்படையில் கிளிநொச்சி சாந்தபுரம் பகுதியில் கடந்த வாரம் பாடசாலைகளுக்குச் செல்லாத பதினேழு சிறார்களும் கடந்த திங்கட்கிழமை பொன்னகர், இந்துபுரம் ஆகிய பகுதிகளில் பதினாறு சிறுவர்கள் பிடிக்கப்பட்டு இவ்வாறு சிறுவர் இல்லங்களிலும் சிறுவர் நன்னடத்தை பாடசாலைகளிலும் ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲

கிளிநொச்சி நகரில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் மாணவரை துஷ்பிர யோகத்திற்கு உள்ளாக்கிய ஆசிரியரை எதிர்வரும் 28ஆம் திகதி வரைக்கும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி நகரில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் கல்வி கற்பிக்கின்ற ஆசிரியர் ஒருவர் அதே பாடசாலை ஒன்றில் கல்வி கற்று வருகின்ற மாணவரை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கியதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை அடு த்து குறித்த ஆசிரியர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த ஆசிரியரை எதிர்வரும் 28ஆம் திகதி வரைக்கும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (2-15)

# 'அம்மாச்சி' உணவகம் கிளியில் திறந்துவைப்பு



(மல்லாவி)

வடக்கின் பாரம்பரிய உணவகமான "அம்மாச்சி" உணவகம் கிளிநொச்சி மாவட்ட விவசாய திணைக்கள வளாகத்தில் திறந்து வைக்கப்பட்டது.

வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனினால் நேற்று முற்பகல் 10 மணியளவில் குறித்த உணவகம் மேற்படி வளாகத்தில் திறந்து வைக்கப்பட்டது.

பாரம்பரிய உணவுகள் விற்பனை செய்யப்படுவதற்காக அமைக்கப்பட்ட இவ்வுண வகம் கிளிநொச்சி மாவட்டத்தில் சேவைக்காக திறந்து வைக்கப்பட்டது.

இயற்கை உணவு வகைகளை விற்ப னை செய்யும் நோக்குடன் ஐந்து மில்லியன் ரூபா செலவில் குறித்த உணவகம் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இவ்வாறு உணவகங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளதுடன், யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய மாவட்டங்களில் உண வகத்திற்கான நிர்மாணப் பணிகள் இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்வில் அமைச்சர் பொ.ஐங் கரநேசன், வடக்கு மாகாண சபை உறுப் பினர்களான பசுபதிப்பிள்ளை, தவநாதன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந் தனர். (2-15)






முள்ளியவளை கல்யாணவேலவர் ஆலய அறநெறி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப்போட்டி கடந்த 12 ஆம் திகதி முன்பள்ளி முன்றலில் நடைபெற்றபோது... (படம்:-வற்றாப்பளை செய்தியாளர்)



முல்லைத்தீவு மந்துவில் பகுதியில் ஒரு தேங்காயிலிருந்து மூன்று தென்னங்கன்றுகள் உருவாகியுள்ளன. புதுக்குடியிருப்பு மந்துவில் பகுதியில் வசிக்கும் கதிரேசு தேவராசா என்பவருடைய காணியில் நாற்றுப் போடப்பட்ட தேங்காயிலிருந்து மூன்று தென்னங்கன்றுகள் முளைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (படம்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

# நூல் அறிமுக விழா

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நண்பர்கள் வ்ட்டத்தின் ஆதரவில் வேதநாயகம் தபேந்திரனின் யாழ்ப்பாண நினைவுகள் பாகம்-03 எனும் நூல் அறிமுக விழா எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணி 37 நிமிடத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் மு/புதுக்குடியிருப்பு சுப்பிரமணிய வித்தியாசாலை அதிபர் க.செல்வ நாயகம் தலைமையில் நடைபெறும்.

நூல் அறிமுகவுரையை வவுனியா கலாசார உத்தியோகத்தர் பண்டிதர் வீ.பிரதீபன் ஆற்ற முதல் பிரதியை புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் ஓய்வு நிலை நிர்வாக அலுவலர் நல்லையா சிவதாஸ் நிகழ்த்துவார்.

நூல் ஆய்வுரையை வே. முல்லைதீபன் ஆற்றுவார்.ஏற்புரையை நூலாசிரியர் வேத நாயகம் தபேந்திரன் நிகழ்த்துவார். (2)

# காந்தி இல்லத்தில் ஆடிப்பிறப்பு நிகழ்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி காந்தி நிலையத்தின் ஏற்பாட்டில் ஆடிப்பிறப்பு நிகழ்வு இன்று சனிக் கிழமை காலை 9.30 மணிக்கு உருத்திரபுரம் காந்தி இல்லத்தில் நிலையத்தலைவர் ஆ.வடிவேலு தலைமையில் மகாதேவா ஆச்சிரம சுவாமிகள் ,ஸ்ரீ மத் கணேசானந்தா சுவாமிகள் கலந்து ஆசீர்வாதம் செய்து சிறப்பிக்கவுள்ளார்.

தமிழ் நாட்டில் இருந்து இயற்கை மருத்துவ சங்க இணைச் செயலாளர் மூ.சீ.தேவதாஸ் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (2)

# வன்னேரிக்குளத்தின் கீழ் 363ஏக்கரில் நெற்செய்கை

## நெற்களஞ்சியம் அவசியம்-விவசாயிகள் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, வன்னேரிக்குளம் கிராமத்தில் நெற்களஞ்சியசாலையை அமைத்துத் தருமாறு அக்கிராம விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்த 1953 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இக்கிராமம் கிளிநொச்சி நகரிலிருந்து 30 கிலோமீற்றர் தூரத்தில் காணப்படுகின்றது. இக்கிராமத்தில் தற்போது 500 வரையான குடும்பங்கள் வாழ்ந்து வருவதுடன், வன்னேரிக்குளத்தின் கீழ் 363 ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது.

இக்கிராமத்தில் உற்பத்தி செய்யப்படும் நெல்லைக் களஞ்சியப்படுத்துவதற்கான வசதி இல்லை. எனவே, களஞ்சியசாலையை அமைத்துத் தருவதுடன், நெல் உலர வைப்பதற்கான தளமொன்றையும் அமைத்துத் தருமாறும் இக்கிராம விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் சிறுபோகச் செய்கைக்கான கூட்டத்தை நடத்துவதற்காக இக்கிராமத்துக்குச் சென்ற மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம், வன்னேரிக்குளத்தின் உவர்ப் பரம்பலைத் தடுப்பதற்கும் குளத்தினை அபிவிருத்தி செய்து வன்னேரிக்குளத்தில் காணப்படுகின்ற அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாக கிராம மக்களிடமும் விவசாயிகளிடமும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (2)

# பசில் உட்பட மூவருக்கு எதிராக வழக்கு தாக்கல்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலின் போது ரூபா 33 மில்லியன் பெறுமதியான திவிநெகும அபிவிருத்தி நிலைய நிதியை தவறாகப் பயன்படுத்தியமை தொடர்பில் முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ உட்பட மூவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு சட்டமா அதிபர் நேற்று வழக்குத்தாக்கல் செய்துள்ளார்.

இந்த வழக்கை எதிர்வரும் மாதம் 30 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உள்ளதாக கொழும்பு உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது. (இ-10)



ஒளிரும் வாழ்வு புதுக்குடியிருப்பு மாற்று திறனாளிகள் அமைப்பின் அங்கத்தவர்கள் 8 பேருக்கு உலருணவுப் பொதிகள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன. இந்த நிகழ்வில் ஒளிரும் வாழ்வு அமைப்பின் தலைவர் ப.இராச குமார்,அமைப்பின் செயலாளர் இ. அம்பிகைபாலன் மற்றும் வள்ளிபுனம், தேவிபுரம் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் அங் கத்தவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். கனடா வாழ் அன்பர் ஒருவரின் நிதியுதவியில் வழங்கப்பட்டது.

(படம்:- மல்லாவிச் செய்தியாளர்)

# விசேட தேவையுடைய மாணவர்களுக்கு போட்டி

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வித் திணைக்கள விசேட தேவையுடைய மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டி -2016 எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் இ.ஆனோல்ட் கலந்து கொள்ளவுள்ளார்.சிறப்பு விருந்தினர்களாக கொழும்பு டெப்பிலிங் மெதடிஸ் திருச்சபை பிரதம இணைப்பாளர் அருட் தந்தை எஸ். எஸ். ஞானராஜாவும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளரும் வாழ்வகம் தலைவருமான ஆ.இரவீந்திரனும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ

# சிறுவர் நாடகப் போட்டி

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டுவடக்குமாகாண பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்படும் சிறுவர் நாடகப் போட்டி யாழ். மத்திய கல்லூரி அதிபர் சி.க. எழில் வேந்தன் தலைமையில் நாளை மறுதினம் 18ஆம் திகதிதிங்கட் கிழமை காலை 9 மணிக்கு றொமைன்குக் மண்டபத்தில் இடம் பெறும்.இதில் பிரதம விருந்தினராக குழந்தை ம. சண்முகலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார். (இ-10)

# வர்ண விருது வழங்கலும் விளையாட்டு வீரர்களை கௌரவப்படுத்தும் நிகழ்வும்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு இப் பாடசாலையின் முன்னாள் பல்துறை சார் விளையாட்டுச் சாதனையாளர்களை கௌரவிப்பதற்கு 200 ஆவது ஆண்டு விழாக்குழு தீர்மானித்துள்ளது.


மேற்படிசாதனையாளர்கள்வர்ண விருது வழங்கும் நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இதற்காக முன்னாள் விளையாட்டு வீரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப்படிவத்தை விளையாட்டுத் தலைவர் அல்லது பாடசாலை இணையத்தளம் http://www.jcc.lk/ மூலம் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 05.08.2016 வெள்ளிக்கிழமைக்கு முன்னர் விளையாட்டுத் தலைவர், யாழ். மத்திய கல்லூரி என்னும் முகவரிக்கு அல்லது gugan 125@gmail.com என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு 077 673 7598, 077 122 9545 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். மத்திய கல்லூரி அதிபர் கேட்டுள்ளார். (இ-2)

# தங்க உடை அணிந்து பிரபலமான புனே தொழிலதிபர் அடித்துக்கொலை



கடந்த சில ஆண்டுகளுக்கு முன் சுமார் ஒரு கோடி மதிப்புள்ள தங்க உடை அணிந்து ஊடக கவனத்தை பெற்றவர் புனேவை சேர்ந்த தொழிலதிபர் தத்தாபுகே.

புனே அருகே உள்ள பிம்ப்ரி என்ற இடத்தை சேர்ந்தவர் இவர். புனே நகர மாநகராட்சி உறுப்பினரான இவர் .ரூ.1.2 கோடி செலவில் 3.2 கிலோ தங்கத்தை உருக்கி, அதை அணிந்து 2013 ஆம் ஆண்டு புத்தாண்டை வரவேற்றார். இந்தப் புகைப்படமும் சமூக வலைத்தளங்களிலும் ஊடகத்திலும் பரவியதால், இந்தியா முழுவதும் பரவலாக தத்தா புகே அறியப் பட்டிருந்தார்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் இரவு நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்ளச் சென்ற போது அங்குள்ள கும்பலால், புகே அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் பிறந்த நாள் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுமாறு நண்பர் ஒருவர் அழைப்பின் பேரில் மகனுடன் திறந்த வெளி மைதானம் ஒன்றிற்கு சென்றதாக கூறப்படுகிறது. அப்போது 12 பேர் அடங்கிய கும்பல் புகே மீது கற்கள் மற்றும் கூர்மையான ஆயுதங்கள் கொண்டு தாக்குதல் நடத்தியதில் பலியாகியுள்ளார்.

இந்த சம்பவம் குறித்து உள்ளூர் பொலிஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். பணப் பரிவர்த்தனை தொடர்பான பிரச்சினையில் தொழிலதிபர் அடித்துக்கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர். இந்தக் கொலையில் தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். (இ-10)

# தங்கத்தாத்தா நினைவு விழா

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கமும் யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயத் தமிழ் மன்றமும் இணைந்து நடத்தும் தங்கத்தாத்தா நினைவு விழா எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் அமிர்தலிங்கம் பௌனந்தி கலந்து கொள்வார். இதில் மங்கல விளக்கேற்றல், அகவணக்கம், தமிழ்த்தாய் வாழ்த்து, தமிழ் மொழி வாழ்த்து இடம்பெறும்.

பாடசாலை அதிபர் இ.பசுபதீஸ்வரன் வரவேற்புரையினையும் முதன்மை விருந்தினர் தங்கத் தாத்தா எனும் பொருளில் சிறப்புரையினையும் நிகழ்த்துவார். தலைமையுரையும் இடம்பெறும். இன்றைய சமூகத்தை நெறிப்படுத்துவதற்கு இலக்கிய கல்வியே துணை செய்யும்,அறிவியல் கல்வியே துணை செய்யும் எனும் பொருளில் சொல்லாடுகளம் இடம்பெறும். யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு உறுப்பினர் சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல் நடுவராகப் பங்கேற்பார். (இ)

# வாழ்வில் உயர்மட்டத்தை அடைந்தாலும் கற்பித்த ஆசான்களை மறக்கக்கூடாது

## வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் மாணவர்களுக்கு அறிவுரை

(பனிக்கன்குளம்)

மாணவர்கள் வாழ்வில் எந்த உயர் மட்டத்திற்கு வந்தாலும் நமக்கு கற்பித்த ஆசான்களை மறக்கக்கூடாது.

அவர்களுக்கு கொடுக்க வேண்டிய மரியாதையை எப்போதும் கொடுக்க வேண்டும் என வடக்கு மாகாண போக்குவர த்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் அறிவுரை வழங்கினார்.

மன்னார் பேசாலை பற்றிமா மகா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் முற்பகல் 10.30 மணியளவில் வித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் கலந்துகொண்டார்.

நிகழ்வில் தனது உரையில், தற்போதைய மாணவர் சமூகம் சில காரியங்களில் தவறு களை விடுவதாகவும், குறிப்பாக சில மாணவர்கள் ஆசான்களை மதிக்காமல் நடக்கும் தன்மை மாற்றப்பட வேண்டும், எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் நீதியாக நடக்கின்ற ஆசான்கள் மாணவர்களது நன்மைக்கே அவர்களைத் தண்டிக்கின்றார்களே தவிர மாறாக அவர்களது சுயநலத்துக்காக ஒருபோதும் மாண வர்களைத் தண்டிப்பதில்லை என்பதை புரிந்துகொள்ளவேண்டும்.

அத்தோடு மாணவர்களாகிய நீங்கள் எப்போதும் வாழ்வில் எந்த உயர்மட்டத்திற்கு வந்தாலும் நமக்கு கற்பித்த ஆசான்களை மறக்கக் கூடாது. அவர்களுக்கு கொடுக்க வேண்டிய மரியாதையை எப்போதும் நாம் கொடுக்க வேண்டும் என்பதை மனதிலே இருத்திக் கொள்வதோடு, தற்போது பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் பெறுபேறுகள் வரும்போது நல்ல பெறுபேறுகளை பெற்றவர்கள் தலைக்கனம் அடைந்தவர்களாக நடக்காமலும், அதேவேளை குறைந்த பெறுபேறுகள் எடுப்பர்கள் மனமுடைந்து விடாமல் ஒரு கதவு மூடப்பட்டால் மற்றைய கதவுகள் உங்களுக்காக திறக்கப்படும் என்ற நம்பிக்கையோடு நடந்துகொள்ளுங்கள்.

ஆகவே இக் கருத்தை மனதில் இருத்திக் கொண்டு இந்த ஆண்டு உயர்தர பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் அனைத்துத் துறைகளிலும் முதலாவது இடத்தை பெறும் மாணவர்களது உயர்கல்விக்கு தான் உதவி செய்வேன் என்று தெரிவித்தார்.

அத்தோடு தனது ஆசிரியரும் கல்லூரியின் அதிபருமான அருட் சகோதரர் ஸ்டனிஸ்லஸ் தம்மிடம் வைத்துள்ள கோரிக்கையான பாடசாலைக்கு ஒரு ஓகன் வாங்குவதற்கான விண்ணப்பத்தை தாம் ஏற்றுக்கொள்வதாகவும், சுமார் 2 இலட்சம் பெறுமதியான தரமானதொரு இசைக்கருவி(ஓகன்) வாங்கித் தருவதாகவும் தெரிவித்தார்.

எதிர்கால எமது சமூகமான நீங்கள் ஒவ்வொருவரும் மதங்களை கொண்டு பிளவுகள் வராத வண்ணமாக சிறந்த எடுத்துக்காட்டுள்ள சமூகமாக திகழவேண்டும் என மாணவர்களிடம் கோரிக்கை விடுத்தார். (2-281)

# விபுலானந்தர் விழா

மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையுடன் இணைந்து அகில இலங்கை இந்து மாமன்றம் நடத்தும் விபுலானந்தர் விழா நாளை 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 3 மணிக்கு நல்லூர் கோவில் வீதியில் அமைந்துள்ள துர்க்கா மணி மண்டபத்தில் இடம்பெறும். இந்து ஆராய்ச்சி நிலைய இயக்குநரும் இந்து மாமன்ற உப தலைவரும் ஆகிய கலாநிதி. ஆறு திருமுருகன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் ஆசியுரையினை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளும் , வேதபாராயணத்தை அகில இலங்கை இந்து மாமன்ற ஆலோசகர் சிவஸ்ரீ கு. வை. க. வைத்தீஸ்வரக் குருக்களும் , ஆரம்ப உரையினை அகில இலங்கை இந்து மாமன்ற தலைவர் கந்தையா நீலகண்டனும் வழங்கவுள்ளனர். சிறப்புப் பேருரைகளை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதி அதிபர் உள்ளக் கமலம் எனும் பொருளிலும் , யாழ். பல்கலைக் கழக இந்து நாகரிகத் துறை விரிவுரையாளர் சி. ரமணராஜா அன்பெனப்படுவது எனும் பொருளிலும் திருமதி சிவானந்த ஜோதி ஞான சூரியம் சைவசித்தாந்த நோக்கில் விபுலானந்தரின் சிந்தனைகள் எனும் பொருளிலும் மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை செயலாளர் சா. மதிசுதன் இளம் சந்ததியினரின் நல்வாழ்வுக்கு விபுலானந்தரின் அறிவுரை கள் எனும் பொருளிலும் உரையாற்றவுள்ளனர். (இ

# அரசாங்கம் நல்லாட்சிக்கான தனது விருப்பினை நிரூபிக்குமா?

(நேற்றைய தொடர்ச்சி...)

இந்தக் கால நீடிப்பின் (இழுத்தடிப்பு) காரணமாக இணைந்த எதிர்க்கட்சிகளின் புத்திசாலிகள் எனப்படுவோரும் திறைசேரியின் இடைத்தரகர்கள் போன்ற அனைவரும் (அல்லது இவர்கள் போன்ற இயலுமான ஏனையோரும்) இன மீள் இணக்கப்பாட்டிற்கு அனுகூலமான அரசியலமைப்புக்குரிய உள்ளீடுகளான இணைப்புக்கள், திருத்தங்கள் போன்றவற்றை சம்பந்தப்பட்டவர்கள் கருத்திற்கொள்ளு முன்னர் ,ஏற்கனவே 'UNHRC' பரிந்துரைத்திருந்த பொறுப்புக்கூறலுக்கான விசாரணை என்ற அருமருந்தினை தட்டிக்கொட்டி விடயத்தினை இறுதி முடிவுக்கு கொண்டு வந்துவிடலாமென்ற நீண்ட எதிர்பார்ப்புக்களுடன் காத்திருக்கின்றனர். இது சம்பந்தப்பட்ட இனப்பிரிவுகளது அரசியல் நிலைப்பாடுகளை கடினமாக்கி விடுவதுடன் முஸ்லிம்கள் மற்றும் மலைநாட்டுத் தமிழர்களை ஒட்டு



மொத்தமாகவே புறந்தள்ளுவது போன்ற நிலையை உருவாக்குவது மூலம் இவர்கள் சம்பந்தப்பட்ட ஏனைய தேசிய பிரச்சினைகளையும் மோசமாக்கிவிடலாம்.

சர்வதேச சமூகத்து புத்திசாலிகள் சிலராவது பொறுப்புக்கூறலுக்கான பேச்சு வழிமுறையானது அரசியலமைப்பு ரீதியில் அமையக்கூடிய மீள் இணக்கப்பாட்டிற்கு இலங்கை அரசையோ சிங்கள அரசியல்வாதிகளையோ நிர்ப்பந்திக்கும் தந்திரமாக அமையக்கூடும் என்று சிந்திப்பார்களேயாகில் அதுவே தமிழ்மக்களுக்கு விசேடமாக இலங்கைப் புலம்பெயர் தமிழர்ளுக்கு முற்றிலும் எதிர்மாறான செய்தியை கொடுப்பதாகவும் இருக்கும். இதனால் உருவாகக்கூடிய உள்ளார்ந்த அதிர்வலைகள் இலங்கை அரசு காலடி எடுத்து வைத்திருக்கும் புதிய பாதையிலேயே அதற்கு தடுமாற்றத்தை ஏற்படுத்தி அதனது ஊக்கத்தையும் கெடுத்துவிடலாம் என்பதுடன் சர்வதேச சமூகமும் இதன் விளைவுகளை விளங்கிக்கொள்ள முடியாது போய்விடலாம்.

**இன்றியமையாத கேள்விகள்**

போருக்குப் பிந்திய சூழ்நிலைகளிலும் சமூகத்தில் ஏற்கனவே இருந்துவந்த இனத்துவ முரண்பாடுகளை களைந்து சமாதானத்துடன் கூடிய அமைதி நிலையை உளப்பூர்வமாக ஏற்படுத்திக் கொள்வதற்கு ஏன் எதுவித முயற்சியும் எடுக்கவில்லை என்பது போன்ற பல கேள்விகளுக்கும் மகிந்த ராஜபக்ஷ தலைமைத்துவம் இன்னமும் பதில் கூறவேண்டியுள்ளது என்ற கருத்தினையே புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூடுதல் அண்மைக்கால வெளிப்படுத்தலாக சுட்டிக்காட்டியுள்ளார்.

2015 ஜனவரியில் தான் அதிகாரத்திற்கு வந்தபோது இலங்கை உள்ளக மற்றும் சர்வதேச ரீதியான பாரிய நெருக்கடி மிக்க சிக்கல்களில் மாட்டிய நிலையிலேயே இருந்ததுடன்... நானும் எனது அரசாங்கமும் சிக்கல்களிலிருந்து நாட்டை விடுவிப்பதற்கான எமது முயற்சிகளை மேற்கொண்ட ஒவ்வொரு நடவடிக்கையின் போதும் நாட்டை ஏற்கனவே குழப்பத்தில் ஆழ்த்தியிருந்த முன்னாள் அதிகார சக்திகள் நான் நாட்டையே காட்டிக்கொடுக்கப்போவதாக பிரசாரப்படுத்திவந்ததுடன் இலங்கை மீது ஆக்கிரமிப்பு மேற்கொள்வதற்கான சந்தர்ப்பங்களை எனது அரசு அந்நிய சக்திகளுக்கு ஏற்படுத்திக்கொடுப்பதாகவும் தமது கற்பனையில் உருவாக்கிக் கூறிவந்த இந்த அர்த்தமற்ற குற்றச்சாட்டுக்களை முற்றிலுமாக அவர் நிராகரித்தார்.

இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கைபற்றி வெவ்வேறு கருத்துக்களும் வித்தியாசமான விளக்கங்களும் நிலவுவதாகக்கூறும் ஜனாதிபதி தாம் எந்தவொரு ரிம், டிக், ஹெறியுடைய பேச்சுக்களை பொருட்படுத்தவோ ஆலோசனைகளை கேட்கப்போவதோ இல்லை என்று கூறுகிறார். இதற்குப் பதிலாக நாட்டிற்கு உச்சப் பலன்களையே பெற்றுக்கொடுக்கக்கூடிய விதத்தில் ஆகக் கூடுதல் யதார்த்தமானதும் பொருத்தமானதுமான வெளிநாட்டுக் கொள்கைகளையே தாம் கடைப்பிடிக்கவிருப்பதாகவே அவர் கூறுகிறார். இந்தக் கொள்கையே சர்வதேச சமூகம் எம்மையும் எமது நாட்டையும் கௌரவத்துடன் ஏற்றுக்கொண்டு மதிப்பளிக்க வைத்திருப்பது மட்டுமன்றி கடந்த ஒன்றரை வருடகாலமாக உலகின் மாபெரும் தலைவர்களே கூட வியந்து உற்று நோக்கி வருவதாகவும் அவர் கூறுகிறார். இதன் சாராம்சம் என்னவென்றால் தனது அரசாங்கத்தை எந்தவொரு அந்நிய சக்தியும் ஆட்டிப்படைத்துவிடமுடியாதென்பதுடன் எவருமே எமக்கு ஆணையிட நாம் அனுமதித்துவிடப் போவதுமில்லை. எமக்கு நெருக்கடிகளை ஏற்படுத்தவோ அழுத்தங்களைக் கொடுப்பதற்கோ இன்று எவருமே இல்லை என்பதே அவரது கருத்தாக இருக்கிறது. எப்படியும் மனித வுரிமைகளும் அடிப்படை உரிமைகளும் இலங்கையில் பாதுகாக்கப்படுவ்துடன் சட்டம் , ஒழுங்குவிதிகள் ஜனநாயகம் மற்றும் நல்லாட்சிக்குரிய கொள்கை-கோட்பாடுகள் போன்றவை வலுப்படுத்தப்படுவதுடன் சுதந்திரமான ஒரு ஊடகக் கலாசாரம் நிலவ வேண்டுமென்பதே சர்வதேசத்தின் எதிர்பார்ப்பாக இருக்கிறது.

இலங்கையில் இப்போது மேற்கொள்ளப்படவேண்டுமென சர்வதேச சமூகம் விரும்புகிற அனைத்து விடயங்களுடன் மகிந்த ராஜபக்ஷ ஆட்சியின்போது மக்களனைவரும் முகங்கொடுத்து வந்த குறைபாடுகள் அனைத்தையும் முன்னைய ஆட்சியாளருடன் சம்பந்தப்படுத்தி விடயத்திற்கு மைத்திரிபால சிறிசேன குழப்பமானதொரு சிக்கல் முடிச்சுப்போடும் சாத்தியக்கூறுகளும் உண்டு.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் பங்குவகித்த அனைத்து விடயங்களையும் அநேகமாக மைத்திரிபால சிறிசேனவுடன் ஆரம்பித்து இரு பக்கத்தினரதும் கடந்தகால மற்றும் நிகழ்கால நிலைப்பாடுகளிடையே தெளிவான கோடு வரைந்து அவதானித்தால் இலங்கையில் நிலவுகின்ற தற்போதைய முரண்பாட்டு நிலையை தெரிந்து கொள்ளலாம். ரணிலுடைய ஐக்கிய தேசியக் கட்சியை தவிர்த்துப் பார்த்தால் தற்போதைய அரசின் அனைத்து உறுப்பினர்களதும் முன்னைய அரசின் ஒரு பகுதியாகவும் இருக்கிறார்கள். இவர்கள் அந்த அரசின் பகுதியாக மட்டுமல்லாமல் அதனது அமைச்சரவையிலுங்கூட பகுதியினராகவேயிருந்தனர். மைத்திரிபால சிறிசேன உள்ளடங்கலான இந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள்



அக்கட்சியின் உயர் அதிகாரசபை உறுப்பினர்களாயுமிருந்தனர். அப்போது மகிந்த ராஜபக்ஷவே தீர்மானம் எடுப்பவராக இருந்தாரென்பது உண்மைதானென்ற போதிலுங்கூட ஏனையோர் முணுமுணுப்பெதுவும் இல்லாமல் வெறும் எதிர்ப்பினை மட்டும் தெரிவித்துவிட்டு இணங்கிப் போனவர்களாகவே இருந்தனர்.

எடுத்துக்காட்டாக ஈழப் போர்-IV இன் வெவ்வேறான ஐந்து கட்டங்களின் போதும் அவற்றின் ஒவ்வொரு தடவையும் சில நாட்களேதான் என்றாலும்கூட மைத்திரிபால சிறிசேன பதில் பாதுகாப்பு அமைச்சராகவும் இருந்திருக்கிறார். இது போரின் இறுதிச் சண்டையுடன் அதன் இறுதிக்கட்ட முடிவுகளையும் உள்ளடக்குகிறது. அது மட்டுமல்லாமல் எந்தவொரு ஜனநாயக நடைமுறைக்கும் உரியது போன்று பழைய- புதிய ஜனாதிபதிகள் இருவருமே சம்பந்தப்பட்ட அந்த அமைச்சரவை சார்ந்த போர்க்குற்றப் பொறுப்பின் பாவப்பங்கிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியாது. குற்றமெதுவும் இழைக்கப்பட்டிருந்தால்? அப்படியில்லையென்றால் பாராட்டுக்களும் அவர்களுக்கே.

மகிந்த ராஜபக்ஷ தலைமைத்துவத்தின்கீழ் ஒவ்வொரு கட்டத்திலும் இடம்பெற்ற மோசமான நிர்வாகத் தவறுகளுக்கான பொறுப்பு இருவருக்கும் பொதுவான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையேதான் சார்ந்ததென்பதுடன் மகிந்த ராஜபக்ஷவுக்கெதிராக அப்போது எவருமே கேள்வியெழுப்பியதுமில்லை! அவை தனிப்பட்ட முறையில் மேற்கொள்ளப்பட்டவையுமல்ல!

அவற்றுள் சில தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைகள் மட்டில் வலு

**சண்டே லீடர் பத்திரிகையின் "தனது எண்ணிக்கைப் பலத்தை நிரூபித்த அரசாங்கம் நல்லாட்சிக்கான விருப்பத்தையும் நிரூபிக்குமா?" என்ற தலைப்பில் என். சத்திய மூர்த்தி எழுதிய அரசியல் கட்டுரையின் தமிழாக்கம்.**

வான தனித்துவ நிலைப்பாடுகளை வெளிக்காட்டுவதாயிருந்ததாக நம்பப்படுகிறது. அல்லது பேச்சுவார்த்தைகளுக்கான மாற்று வழிமுறைகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்புக்களை வெளிப்படுத்தப்படுவதாகவுமிருந்தன. பேச்சுவார்த்தைக்கான அரச தூதுக்குழு அரச தரப்புப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்ததுடன் பின்னர் அவை கட்சி மட்டத்தில் அமைய வேண்டுமெனவும் அதற்குப் பின்னர் இறுதித் தீர்மானம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் கட்சி மட்டத்திலேயே தெளிவான முறையில் உறுதி செய்து கொள்ளப்பட வேண்டுமென்றும் கூறப்பட்டது.

இன்றோ அரசாங்கத்திற்கு எண்ணிக்கைப் பலம் இருக்கும். தற்போதைய நிலையில் ஏற்றுக்கொள்ளத்தக்க நீதி-நியாய வழிமுறைகளிலிருந்து (அதாவது பாராளுமன்றத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட விதமாக இங்கு வாக்காளர்களின் முடிந்தவிதமான விருப்பத்தெரிவுக்குரிய தீர்மானமொன்றுதான் அவசியமென்றில்லை) விலகிய



விதமாக வீண்வம்பு- சண்டை- சச்சரவுகளை வரவேற்கும் விதத்திலும் கானல் நீர் போன்ற மாயையே தொடர்ந்தும் தேடி தமது சக்திகளை வீண்விரயம் செய்யாமல் இதய சுத்தியுடன் கூடிய நேரடிச் செயற்பாட்டில் இறங்கிவிடவேண்டும். ஒரு பக்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் இன்னுமொரு பக்கம் அரசாங்கத்தின் உறுப்புக்கட்சிகளுடனும் மூன்றாவது முனையாகிய சர்வதேச சமூகத்துடனும் பேச்சுவார்த்தைகளை உடன் ஆரம்பித்தேயாக வேண்டும்.

நாட்டின் அரசியலமைப்பிற்கான வரைபு ஒன்று தயாரிக்கப்படும்போது ஏதாவது காரணங்களால் அரசாங்கத்தின் இந்த முயற்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினாலும் தமிழ் மக்களாலும் நிராகரிக்கப்பட்டாலோ ஏற்றுக்கொள்ளப்படாவிட்டாலோ அது தனித்தவிதமான- ஒரு தரப்பு தயாரிப்பாக உருவாவது ஜனநாயகத்திற்கு ஏற்புடையதாகாது அல்லது பிரசித்த அங்கீகாரம் பெறுவதும் சாத்தியமாகாது அல்லது அதுவே நாட்டிற்கோ மக்களுக்கோ அனுகூலமாகவும் அமையாது. இந்த அரசியலமைப்பு விடயமானது நாட்டிற்குள் முக்கியமானதும் தீவிரமானதுமான பார்வையுடன் அலசி ஆராயப்பட்டு வருகின்ற இச்சந்தர்ப்பத்தில் அது எவ்வளவுதான் வரையறைக்குட்படுத்தப்பட்டதாகவோ நேர்மையானதாகவோ அல்லது நேர்மையற்றதாகவோ இருப்பினுங்கூட இலங்கையின் பொறுப்புக்கூறல் விடயம் சர்வதேசத்தினால் UNHRC சபையில் புதிய உத்வேகம் பெற்று வரும் சூழ்நிலை அதன் உருவாக்கத்திற்கு தடையாக அமையக் கூடுமென கருதப்படலாம்.

இங்குதான் இலங்கையின் செயற்பாடு முக்கியத்துவம் பெறுகிறது. முதலில் இலங்கை வலுவான முறையில் செயற்படவேண்டும். அதன் பிறகே பேச்சுக்கள் அமைய வேண்டும். மறுவளமாக செயற்படுவது வெறும் இழுத்தடிப்பாகவே முடியும். இரு விடயங்களையும் சம முக்கியத்துவம் கொடுத்தே செயற்படுத்த வேண்டும்.

(முற்றும்)

தமிழில்-யோகர்

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்—80

## வீட்டுத்தோட்டத்தினூடாக சூழலை பாதுகாக்கும் பொறிமுறை

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

பஞ்சம் ,பட்டினி என்பன அவரவருககு வந்தாலேயே தெரியும் என்பார்கள். ஆனால் இந்த மணணுக்குரியவர்களுக்கு இவை ஒன்றும் புதிதானவையல்ல. இலங்கையில் நாம் நெல்லுற்பத்தியில் தன்னிறைவு கண்டுள்ளதாக செய்திகள் வந்தாலும் அது குறிப்பிட்ட போகத்துக்கானது என்பது நிபுணர்களின் கருததாகும். உற்பத்தியை விரைந்து பெருக்குவதற்கு பலவழிவகைகள் இருக்கின்றன. இன்னும் அவற்றை கடைப்பிடித்து உற்பத்தி பெருக்கமடைகின்ற போது ஊட்டச்சத்து பிரச்சினை எழுகின்றது. நாம் தற்போது உண்ணுகின்ற உணவு சுகாதாரமானதாக எமது உடலுக்கு தீங்கு விளைவிக்காதது என எவரும் சான்றிதழ் தரமுடியாதிருக்கின்ற நிலை தற்போது காணப்படுகின்றது. உணவுற்பத்தி அதிகரிக்க வேண்டும் என்பதில் எந்தவிதமாற்றுக் கருத்தும் இருக்க முடியாது. ஆனால் உண்ணுகின்ற உணவு ஊட்டச்சத்து உளளதாக, சமநிலையான உணவாக இருக்கவேண்டும் என்பது அவசியமானதாகும். ஊட்டச்சத்து இன்மையால் பல பிரச்சினைகள் உருவாவதாகவும் அறியமுடிகின்றது.

இப்பூமியில் ஏறக்குறைய 795 மில்லியன் மக்கள் தேகாரோக்கியமீாக வாழ தேவையான உணவில்லை என அறியப்படுகின்றது. இது இப்பூமியில் ஒன்பதில் ஒருவருக்கு என்னும் புள்ளிவிபரவியல் ஆகும். இதில் அநேகமானவர்கள் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளைச் சேர்ந்தவர்களாவர். இதிலும் 12.9 சதவீதமானவர்கள் ஊட்டச்சத்து குறைபாடுள்ளவர்களாவர்.

இனியொரு பசுமைப்புரட்சியென்பது பலரும் எதிர்பார்ப்பதைப் போல வெறுமனே உணவுற்பத்திப் பெருக்கத்துடன் முன்னிற்காது வேறு பலவற்றையும் விரைந்து பெற்றுக்கொடுக்கும்

பாரதூரமான விளைவுகளையும் நாம் சந்திக்கவேண்டியேற்படுகின்றது. இது தவிர்க்க முடியாததாக இருப்பினும் பசுமைப் புரட்சியின் விளைவாக திருந்திய கலப்பின பயிரினங்களை பயன்படுத்திய போது அவை உள்ளீடுகளில் முழுக்கமுழுக்க தங்கியிருந்ததாலும் உள்ளீடுகளின் பாவனை பரிந்துரைக்கப்பட்ட அளவை விட பன்மடங்கு பெருகியதாலும் எமக்கும் சூழலுக்கும் இதனால் பாதகமான விளைவுகள் ஏற்பட காரணமாயிற்று. இதனால் தற்போது நாம் இதிலிருந்து வெளியேறவும் முடியாமல் அதனை முழுமையாக உள்வாங்கவும் முடியர்மல் தவிக்கவேண்டியாயிற்று.

உணவுற்பத்திக்கான அடித்தளம் நிறைவாகவே பசுமைப் புரட்சியினால் இடப்பட்டது என்பது நிதர்சனமே. ஆனால் அதன் பின்னரான விளைவுகளில் ஒரு சில பாரதூரமாக இருப்பதனை உறுதி செய்தபோது இவ்வாறான புதிய யுக்திகளையும் அணுகுமுறைகளையும் பலமுறை நீண்டகால பரிசீலிப்பின் பின்னர் உறுதி செய்து கொள்வதே சாலப்



பொருந்தும். பக்கவிளைவுகள் மற்றும் அதனால் ஏற்படக்கூடிய வேறு மறைமுகமான விளைவுகள் என்பனவற்றை நாம் கூர்ந்து அவதானித்து ஆராய்ந்து தொழில்நுட்பத்தை சரியானதும் முறையானதுமான வழியில் எமக்குப் பயனைத்தரக்கூடியவாறு பயன்படுத்தவேண்டும். எமது தவறான செய்கையால் தொழில்

அளவு பங்களிப்பு செய்யவல்லது என்பதனை நாம் இன்னும் உணர்ந்து கொள்ளமுடியவில்லையெனில் இதற்கு மேல் உணவினறி தவிக்கும் மக்களை காப்பாற்றமுடியாமல் போய்விடும். குறுநில மன்னர்களான சிறிய விவசாயிகளைப் பற்றியும் அவர்களது உற்பத்திப் பொருட்களைப் பற்றியும் உற்பத்தி செய்யவல்ல திறனைப்பற்றியும் இறுதியாக உலக உணவு ஸ்தாபனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட றியோ+20 எனும் உலகளாவிய மாநாடு நிறையவே அலசி ஆராய்ந்துளளது. இதில் சிறு விவசாயிகளின உற்பத்தியை மேம்படுத்துவதற்கான வழிவகைகள் பற்றி பலமாக ஆராயப்பட்டுள்ளன. வீட்டுத்தோட்டத்தில் உள்ள தாவர வகைகளின் எண்ணிக்கையை நாம் அதிகரிக்கும் போது அங்கே உயிர்ப்பல்வகைமையின் தன்னிறைவுக்கான நிலைகிடைக்க வாய்ப்புள்ளதல்லவா. உயிர்ப் பல்வகைமையை வீட்டுத்தோட்டத்தில் இலகுவாக நாம் ஏற்படுத்தக் கொள்ளமுடியும். பல்வகைத் தாவரங்களை அதிலும் எமது தேவைக்காக வளர்க்கக்கூடியதை இனங்கண்டு தெரிந்து வளர்க்க முடியும்.

குறிப்பாக வீட்டுத்தோட்டத்தில் நாம் வளர்க்கக்கூடிய மரங்களைப் பற்றி கவனம் செலுத்துவது நல்லது. வீட்டுத்தோட்டத்தில் வளரும்,வளர்ந்திருக்கும் இன்னும் நாம் நடுகை செய்யப்போகும் மரங்களைப் பற்றிய தகவல்களைத் திரட்டினால் அவற்றின் எண்ணிக்கை, அதில் பழமரங்கள் ,நிழல் மரங்கள்.பல்பயன் தரும் மரங்கள். குறிப்பாக வருவாயைத்தரும் மரங்கள் மற்றும் கால்நடை தீவனமாக பயன்படும் மரங்கள்,ஏறிகளுக்கு உதவும் மரங்கள் என்பனவற்றை இணைத்துக்கொள்ளலாம். மரங்களின் எண்ணிக்கையை நிர்ணயம் செய்தால் அவற்றுடன் ஏனைய தாவரங்களையும் இணைத்துக் கொள்ள எமக்குத் தேவையான பல்வகைத் தன்மை கிடைத்துவிடும். உணவுற்பத்தி வீட்டுத் தோட்டத்திலிருந்து அதுவும் இயற்கையையொத்த வீட்டுத்தோட்டத்து வேளாண் காட்டிலிருந்து கிடைக்க ஆவன செய்தல் வேண்டும். வேளாண் காடுகள் என்பன விவசாய நிலத்தில் மரங்களை நடுகை செய்வதன் மூலம் செயற்கையான காட்டினை உருவாக்குதலாகும். காடாக இருந்த இடங்களை கண்டபடி அழித்து நாம் குடியேறி இப்போது தொடர்ந்திருக்க முடியாதென்ற நிலைவந்த பின் அழித்த இடங்களில் மீண்டும் வேளாண்காட்டு மரங்களை நடுகை செய்யமுனைகின்றோம் அல்லவா. இயற்கையை அழித்து அழகும் பார்த்து இப்போது அந்த இயற்கையை செயற்கையாக உருவாக்க முயற்சிக்கின்றோம். மனிதனின் செய்கையால் இயற்கையும் அவ்வப்போது சீறிச்சினந்து கொள்கின்றது. இவ்வருடம் இயற்கை சாதுவாக ஆனால் வழக்கத்துக்கு மாறாக மழையை பின் தள்ளி வைத்திருக்கின்றது. வழமையாக பெய்ய வேண்டிய இடங்களில் மழை எதிர்பார்த்த அளவு கிடைக்கவில்லை. சில இடங்களில் விவசாய செய்கையை முழுமையாக செய்ய முடியாதளவுக்கு ஏமாற்றியுமிருக்கின்றது. முளைவிட்ட நெற்பயிர்கள் கருகுவதும் விவசாய பெருமக்களை கலங்க வைத்திருக்கின்றது.

இதனால்தான் மிஞ்சியிருக்கின்ற இயற்கையையாவது நாம் பாதுகாக்க முயற்சி செய்வோம். அழிந்தது போக இருப்பதை நாம் மேலும் அழிக்காமல்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

கொடுப்பது மிகவும் நல்லது. குறிப்பாக சீமைக்கிளுவை அல்லது கிளிறிசிடியா ஆகிய பல்பயன்தரும் மரத்திற்கு நடுகை செய்வதில் முன்னுரிமைகொடுப்பது சிறந்தது. கிளிறிசிடியாவின் பயன்பாடுகள் பல. அதனை வீட்டுத் தோட்டத்தில் பரந்த அளவில் நடுகை செய்து பயன்பாட்டை பெருக்கிக்கொள்ளலாம். இன் னும் பழமரங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கலாம். தினமும் ஒரு பழ மாவது உண்பதற்காகவாவது பழமரங்களை நடுகை செய்யலாம்.

எமது சூழலை நாமே பாதுகாக்கவேண்டும். சூழலை மாசுபடுத்தும் பொருட்களின் பாவனையைக் குறைத்து சூழலை இயற்கையின் அழகில் வைத்திருக்கும் மரங்களை நடுகை செயவதும் இயற்கையை பேணிப்பாதுகாக்கும் செயன்முறைகளுகுகு ஊக்கமும்கொடுக்க வேணடும்.இப்பூமித்தாயின் வனத்தை நாம் பேணிப் பாதுகாக்க் வனத்தை வேளாண்மையில் உள்வாங்கி அதனை நாம் வாழும் வீட்டுத் தோட்டத்தினுள் விரும்பி உள்வாங்கிக் கொள்ள வேண்டும். நாம் நினைத்தால் இது முடியும். பூமித்தாயை ,நாம வாழும் தேசத்தை வளப்படுத்த இயற்கையை மேம்படுத்த நாம் எமது சூழலைப் பாதுகாக்க

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 97

மக்களிணைந்த கூட்டு முயற்சியாகவே நாம் கருதமுடியும். நடந்தேறிய பசுமைப்புரட்சியின் பலன்களை நாம் உணவில் அதன் உற்பத்தியில் பெற்றிருக்கின்றோம் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் எந்தவொரு தொழில்நுட்பமாயினும் அதனை தவறான வழியில் பிரயோகிக்கும் போது நாம் எதிர்பார்த்த பலன்களுக்கு மேலாக நுட்பத்தை தவறானதாக காட்ட முயலவது எமது விஞ்ஞான தொழில்நுடப வளர்ச்சிக்கும் தொழிற்றுறை அபிவிருத்திக்கும் இடையூறாக இருக்கும்.

வீட்டுத்தோட்டத்தைப்பற்றி பலவகையில் பலவாக நாம் கலந்துரையாடினாலும் அதிலும் இன்னும் பல விடயங்கள் எமக்கு தெரியாத நிலையிலிருக்கின்றன. வீட்டுத்தோட்டம் எமது உணவுற்பத்திக்கு கணிசமான பங்கு பற்றியும் இன்னும் அவற்றை நாம் எவ்வாறு பயன்படுத்தப் போகின்றோம் என்பதையும் கவனத்திற்கொள்ளமுடியும். இங்கே மரங்களின் வயது,தண்டின் விட்டம், உயரம், நிலமேற்பகுதியின் விட்டம் அல்லது குறுக்கு நீளம், மரத்தின் வகை, கிடைக்கும் நிழலின் விஸ்தீரணம் மற்றும் பல்வகைப் பயன்பாடு என்பன முக்கியமான தரவாகக் கொள்ளலாம். வளர்க்கும் மரங்களின் பேணிப்பாதுகாப்பதுடன் வேளாண காடுகளையொத்ததை வீட்டுத்தோட்டத்தில் உருவாக்க வேண்டும். வேளாண்காடுகளை வீட்டுத் தோட்டத்தில் நடுகை செய்யும் மரங்களுடாக உருவாக்கலாம். திட்டமிட்ட மரங்களின் நடுகை மூலம் வேளாண் காடுகளை நாம் மெல்ல மெல்ல கட்டியெழுப்ப வேண்டும். வீட்டுத் தோட்டங்களில் பல் பயன் தரும் மரங்களுக்கு முன்னுரிமை வேண்டும். இன்னும் தெரிந்தெடுத்து அரிய வகை தாவரங்களை பயன்படுத்த முயற்சிக்கவும் வேண்டும். எமது உணவுப் பழக்கத்தை மாற்றிக் கொண்டால் இயற்கையாக கிடைக்கும் தாவரங்களை நாம் எமது உணவில் சேர்த்துக்கொள்ள வாய்ப்புண்டு. இவற்றை நாம் வீட்டுத் தோட்டத்திலும் வளர்த்து எமது தேவையைப் பூர்த்திசெய்து கொள்ளலாம்.

# பிரான்ஸில் பயங்கரம்

## தேசிய தினத்தன்று மக்கள் கூட்டத்திற்குள் கனரக வாகனத்தைச் செலுத்தித் தாக்குதல்

# 85 பேர் உயிரிழப்பு

# 100 பேர் படுகாயம்

(பாரிஸ்)

**தேசிய தினத்தை கொண்டாடிக் கொண்டிருந்த பிரான்ஸ் மக்கள் மீது வெடிபொருட்கள் நிரப்பிய கனரக வாகனத்தைச் செலுத்தி வெடிக்கச் செய்து பயங்கரத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் 85 பேர் உடல் சிதறிப் பலியாகியுள்ளனர். 100 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.**









பிரான்ஸ் நாட்டின் தேசிய தினத்தை நேற்று முன்தினம் நாடு முழுவதும் மக்கள் கோலாகலமாக கொண்டாடிக்கொண்டிருந்தனர். மொனாக்கோ நகரில் இருந்து சுமார் 13 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள நைஸ் நகர மக்களும் நகரின் பிரதான வீதியில் கூட்டமாக திரண்டு தேசிய தினத்தை மகிழ்ச்சியாக கொண்டாடினர். அப்போது, அந்த வீதி வழியாக வேகமாக வந்த ஒரு கனரக வாகனம் மக்கள் கூட்டத்துக்குள் பாய்ந்தது.

வேகம் சற்றும் குறையாமல் திரளாக இருந்த மக்களை மோதித் தள்ளியபடி சுமார் 2 கிலோமீற்றர் தூரம் அந்த வாகனம் முன்னேறிச் சென்றது. இதில் ஏராளமான மக்கள் வாகனத்தின் சில்லுக்கு அடியில் சிக்கி நசுங்கினர். தீவிரவாதிகளின் சதிவேலை என கருதப்படும் இந்தக் கொடூர தாக்குதலில் 85 பேர் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தத் தாக்குதலில் நூற்றுக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். அந்த கனரக வாகனத்தை ஓட்டி வந்தவரை பொலிஸார் சுட்டுக் கொன்றனர். பிரான்ஸில் தொடர்ச்சியாக ஐ.எஸ்.ஐ. எஸ் தீவிர வாதிகள் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், பிரான்ஸ் நாட்டின் பாஸ்டில் தின கொண்டாட்டத்தை முன்னிட்டு வான வேடிக்கை நிகழ்த்தப்பட்டது. நைஸ் நகரில் இந்த வான வேடிக்கையைக் காண ஆயிரக் கணக்கானோர் கூடியிருந்தனர். அப்போது வெடிபொருட்களுடன் வந்த கனரக வாகனம் ஒன்று, மக்கள் கூட்டத்துக்குள் நுழைந்து பயங்கரமாக வெடித்துச் சிதறியது. இத்தாக்குதலில் 85 பேர் பலியாகினர். மேலும் பலியானோர் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்று அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்து ள்ளனர். (இ-10)

## ஆதரவற்ற சிறுவர் இல்லத்தில் எட்டுப்பேர் தீயில் கருகிப் பலி!



தென்னாபிரிக்காவின் டர்பன் நகரில் ஆதரவற்ற சிறுவர் இல்லம் உள்ளது. இங்கு நேற்றுமுன்தினம் அதிகாலை 2.20 மணியளவில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. தீ மளமளவென பரவியதால் 8 பேர் தீயில் கருகி பலியாகினர்.

இதில் 6 பேர் குழந்தைகள். தீயணைப்பு வீரர்கள் 4 மணி நேரம் போராடி தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர். தீ விபத்துக்கான காரணம் உடனடியாக கண்டறியப்படவில்லை. இது குறித்து விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (இ-10)

## இந்தியர்களுக்கு பாதிப்பில்லை



பிரான்ஸ் நாட்டின் நைஸ் நகரில் மக்கள் கூட்டத்திற்குள் கனரக வாகனம் புகுந்ததில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 85 ஆக உயர்ந்துள்ள நிலையில் இந்த கொடூர தாக்குதலில் இந்தியர்கள் யாருக்கும் எவ்வித பாதிப்புமில்லை என இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் விகாஸ் ஸ்வரூப் வெளியிட்டுள்ள தகவலில், 'பாரிஸ் நகரில் உள்ள இந்திய தூதர் அங்கிருக்கும் இந்திய சமூகத்தவர்களிடம் தொடர்பு கொண்டு அறிந்துள்ள தகவலின்படி, நைஸ் தாக்குதலில் இந்தியர்கள் யாருக்கும் எவ்வித பாதிப்புமில்லை என தெரியவந்துள்ளது என்றார். (இ-10)

# க.பொ.த.(உ/த) பரீட்சை-2016 மாதிரிவினாத்தாள்

★ வலம்புரி கல்விப்பிரிவு ★

## இரசாயனவியல் பகுதி-II

## கொழும்பு றோயல் கல்லூரி

பகுதி A -அமைப்புக்கட்டுரை

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

அகில வாயு மாறிலி $R=8.314JK^{-1}\ mol^{-1}$

அவகாதரோ மாறிலி $N_A=6.022X10^{23}\ mol^{-1}$

01)

(a) பின்வரும் வினாக்களின் கீழே தரப்பட்ட இடைவெளிகளில் விடை எழுதுக.

(i) $CrO_2, Cr_2O_3, V_2O_3, VO_2, MnO_3, Mn_2O_3$ ஆகியவற்றின் இரு ஈரியல்புடைய ஒட்சைட்டுக்கள்

(ii) Co,Ni,Cu,Sc ஆகியவற்றில் அவற்றின் உறுதியான சேர்வைகளில் வேறுபட்ட ஒட்சியேற்ற எண்களைக் காட்டும் இரு மூலகங்கள்

(iii) Be,B,C,Si ஆகியவற்றில் ஒத்த அணுச்சாலகத்தில் காணப்படும் இரு மூலகங்கள்

(iv) $Ti^{4+}, Mn^{3+}, Cu^{+}, V^{3+}$ ஆகியவற்றில் நீர்க்கரைசலில் நிறமற்ற இரு அயன்கள்

(v) As,Be,Zn,Bi ஆகியவற்றில் ஈரியல்புகளைக் காட்டும் இரு மூலகங்கள்

(b) பின்வரும் வினாக்கள் சேர்வை HCNO ஐ அடிப்படையாகக் கொண்டது. HCNO இன் வன்கூட்டு அமைப்பு கீழே தரப்பட்டுள்ளது.

H—C—N—O

(i) இம்மூலக்கூற்றிற்கு மிகவும் ஏற்றுக்கொள்ளத்தக்க லூயியின் கட்டமைப்பை வரைக.

(ii) இம்மூலக்கூற்றிற்கு பரிவுக் கட்டமைப்புக்களை வரைவதுடன் அவற்றின் சார்புறுதிகளைப் பற்றி கருத்துக்கூறுக.

(C) பின்வரும் வினாக்கள் மெதனேமட்டை, $HCONH_2$ அடிப்படையாகக் கொண்டது.

(i) $HCONH_2$ இற்கு பரிவுக்கட்டமைப்புக்களை வரைக.

(ii) மேலே மிகவும் ஏற்றுக்கொள்ளத்தக்க லூயியின் கட்டமைப்பைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.

(I) VSEPR கொள்கையைப் பயன்படுத்தி பின்வரும் அணுக்களைச் சூழவுள்ள வடிவங்களை உய்த்தறிக.

(A)C: (B) N:

(II) பின்வரும் அட்டவணையை நிரப்புக.

| | அணு | C | N |
|---|---|---|---|
| A | அணுவைச் சூழவுள்ள இலத்திரன்சோடிக் கேத்திர கணிதம் | | |
| B | அணுவின் கலப்பாக்கம் | | |
| C | அணுவைச் சூழவுள்ள அண்ணளவான பிணைப்பு கோணம் | | |

(III) மேலே கட்டமைப்பில் σ பின்வரும் பிணைப்புக்கள் உருவாக்கத்துடன் சம்பந்தப்பட்ட அணு/கலப்பு ஒபிற்றல்களைச் சுட்டிக்காட்டுக.

(A)H-C; H:............................ C:............................

(B)C-N; C:............................ N:............................

(C)N-H; N:............................ H:............................

(D)C-O; C:............................ O:............................

(d) $BF_3, NF_3$, ClF,HF ஆகிய மூலக்கூறுகளைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க

(i) முனைவு மூலக்கூறுகள்:

(ii) இலத்திரன் பற்றாக்குறையான மூலக்கூறு:

(iii) பங்கீட்டு இயல்பு உயர்வான மூலக்கூறு:

(iv) கீழே தரப்பட்ட மூலக்கூற்றிடை விசைகளை கொண்டது/கொண்டவை:

(A) ஐதரசன் பிணைப்பு:

(B) இருமுனைவு-இரு முனைவுக் கவர்ச்சி விசை:

(C) லண்டன் கலைவு விசை:

02)

இவ்வினா Fe இனதும் Al இனதும் இரசாயனத்தை அடிப்படையாகக் கொண்டது.

(i) பின்வரும் பதார்த்தங்களின் இரசாயன இயல்புகளை அமிலம் அல்லது மூலம் அல்லது ஈரியல்பு என்றவாறு குறிப்பிடுக.

(I) $Al_2O_3$ (II) $AlH_3$

(III) $FeCl_3$ (IV) $Fe(OH)_3$

(ii) வளியில் Al இன் தகனத்தின் போது நடைபெறும் தாக்கங்களின் சமன்படுத்திய இரசாயனச் சமன்பாடுகளை எழுதுக.

(iii) $Cl_2(g)$ இனால் நிரப்பப்பட்ட வாயுச்சாடி ஒன்றினுள் செஞ்சூடான இரும்புப் பஞ்சை இடும் போது எதிர்பார்க்கப்படும் அவதானத்தை எழுதுவதுடன் நடைபெறும் தாக்கத்திற்கு சமன்படுத்திய சமன்பாட்டை எழுதுக.

(iv) $AlCl_3$ இரு பகுதிய நிலையில் காணப்படமுடியும். இதற்கான ஒரு கட்டமைப்பு சிறப்பியல்பான காரணத்தைக் கூறுக.

(v) $AlCl_3$ இன் இரு பகுதியக் கட்டமைப்பை வரைக.


(vi) கரைசல் $X, Fe^{3+}$ ஐயும் $Al^{3+}$ ஐயும் கொண்ட ஒரு கரைசலாகும். X இன் $25cm^3$ பகுதி ஒன்றிற்கு மிகையான NaOH இடப்பட்டது. இதன்போது பெறப்பட்ட வீழ்படிவு வடிக்கப்பட்டு பெறப்பட்ட வடிதிரவத்திற்கு துளித்துளியாக HCl சேர்க்கப்படும் போது உமது அவதானங்களைக் குறிப்பிடுவதுடன் நடைபெறும் தாக்கத்திற்கான சமன்படுத்திய இரசாயனச் சமன்பாடுகளை எழுதுக.

(V) பகுதி (vi) இல் பெறப்படும் இறுதிக் கரைசலுக்கு $NH_4Cl$ உம் $NH_4OH$ உம் மிகையாகச் சேர்ப்பதுடன் பெறப்படும் வீழ்படிவு வெப்பப்படுத்தப்பட்டது. இதன்போது 63.75mg திணிவுக் குறைவு ஏற்பட்டது. X இல் $Al^{3+}$ இன் செறிவைக் காண்க. (Al=27,O=16)

(vii) ஒத்த சோதனைக்குழாய்களில் பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்டபடி $Fe^{31}$ கரைசலும் சலிசிலிக் அமிலக் கரைசலும் கலக்கப்பட்டதுடன் ஒவ்வொன்றிலும் நிறச்செறிவு அளக்கப்பட்டது. (நிறச்செறிவு விளைவின் செறிவிற்கு நேர்விகித சமனாகும்) ($M \equiv mol\ dm^{-3}$)

| சோதனைக்குழாய் இலக்கம் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|---|
| $0.001MFe^{3+}(aq)$ இன் கனவளவு/$cm^3$ | 1.0 | 2.0 | 3.0 | 4.0 | 5.0 | 6.0 | 7.0 | 8.0 |
| 0.001M சலிசிலிக் அமிலத்தின் கனவளவு/$cm^3$ | 5.0 | 5.0 | 5.0 | 5.0 | 5.0 | 5.0 | 5.0 | 5.0 |
| $H_2O_2(aq)$ இன் கனவளவு | 9.0 | 8.0 | 7.0 | 6.0 | 5.0 | 4.0 | 3.0 | 2.0 |

பின்வரும் வரைபு சோதனைக்குழாயின் இலக்கம் எதிர் நிறச் செறிவு வரைபாகும்




சோதனைக்குழாய் இலக்கம்

(I) சேர்வையின் சிக்கலும் நிறமும் யாது?

(II) பரிசோதனையில் மிகவும் ஐதான கரைசல் பயன்படுத்துவதன் முக்கியத்துவம் யாது?

(III) சலிசிலிக் அமிலக் கரைசலொன்றை எவ்வாறு தயாரிப்பீர்?

(IV) $25cm^3$ கரைசல் X ஐ (பகுதி(vi) இல் பயன்படுத்தப்பட்டது) $2500cm^3$ இற்கு ஐதாக்குவதன் மூலம் கரைசல் Y தயாரிக்கப்பட்டது. Y இன் $5cm^3$ உடன் $5cm^3$ சலிசிலிக் அமிலமும் $5cm^3$ நீரும் கலக்கப்பட்டது. இதன் நிறச் செறிவு பரிசோதனை 3 இன் நிறச்செறிவை ஒத்திருந்தது. Y இல் உள்ள $Fe^{3+}$ செறிவைக் காண்க.

(V) மேலே பரிசோதனை(IV) இல் Y இற்கு பதிலாக சமகனவளவுடைய இன்னுமோர் $Fe^{3+}$ கரைசல் Z பயன்படுத்தப்பட்டது. இதன்போது பெறப்பட்ட நிறச்செறிவு பரிசோதனை இலக்கம் 5 ஐ ஒத்திருந்தது. Z இல் $Fe^{3+}$ இன் செறிவைக் கணிப்பது சாத்தியமா? உமது விடையை விளக்குக.

03)

(a) நீருக்கும் குளோரோபோமிற்கும் இடையில் X இன் பங்கீட்டுக் குணகம் c.V1 கனவளவுடைய நீரில் காணப்படும் a mol X ஆனது $V_2$ கனவளவுடைய $CHCl_3$ உடன் நன்கு குலுக்கப்பட்டு, சமநிலை அடையவிடப்பட்டது. பின்னர் படைகள் வேறாக்கப்பட்டது. நீர்ப்படையில் X இன் x mol இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. பின்வரும் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு $c=[X(CHCl_3)]/[X(aq)]$ ஐப் பயன்படுத்துக.

(i) x இற்கு $C, V_1, V_2$, a என்பவை சார்பாக கோவையொன்றைப் பெறுக.

(ii) $CHCl_3$ படை முழுமையாக அகற்றப்பட்டு $V_2$ கனவளவுடைய $CHCl_3$ நீர்ப்படையுடன் மீண்டும் கலக்கப்பட்டதுடன் நன்கு குலுக்கப்பட்டது. இதன்போது நீர்ப்படையில் y mol x இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. $y=aV_1^2/(CV_2+V_1)^2$ என உய்த்தறிக.


(iii) $C=40$, $V_1=100CM^3$, $V_2=10CM^3$, $a=0.1$ mol ஆக இருப்பின் இரண்டாவது பிரித்தெடுப்பின் பின்னர் நீர்ப்படையில் மீதியாக விடப்பட்ட X இன் அளவைக் காண்க

(iv) $CHCl_3$ இன் கனவளவு $20cm^3$ ஆக இருப்பின் பகுதி (i) இல் பெறப்பட்ட கோவையைப் பயன்படுத்தி முதலாவது பிரித்தெடுப்பின் பின்னர் நீர்ப்படையில் மீதியாக விடப்பட்ட X இன் அளவைக் காண்க.

(v) பிரித்தெடுப்பு முறைகள் (iii) அல்லது (iv) இல் எம்முறை சிறந்தது.

(b) (i) பின்வரும் தாக்கத்தின் வெப்பவுள்ளுறை மாற்றத்தைக் காண்க.

| பிணைப்பு | பிணைப்புச்சக்தி/$KJ\ mol^{-1}$ |
|---|---|
| $C\equiv C$ | 837 |
| C-C(பென்சீனில்) | 518 |
| C-H | 412 |




(ii) $C_2H_2(g)$ இன் தோன்றல் வெப்பவுள்ளுறை $+226.5kJ\ mol^{-1}$ எனில் $C_6H_6(g)$ இன் தோன்றல் வெப்பவுள்ளுறையைக் காண்க.

(iii) $C_6H_6(l)$ இன் தோன்றல் வெப்பவுள்ளுறை $+49.0kJ\ mol^{-1}$ எனில் பென்சீனின் ஆவியாதல் வெப்பவுள்ளுறையைக் காண்க.

(iv) $C_2H_2(g)$ இன் நியமச் தகன வெப்பவுள்ளுறை $-1299kJ\ mol^{-1}$ எனில் $C_6H_6(l)$ இன் நியமத் தகன வெப்பவுள்ளுறையைக் காண்க.

(v) மேலே பெறப்பட்ட பெறுபேறுகளில் இருந்து $CO_2$ (g) இனதும் $H_2O(l)$ இனதும் தோன்றல் வெப்பவுள்ளுறையைக் காண்க.

04)

(a) ஒரு சேதனச் சேர்வை A ஆனது C,H,O,N என்பவற்றை மட்டும் கொண்டுள்ளது. இதில் திணிவு ரீதியில் C-55.17%, H-10.34%, N-16.10% காணப்படுகின்றது. A இன் மூலக்கூற்றுத்திணிவு 87 ஆகும்.

(i) A இன் மூலக்கூற்றுச் சூத்திரத்தைக் காண்க.

(ii) A இற்கு சாத்தியமான பிரடியின் சோதனைப் பொருளுடன் செம்மஞ்சள் வீழ்படிவைக் கொடுக்காத கட்டமைப்புகளை வரைக.

(iii) பகுதி(ii) இல் வரையப்பட்ட கட்டமைப்புகளுக்கு IUPAC பெயரை எழுதுக.


(iv) மேலே பகுதி (ii) சேர்வைகள் $LiAlH_4$ உடன் தாக்கம் புரியும் போது பெறப்படும் விளைவுகளை எழுதுக.

(v) பகுதி (iv) இல் பெறப்பட்ட விளைவுகளின் இரசாயன இயல்பு ஒன்றைக் கூறுவதுடன் இவ்வியல்பு சார்பாக இவற்றை அதிகரிக்கும் ஒழுங்கில் ஒழுங்குபடுத்துக.

(vi) சேர்வை A யையும் பகுதி (iv) இல் கருதப்பட்ட சேர்வையையும் வேறுபடுத்தி இனங்காண்பதற்கு சோதனை ஒன்றைத் தருக.

(b) உலர் ஈதரில் $CO_2$ இற்கும் $CH_3MgBr$ இற்குமான தாக்கத்திற்கு பொறிமுறை ஒன்றை எழுதுக.


(c) (i) பின்வரும் தாக்கங்களுக்கு தாக்குபொருட்கள்/ஊக்கி என்பவற்றுடன் பொருத்தமான நிபந்தனைகளையும் எழுதுக.


(I) 


(II) $CH_3CH_2CN \longrightarrow CH_3CH_2CH_2NH_2$

(III) $CH_3CONH_2 \longrightarrow CH_3CN$

II) பின்வரும் தாக்கங்களுக்கு விளைவுகளை எழுதுக.

(I) 


(II) 


## பகுதி B

இரு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

05)

(a) (i) $25^0C$ கீழே தரப்பட்ட வெப்ப இரசாயனத் தரவுகளைப் பயன்படுத்தி

$$CO(g)+H_2O(g) \longrightarrow H_2(g)+CO_2(g)$$

எனும் தாக்கத்தின் வெப்பவுள்ளுறை மாற்றத்தைக் காண்க.

$\Delta H_{f(H2O(g))}=-242kJ\ mol^{-1}$

$C(S)+H_2O(g) \longrightarrow H_2(g)+CO(g);\quad \Delta H_r^{\ominus}=+131kJ\ mol^{-1}$

$CO_2(g)+C(s) \longrightarrow 2CO(g);\quad \Delta H_r^{\ominus}=+172kJmol^{-1}$

(ii) பின்வரும் நியம எந்திரபித் தரவுகளைப் பயன்படுத்தி மேற்படி தாக்கத்தின் $\Delta S^{\ominus}$ ஐக் காண்க.

| பதார்த்தம் | $\Delta S/J\ mol^{-1}\ K^{-1}$ |
|---|---|
| CO(g) | 198 |
| $H_2O(g)$ | 189 |
| $H_2(g)$ | 131 |
| $CO_2(g)$ | 214 |

(iii) $25^0C$ இல் கிப்ஸ்சின் சுயாதீன சக்தி மாற்றம் $\Delta G^{\ominus}$ ஐக் காண்க.

(iv) $25^0C$ இல் மேற்படி தாக்கத்தின் சுயாதீனத்தைப் பற்றிக் கருத்துக் கூறுக.

(b) i) $127^0C$ இல் $4.157dm^3$ கனவளவுடைய ஒரு கண்ணாடிப் பாத்திரமொன்றினுள் சமமூலர் $H_2(g)$ உம் $I_2$ (g) உம் பாத்திரத்தினுள் வாயுக்களின் அமுக்கம் $6.4X10^5Nm^{-2}$ இல் நிரப்பப்பட்டது. பாத்திரத்தினுள் சடத்துவ வாயு X உட்புகுத்தப்பட்டது. இதன் பின்பு $227^0C$ இல் சமநிலை

$$H_2(g)+I_2(g) \rightleftharpoons 2HI(g)$$

அடைந்த போது பாத்திரத்தினுள் அமுக்கம் $1.0x10^6\ Nm^{-2}$ ஆகக் காணப்பட்டதுடன் $H_2(g)$ இல் பகுதியமுக்கமும் X(g) இன் பகுதியமுக்கமும் சமனாகக் காணப்பட்டது.

I) $H_2(g), I_2(g)$, HI(g), X(g) ஆகியவற்றின் பகுதியமுக்கங்களைக் காண்க.

II) $227^0C$ இல் மேற்படி தாக்கத்தின் சமநிலை மாறிலி $K_p$ ஐக் காண்க.

III) இதே தாக்கம் ஆனால் X(g) இல்லாத நிலையில் மீளவும் நிகழ்த்தப்படும் போது பாத்திரத்தினுள் மொத்த அமுக்கத்தை உய்த்தறிக.

(IV) நீர் ஏதாவது எடுகோள் மேற்கொண்டிருப்பின் குறிப்பிடுக.

14 ஆம் பக்கம் பார்க்க

(ii)இன்னுமோர் கண்ணாடிக்குமிழ் $0.3 mol\ H_2(g)$ இனாலும் 0.6 mol HI(g) இனாலும் நிரப்பப்பட்டது. குமிழும் அதன் உள்ளடங்கங்களும் ஒரு வெப்பநிலை $227^{o}C$ இற்கு வெப்பப்படுத்தப்பட்டது.
சமநிலை அடைந்த பின்னர் சமநிலைக் கலவை விரைவாக மிகையான KI கரைசலினுள் செலுத்தப்பட்டது. விளைவுக் கரைசல் அளவறி ரீதியில் கனமான குடுவைக்கு மாற்றப்பட்டதுடன் $500cm^3$ ஐதான கரைசல் உருவாக்கப்பட்டது.
மேற்படி கரைசலின் $25.00cm^3$ பகுதி மாப்பொருளைக் காட்டியாகப் பயன்படுத்த நிறமாற்றம் நீலத்தில் இருந்து நிறமற்றதாகும் வரை $0.5mol\ dm^{-3}, Na_2S_2O_3$ கரைசலினால் நியமிக்கப்பட்டது.
(I) மேற்படி சமநிலையில் $I_2$ இன் அளவைக் காண்க.
(II) முடிவுப் புள்ளியில் அளவி வாசிப்பு யாது?


06)
(a) கரைசல் A இல் ஒவ்வொன்றும் $0.1mol\ dm^{-3}$ செறிவுடைய HCl ஐயும் போமிக்கமிலத்தையும் கொண்டுள்ளது. B,$0.2mol\ dm^{-3}$ NaOH கரைசலாகும். $25^{o}C$ இல் போமிக் அமிலத்தின் $K_a, 1.7X10^{-4} mol\ dm^{-3}$ ஆவதுடன் $K_w, 1.0x10^{-14}\ mol^2\ dm^{-6}$ ஆகும்.
(i) போமிக் அமிலத்தின் கூட்டற்பிரிகையின் அளவையும் கரைசல் A இன் pH ஐயும் காண்க.
(ii) $25cm^3$ Aயும் $12.5cm^3$ Bயும் கொண்ட கலவையின் pH ஐக் காண்க.
(iii) $25cm^3$ Aஐயும் $25cm^3$ B ஐயும் கொண்ட கலவையின் pH ஐக் காண்க.
(iv) மேற்படி கணிப்புகளில் நீர் மேற்கொண்ட எடுகோள்களைக் குறிப்பிடுக.
(b) $FeCl_3$ கரைசலொன்றின் pH,4.5 ஆகும். பினோப்த்தலின் காட்டி முன்னிலையில் இக் கரைசலின் $25cm^3$,0.2 mol $dm^{-3}$ NaOH கரைசலுடன் நியமிக்கப்பட்டது. முடிவுப் புள்ளியில் அளவி வாசிப்பு $15cm^3$ ஆகும். காட்டியின் pH வீச்சு 8.3-10.0 ஆகும்.
(i)"$FeCl_3$ அமிலமாகும்" இக்கூற்றை வியாக்கியானம் செய்க.
(ii)$Fe(OH)_3$ இன் கரைதிறன் பெருக்கத்திற்கு ஒரு கோவையொன்றை எழுதுக.
(iii) பீனொப்த்தலின் காட்டி மென்சிவப்பு நிறமாக மாற ஆரம்பிக்கும்போது $Fe^{3+}$ இன் செறிவைக் காண்க.
(iv) $25^{o}C$ இல் $Fe(OH)_3$ இன் $K_{sp}$ ஐக் காண்க
(v) இக்கணிப்பின் போது நீர் மேற்கொண்ட எடுகோள்களைக் குறிப்பிடுக.
(C) $Fe^{2+}$ அயன்களைக் கொண்ட வெளியில் எடுக்கப்பட்ட குழாய் கிணற்று நீர் வளிமண்டல ஒட்சிசனால் பின்வருமாறு ஒட்சியேற்றப்படும்.

$$Fe^{2+}(aq) \longrightarrow Fe^{3+}(aq)+e$$
$$4H_2O(l)+O_2(g)+4e \longrightarrow 4OH^-(aq)$$


குழாய்கிணற்று நீர் 100ppm $Fe^{3+}$ கொண்டிருக்கும்
(i) நீர் கலங்க ஆரம்பிக்கும் போது $Fe^{3+}$ அயன்களின் செறிவைக் காண்க.
(ii) நீர் கலங்க ஆரம்பிக்கும்போது $Fe^{3+}$ இற்கு ஒட்சியேற்றப்பட்ட $Fe^{2+}$ இன் சதவீதத்தைக் காண்க.



07)
(a) சேர்வை A ஐ மட்டும் ஆரம்பச் சேதனப் பொருளாகப் பயன்படுத்தி சேர்வை B ஐ எவ்வாறு தொகுப்பீர் எனக்காட்டுக.
$CH_3CH{=}CH_2$ (A)

$$CH_3CH{=}CH_2 - \overset{O}{\overset{\|}{C}} - \overset{H}{\overset{|}{N}} - \overset{CH_3}{\overset{|}{C}}HCH_3$$
B.

(b)  $COCH_3$ உடன் NaOH இன் தாக்கத்திற்கான பொறிமுறையை எழுதுக.

(C) சேர்வை A இன் மூலநீர்பகுப்பால் உருவாகும் விளைவுகளை நிரூபிப்பதற்கு ஒவ்வொரு சோதனைகளைத் தருக.
(d)A மூலக்கூற்றுச் சூத்திரம் $C_8H_8$ ஐ உடைய ஒரு அரோமற்றிக் ஐதரோக்காபன் ஆகும். இது கேத்திர கணிதச் சமபகுதியத்தைக் காட்டாது. இது புரோமின் நீரை நிறம் நீக்கும்.




(i)A,B,C,D,E,F,G என்பவற்றை அடையாளங் காண்க.
(ii) X,Y,Z இற்கு பொருத்தமான சோதனைப் பொருட்களை எழுதுக.
(e) பின்வருவனவற்றை விளக்குக
(i) பெரும்பாலான காபொட்சிலிக் அமிலங்கள் $PCl_5$ உடன் அமிலக் குளோரைட்டைக் கொடுக்கும். ஆனால் HCOOH,$PCl_5$ உடன் HCOCl ஐ உருவாக்காது.
(ii)  $NHCOCH_3$இன்-NHCOCH3 கூட்டம் ஒரு ஓதோ-பாரா வழிகாட்டி ஆனால்
 $CONHCH_3$ இன் $-\overset{O}{\overset{\|}{C}}NHCO_3$ கூட்டம் ஒரு மெற்றா வழிகாட்டி


## பகுதி-C இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை தருக

08)
(a) (i)கரைசல் S ஆனது $PO_4^{3-}, C_2O_4^{2-}, I^-$ என்பவற்றை அவற்றின் சோடிய உப்புக்களாகக் கொண்டுள்ளது. பின்வரும் அட்டவணைக்கு இணங்க தாக்கங்கள் நிறைவேற்றப்பட்டது.

| | பரிசோதனை | அவதானம் | அவதானத்திற்கு காரணமான கூறு |
|---|---|---|---|
| (1) | S இன் ஒரு பகுதிக்கு $CaCl_2$ மிகையாகச் சேர்க்கப்பட்டது. | (A) வீழ்படிவு | (B) |
| (2) | (1) இல் பெறப்பட்ட வடிதிரவத்திற்கு $Pb(NO_3)_2$ கரைசல் சேர்க்கப்பட்டது. | (C) | (D) |
| (3) | (1) இல் பெறப்பட்ட வீழ்படிவு $H_2SO_4$ இல் கரைக்கப்பட்டு $KMnO_4$ சேர்க்கப்பட்டது. | (E) | (F) |
| (4) | கரைசல்கள் (G) உம் (H) உம் S இன் ஒரு பகுதிக்கு சேர்க்கப்பட்டதுடன் வெப்பப்படுத்தப்பட்டது | (I) | ....... |


ஒவ்வொரு அடைப்புக்குள்ளும் தரப்பட்ட ஆங்கில எழுத்துக்களுக்கு பொருத்தமான சொல்லை/பதார்த்தத்தை உமது விடைத்தாளில் எழுதுக.
(ii) $NaNO_3$, $NaHCO_3$, $Mg(NO_3)_2$,$Pb(NO_3)_2$ என்பன நான்கு வேறுபட்ட கொள்கலன்களில் காணப்படுகின்றது.HCl ஐயும் நீரையும் பயன்படுத்துவதுடன் வெப்பப்படுத்துவதன் மூலம் ஒவ்வொன்றையும் எவ்வாறு அடையாளம் காண்பீர் எனக்காட்டுக.
(b) சிறு துகள்களாக்கப்பட்ட 2.0g உருக்கு மாதிரியொன்று மிகையான $HNO_3$ கரைசலுடன் தாக்கம் புரிய விடப்பட்டது. விளைவுக்கரைசலில் $Mn^{2+}$ முழுவதும் $MnO_4^-$ ஆக ஒட்சியேற்றப்படும் வரை $PbO_2$ உடன் வெப்பப்படுத்தப்பட்டது. இத்தாக்கத்தில் $PbO_2$ ஆனது $Pb^{2+}$ ஆக மாற்றப்பட்டது. பின்னர் கலவை காய்ச்சி வடித்த நீருடன் $250cm^3$ வரை ஐதாக்கப்பட்டது. இக்கரைசலின் $25\ cm^3$ பகுதியொன்றிற்கு 3.136g $Fe\ (NH_4)_2(SO_4)_2.6H_2O$ சேர்க்கப்பட்டு தாக்கம் முற்றுப்பெற விடப்பட்டது.பின்னர் தாக்கம் புரியாத $Fe^{2+}$ 0.02mol $dm^{-3}$ $K_2Cr_2O_7$ கரைசலினால் நியமிக்கப்பட்டது. $Fe^{2+}$ அயன்கள் தாக்கம் புரிவதற்கு $K_2Cr_2O_7$ இன் $25cm^3$ தேவைப்பட்டது.(Mn=54)
(i) Mn ஐத் தவிர்ந்த உருக்கில் காணப்படும் பிரதான கூறுகளைக் கூறுக.
(ii) $Mn^{2+}$ இற்கும் $PbO_2$ இற்கும் இடையே இடம்பெறும் தாக்கத்தின் ஈடுசெய்த சமன்பாட்டை எழுதுக.
(iii) $Fe^{2+}$ இற்கும் $MnO_4^-$ இற்கும் $Fe^{3+}$ இற்கும் $Cr_2O_7^{2-}$ இற்கும் இடையே நடைபெறும் தாக்கங்களுக்கு ஈடுசெய்த அயன் சமன்பாடுகளை தனித்தனியே எழுதுக.
(iv) உருக்கில் காணப்படும் Mn இன் திணிவுச் சதவீதத்தைக் காண்க.

(C) கரைசல் Aவேறுபட்ட கற்றயன்களைக் கொண்டுள்ளது. இக் கற்றயன்களை அடையாளம் காண்பதற்கு பின்வரும் முறை பயன்படுத்தப்பட்டது.




(i) வீழ்ப்படிவு E ஐ அடையாளங்காண்க.
(ii) D $\longrightarrow$ E மாற்றத்தைக் காட்டுவதற்கு ஈடு செய்த சமன் பாட்டை எழுதுக.
(iii) வீழ்படிவு C ஐ அடையாளங்காண்க.
(iv) C இல் காணப்படும் கற்றயனை உறுதி செய்வதற்கு பயன்படுத்தக் கூடிய ஒரு இரசாயனச் சோதனையையும் அவதானத்தையும் தருக.
(v) H இல் கடும் நீல நிறத்துக்குக் காரணமான சேர்வை/சிக்கலை அடையாளங்காண்க.
(vi) H இல் உள்ள கற்றயனை எவ்வாறு உறுதி செய்வீர்?
(vii) B இல் பச்சை நிறத்திற்கு காரணமான சேர்வையை அடையாளங்காண்க.
(viii) வீழ்படிவு G ஐ அடையாளங்காண்க.
(ix) வீழ்படிவு Gஇல் இருந்து பெறக் கூடிய உலோகத்தை எவ்வாறு பிரித்தெடுப்பீர் எனச் சுருக்கமாக விளக்குக.


09)
a) இவ் வினா பின்வரும்ஒருங்கிணைந்த தொழிற்சாலையை அடிப்படையாகக் கொண்டது.




G மூலமாவதுடன் இது ஒரு வளமாக்கியாகும்.
G குளிர்ந்த NaOH(aq) உடன் தாக்கமில்லை. ஆனால் NaOH(aq) உடன் வெப்பப்படுத்தும் போது மூலவாயுவை விடுவிக்கும்.
I ஐயும் J ஐயும் தொற்று நீக்கியாகப் பயன்படுத்த முடியும்.
(i) பின்வருவனவற்றிற்கு ஈடுசெய்த சமன்பாடுகளை எல்லா நிபந்தனைகளுடனும் (இருப்பின்) எழுதுக.
i) D (s) இல் இருந்து E(g) ஐப் பெறல்.
ii) F(s) இல் இருந்து J(s) ஐப் பெறல்.
(ii)

$$C_2H_2 \xrightarrow[60^{\circ}C]{Hg^{2+}\ ஐதான\ H_2SO_4} W \xrightarrow{G(s)} X$$

X ஒரு வெப்பமிறுக்கும் பல்பகுதியம் W ஐயும் அடையாளங்காண்க.
(iii) W ஐப் பயன்படுத்தி பெறக் கூடிய இன்னுமோர் வெப்பமிறுக்கும் பல்பகுதியத்தைக் கூறுக.
(b) (i) பொலியஸ்ரர் ஆடையுற்பத்தியில் பயன்படுத்தப்படுகிறது.
(I) பொதுவான பொலியஸ்ரரில் ஒரு பகுதியங்கள் யாவை?
(II) பொலியஸ்ரரின் மீளவரும் அலகு யாது?
(ii) நைதரசனைக் கொண்டுள்ள இயற்கை மற்றும் தொகுப்புக்குரிய பல்பகுதியங்களுக்கு ஒவ்வொரு உதாரணங்களைத் தருக.
(iii) Nylone -1, 6, Nylon-6,6 ஆகியவற்றுக்கு கட்டமைப்புக்களை வரைக.
(iv)Nylon,N-Hபிணைப்புக்களைக் கொண்டிருந்த போதும் நீரில் நனையாது ஏன் என விளக்குக.
(C) D ஐப் பெறுவதற்கு பின்வரும் கலத்தில் A இன் ஒரு நீர்க்கரைசல் மின் பகுக்கப்படும்.




i) W,X,Y,Z,R,Q என்பவற்றை அடையாளங்காண்க.
ii) அனோட்டிலும், கதோட்டிலும் பயன்படுத்தப்படும் உலோகங்கள் யாவை?
iii) மின் பகுப்புச் செயற்பாட்டிற்கான மொத்தத் தாக்கத்தை எழுதுக.
iv) S என்ன முக்கியத்தைக் கொண்டிருக்கும்?
(D) அனோட்டிலும் கதோட்டிலும் கரைசல்கள் வெவ்வேறு மட்டங்களில் பேணப்படுவது ஏன்?
தரப்பட்ட ஒரு யூரியா மாதிரியில் உள்ள நைதரசன் சதவீதத்தை துணிவதற்காக ஒரு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.
* m g யூரியா a mol NaOH (மிகை) உடன் தாக்கம் புரியவிடப்படும். தாக்கம் முற்றுப் பெற்ற பின் விளைவுக் கரைசல் $100\ cm^3$ இற்கு ஐதாக்கப்பட்டது.சாத்தியமான வாயு முற்றாக அகற்றுவதற்கு அனுமதியளிக்கப்பட்டது.
*மேற்படி கரைசலில் $50cm^3$ கரைசல் ஒன்றுடன் பினோப்தலின் காட்டி முன்னிலையில் நியமிக்கப்பட்டது.முடிவுப் புள்ளியில் HCl இன் b mol தேவைப்பட்டது.
*பின்னர் அதே கரைசல் அதே HCl கரைசலால் மெதைல் செம் மஞ்சள் காட்டி முன்னிலையில் நியமிக்கப்பட்டது. இதன் போது c mol HClதேவைப்பட்டது.
N= 28, O =16, C=12, H =1
(i) இச் செயற்பாட்டில் இடம் பெறும் சாத்தியமான எல்லாத் தாக்கங்களுக்கும் ஈடு செய்த சமன்பாடுகளை எழுதுக.
(ii) யூரியா மாதிரியில் காணப்படும் நைதரசனின் சதவீதத்தைக் காண்க.

10)
a) பின்வரும் தாக்கங்களை ஈடு செய்வதுடன் தாக்க நிபந்தனைகளையும் தருக.
i) $S+HNO_3 \longrightarrow$ ii) $NH_3 + I_2 \longrightarrow$
iii) $H_2O_2 + MnO_2 \longrightarrow$ iv) $NH_3 + O_2 \longrightarrow$
b) A,B,C என்பன் மின்னிரசாயனத் தொடரில் அடுத்தடுத்துள்ள மூலகங்களாகும். A உயர்ந்த தாழ்த்தல் மறை அழுத்தத்தை உடையது. மின் வாய் ஒன்றின் அழுத்தமும் இரண்டு கலங்களின் நியமக்கல அழுத்தங்களும் பின்வருமாறு,
$E_{B^{3+}(aq)/B(s)} = -0.34\ V$

| கலம் | emf/v |
|---|---|
| $A^{2+}(aq)/A(s)$ உம் $B^{3+}(aq)/B(s)$ உம் | 0.2 |
| $B^{3+}(aq)/B(s)$ உம் $C^{2+}(aq)/C(s)$ உம் | 0.51 |

i) $A^{3+}(aq)/A(s)$ இன் மின்வாய் அழுத்தத்தைக் காண்க.
ii) $C^{2+}(aq)/C(s)$,$B^{3+}(aq)/B(s)$ என்பவற்றால் கட்டமைக்கப்படும் கலத்திற்கு பொருத்தமான அனோட்டு, கதோட்டு என்பவற்றிற்கு தாக்கங்களை எழுதுக.
iii)$A^{2+}(aq)/A(s)$, $C^{2+}(aq)/C(s)$ ஆகியவற்றை ஒரு உப்புப் பாலத்துடன் இணைக்கப்பட்டிருப்பது
iv) $A^{2+}(aq)/A(s)$,$B^{3+}(aq)/B(s)$ என்பவற்றை பயன்படுத்தி உருவாக்கப்பட்ட கலத்தின் emf இல் அயன்களின் செறிவின் பாதிப்பை விளக்குக.
(c) (i) ஊக்கியின் சிறப்பியல்பு ஐந்தைக் கூறுக.
(ii) ஓரின மற்றும் பல்லின ஊக்கி எனும் பதங்களை வரைவிலக்கணப்படுத்துக.
(iii) தாக்கம் ஒன்றின் வீதத்தை ஊக்கிகள் எவ்வாறு அதிகரிக்கும் என விளக்குக.

# போர்க்குற்றங்கள் தொடர்பான சிறப்பு நீதிமன்றக் கட்டமைப்பை இலங்கையே தீர்மானிக்க வேண்டும்

## அமெரிக்கா அறிவிப்பு

(கொழும்பு)

**போர்க்குற்றங்கள் தொடர்பான சிறப்பு நீதிமன்றத்தின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தை தீர்மானிப்பது, இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்த விடயம் என்று, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் தொழிலாளர் விவகாரங்களுக்கான உதவிச் செயலர் ரொம் மாலினோவ்ஸ்கி தெரிவித்துள்ளார்.**



அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவிச்செயலர் நிஷா பிஸ்வாலுடன் இணைந்து இலங்கைக்கு மேற்கொண்ட பயணத்தின் முடிவில் நேற்று முன்தினம் கொழும்பில் செய்தியாளர்களைச் சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

போர்க்குற்றங்கள் தொடர்பான சிறப்பு நீதிமன்றத்தில் வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கும் விவகாரம் தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த ரொம் மாலினோவ்ஸ்கி, “ஜெனிவா தீர்மானம் இலங்கையின் இறைமையை முழுமையாக மதிக்கிறது. சிறப்பு நீதிமன்றத்தின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தை தீர்மானிப்பது, இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்த விடயம்.

தமது இறைமைக்குட்பட்ட வரையறைக்குள் இருந்து கொண்டே, பல்வேறு மட்டங்களில் அனைத்துலக பங்களிப்பைப்பெற்றுக்கொள்ள முடியும் என்று இலங்கை வாக்குறுதியைக் கொடுத்திருக்கிறது.

இலங்கை நீதிமன்றங்களின் மீதான அவநம்பிக்கைகளால் தான் இந்த வாக்குறுதி அளிக்கப்பட்டது.

மீண்டும் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவது என்பதை இலக்காகக் கொண்டு தான், ஒட்டுமொத்த பொறுப்புக்கூறல் செயல்முறைகள் தொடர்பாகவும், இந்த வாக்குறுதி புரிந்துணர்வு அடிப்படையில் கொடுக்கப்பட்டது.

நீதிமன்றங்களில் அனைத்துலக பங்களிப்பு குறிப்பிடத்தக்க ஒரு விடயமாக இருக்கவில்லை.

ஏனைய நாடுகளுக்கு இலங்கை தனது நீதித்துறை நிபுணத்துவப் பங்களிப்பை வழங்கியிருக்கிறது. ஒரு வேளை இலங்கை அதிலிருந்து பயன்பெறலாம்” என்றும் அவர் தெரிவித்தார். (இ-10)

# நான் சிறை வைக்கப்பட்ட போது சிறை உணவைத்தான் உண்டேன்

## சரத் பொன்சேகா தெரிவிப்பு

அன்றைய மகாராஜாக்கள் இன்று சிறைக்கு நாமலுக்கு உணவுகளை எடுத்துச் செல்வதாக அமைச்சர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

மேலும் தான் 8 மாதங்கள் சிறையில் இருந்த போது சிறை உணவையே உண்டதாகவும், ஆனால் இன்று நாமல் ராஜபக்ஷவுக்கு வீட்டு உணவுகள் உண்பதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது நாட்டில் முன்னெடுக்கப்படும் கைதுகளுக்கு அரசியல் தலையீடுகள் காரணம் என்றும், இவை சட்டரீதியற்ற கைதுகள் என்றும் தெரிவித்து வருகின்றனர்.

அதில் எவ்வித உண்மையும் இல்லை என்று தெரிவித்துள்ள அவர், தன்னை கைது செய்தமை அடிப்படையற்ற குற்றச்சாட்டுகளை முன்வைத்து என்றும், ஆனால் தற்போது நடக்கும் கைதுகள் அனைத்தும் சட்டரீதியானவை என்றும் அமைச்சர் சரத் பொன்சேகா மேலும் தெரிவித்தார். (இ-10)

# ஷிராந்தியையும் சட்டத்தின் முன் அவசியம் கொண்டுவரவேண்டும்

நாமல் ராஜபக்ஷ கைது செய்யப்பட்ட நிதிமோசடி குற்றச்சாட்டு தொடர்பாக அவரது தாயாரான ஷிராந்தி ராஜபக்ஷவையும் விசாரித்து சட்டத்திற்கு முன் கொண்டு வரவேண்டுமென சமூக நீதிக்கான மக்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவ்வமைப்பின் பிரதிநிதியான காமினி வியாங்கொட இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்துரைத்த அவர்,

விஹாரைகளுக்கு சில் துணிகள் விநியோகித்தது எப்படி இலஞ்சமாகுமென பொது நிர்வாக அலுவல்கள் அமைச்சின் முன்னாள் செயலாளர் கூறியுள்ளார். அப்படியானால் சமுர்த்தியும் இலஞ்சம் தானே எனக் கூறியுள்ளார்.

அமைச்சு ஒன்றின் செயலாளரே இவ்வாறு கூறும் போது நாடு எந்தளவிற்கு அதளபாதாளத்திற்கு சென்று கொண்டிருக்கின்றது என்பதனை உணரமுடிகிறது எனவும் காமினி வியாங்கொட தெரிவித்துள்ளார்.



இதேவேளை அரச நிர்வாகம் முற்றாக வலுக்குன்றிப் போயிருப்பதாக இவ் ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கூறியுள்ளார். அதிகாரிகளின் கட்டமைப்பு காரணமாகவே அரசு நிர்வாகம் இவ்வாறு நிலை குலைந்து போயிருப்பதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

அரசாங்கம் ஊழலில் ஈடுபட்ட தனது நெருங்கிய சகாக்களை பாதுகாக்க முயற்சிக்கக் கூடாது எனவும் இந்த ஊடக சந்திப்பில் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.(இ-10)

# இன்று ஒரு தகவல்

## நம்மிடம் இருக்க வேண்டிய மூன்று ஆற்றல்கள்

தேர்வில் தோல்வி அடைந்துவிட்ட மூன்று பேரை நாம் சந்திக்கின்றோம் என்று வைத்துக்கொள்ளுங்கள்.

முதலாமவர் தேர்வில் தோல்வி அடைந்து விடுவேன் என்று நான் எண்ணிக்கூடப் பார்க்கவில்லை. நான் நிச்சயம் வென்றுவிடுவேன் என நம்பினேன். ஆனால் இப்படி ஆகிவிட்டதே என்று தலையைத் தொங்கப் போட்டுக் கொள்வார்.

இரண்டாமவர் நான் தேர்வில் தோல்வி அடைந்ததைப் பற்றிக்கூடக் கவலைப்படவில்லை. ஆனால் நீ பாஸா என்று என்னைக் கேட்பவர்களை எப்படி நான் சமாளிப்பது? அவர்கள் முகத்தில் நான் எப்படி விழிப்பது என்பார் கன்னத்தில் கையை வைத்துக் கொண்டு.

மூன்றாமவரோ யார் கேட்டாலும் நான் பதில் சொல்வேன். ஆனால் அடுத்த தேர்விலாவது நான் வெற்றியடைய வேண்டுமே! என்று கவலைப்படுவார்.

பிரச்சினை ஒன்றுதான். ஆனால் மூவருக்கு மூன்றுவிதமான பார்வைகள்.

தேர்வில் தோல்வி என்றில்லை. பணத்தைத் தொலைத்திருக்கட்டும். எதிர்பார்த்தது நடக்காமல் போயிருக்கட்டும். சற்றும் எதிர்பாராதது நடந்திருக்கட்டும். மனம் புண்படும்படியாக எவரேனும் பேசியிருக்கட்டும். இப்படிக் கவலைக்குரிய அம்சம் எதுவாக வேண்டுமானாலும் இருக்கட்டும். அவை எல்லாம் மேற்கூறியபடி மூன்று நிலைகளில் கவலைகளை ஏற்படுத்தும்.

ஒரு முக்கியமான பொருளைத் தொலைத்துவிட்டு அல்லது இழந்துவிட்டு நிற்கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அது தொடர்பாகச் சாதாரணமாக விமர்சனம் செய்துவிட்டுப் போகிறவர்கள் மிகச் சிலரே. மாறாக நம் துன்பம் பலமடங்காக ஆகும்படி பேசி எரிச்சலைக் கிளப்புகிறவர்கள் மிகப் பலர்.

ஆக எந்த ஒரு கவலைக்குரிய அம்சம் நம்மிடத்திலே தோன்றினாலும் சரி அதை முதலில் தாங்கிக்கொள்ளும் ஆற்றலை நாம் முதலில் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இது தொடர்பாக ஏற்படக்கூடிய விளைவுகளைச் சந்திக்கத் தயாராகும் ஆற்றலை அடுத்தபடியாக வளர்த்துக் கொள்ள வேண்டும். வெறுமனே புலம்பிப் புண்ணியமில்லை.

மூன்றாவது ஆற்றலாக அந்தப் பிரச்சினையைச் சரிக்கட்டுவது எப்படி, ஈடுகட்டுவது எப்படி என்பதைத் தெரிந்து வைத்துக் கொண்டு அத்தகைய முயற்சிகளை மேற்கொள்வதோடு அந்தக் கஷ்டத்திலிருந்து நிரந்தரமாகவோ தற்காலிகமாகவோ விடுபட வேண்டும்.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் கவலை தரும் செய்தியைத் தாங்கும் ஆற்றலையும் அதன் விளைவுகளைத் தாங்கும் ஆற்றலையும் அதிலிருந்து விடுபடும் ஆற்றலையும் ஒரு சேரப் பெற்றிருக்க வேண்டும்.

செய்தியைத் தாங்குவதற்கே நாம் சோர்ந்துவிட்டால் அதன் விளைவுகளைத் தாங்காமல் நாம் மீளவே முடியாமல் போய்விடும். பலவீனப்பட்ட நம்மை அவ்விளைவுகள் இருக்குமிடம் தெரியாமல் செய்துவிடக்கூடும்.

இப்படிப் படிப்படியாக மூன்று தினங்களில் சுயமாக மன வைத்தியம் செய்து கொள்ள முடியாதவர்கள் தாம் வாழ்க்கையில் மீள முடியாத இடத்திற்குப் போய்விடுகிறார்கள்.

இந்த மூவகை ஆற்றல்களைக் கொண்டிருப்பவர்களோ கவலைகள் கடலலைகளெனத் தொடர்ந்து வந்தாலும் கலங்குவதில்லை.

**லேனா தமிழ்வாணன்**

## பெண்ணின் கத்திக்குத்துக்கு இலக்கான தாயொருவர் பலி

(கொழும்பு)

பெண்ணொருவரின் கத்திக்குத்துக்கு இலக்காகி திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஐந்து பிள்ளைகளின் தாயொருவர், நேற்று முன்தினம் இரவு 8.45 மணியளவில் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம், திருகோணமலை சேனையூர் பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் 3.15 இற்கு இடம்பெற்றுள்ளது.

கத்திக்குத்துக்கு இலக்கான நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அந்தப் பெண், சம்பூர்- சேனையூர் பகுதியைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தாயாரான இளங்குமார் சாந்தமலர் (41 வயது) என, பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்துத் தெரியவருவதாவது,

கத்திக்குத்துக்கு இலக்கான குறித்தபெண், இரண்டு வருடங்களுக்கு முன்னர் பக்கத்து வீட்டுப் பெண்ணின் மகளுக்கு இரண்டு இலட்சம் ரூபாயை, வட்டிக்குப் பெற்றுக்கொடுத்துள்ளார்.

அந்தப் பணத்தை மீளச் செலுத்தாமையால் அதுதொடர்பில், பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு முறைப்பாடு செய்யப்பட்டதில் இருந்து, பக்கத்துவீட்டுப் பெண், ஒவ்வொரு நாளும் திட்டிக் கொண்டே இருந்துள்ளார்.

இந்நிலையே இவ்விருவருக்கும் இடையில் குரோதம் வளரக் காரணமானது.

இந்த விவகாரம் தொடர்பில் வாக்குவாதம் ஏற்பட்டு, அது கைகலப்பாக மாறியுள்ளது.

இந் நிலையிலேயே, இந்தக் கத்திக்குத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தனர். (இ-10)

## தீவிரவாத தாக்குதல் எதிரொலி

# பிரான்ஸில் 3 மாதங்களுக்கு மேலும் அவசரநிலை நீடிப்பு

### ஜனாதிபதி ஹாலண்டே அறிவிப்பு

(பாரிஸ்)

பிரான்ஸ் நாட்டின் நைஸ் நகரில் நடத்தப்பட்ட வாகன தாக்குதலில் 130 இற்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்ட நிலையில் நாடு முழுவதும் அமுலில் இருக்கும் அவசரநிலை சட்டம் மேலும் மூன்று மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி பிராங்கோயிஸ் ஹாலண்டே அறிவித்துள்ளார்.



பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 13 ஆம் திகதி இசைக் கச்சேரி அரங்கு, காற்பந்து மைதானம், ஹோட்டல்கள் என 6 இடங்களில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இந்த கொடூர தாக்குதலில் 125இற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர். இதனையடுத்து அந்நாட்டில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டது.

பின்னர் பிரான்ஸ் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு அவசரநிலை பிரகடனம் மேலும் 3 மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டது. அடுத்தடுத்து, நீடிக்கப்பட்டுவந்த இந்த அவசரநிலை சட்டக் காலம் எதிர்வரும் 26 ஆம் திகதியுடன் முடிவடைவதாக இருந்தது.

இந்நிலையில், நேற்று நைஸ் நகரில் நடத்தப்பட்ட வாகன தாக்குதலில் 80-க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்ட பின்னர் தற்போது அமுலில் இருந்து வரும் அவசரநிலை சட்டம் மேலும் மூன்று மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது. இதற்கான அறிவிப்பை பிரான்ஸ் ஜனாதிபதி பிராங்கோயிஸ் ஹாலண்டே வெளியிட்டார். (இ-10)

# தமிழ் சினிமா வரலாறு

## சிவாஜியின் 125ஆவது படம் 'உயர்ந்த மனிதன்'

"சிவந்தமண்", ஸ்ரீதர் டைரக்ஷனில் வெளிநாடுகளில் உருவாக்கப்பட்ட படம். சிவாஜிக்கு ஜோடி காஞ்சனா.

நூறு நாட்கள் ஓடிய இப்படத்தில் ''பட்டத்து ராணி'' என்ற பாடலும் அந்தக் காட்சி படமாக்கப்பட்ட விதமும் மிகச் சிறப்பானது.

**வியட்நாம் வீடு**

சிவாஜிகணேசனின் சொந்த தயாரிப்பு "வியட்நாம் வீடு" மேடைகளில் வெற்றிகரமாக அவர் நடித்த நாடகம். குடும்பத்தலைவர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றபின் நடைபெறக் கூடிய நிகழ்ச்சிகளை வைத்து இந்நாடகத்தை கே.சுந்தரம் எழுதியிருந்தார். சிவாஜி கணேசனும் பத்மினியும் பிரமாண்ட தமிழ்பேசி அருமையாக நடித்தனர். டைரக்ஷன் பி.மாதவன்.

கதை-வசனத்தை சிறப்பாக எழுதிய சுந்தரம், பின்னர் ''வியட்நாம் வீடு'' சுந்தரம் என்று புகழ் பெற்றார்.

**எதிரொலி**

கே.பாலசந்தர் டைரக்ஷனில் சிவாஜி நடித்த ஒரே படம் "எதிரொலி" இது சிவஜி படமாகவும் இல்லை. பாலசந்தர் படமாகவும் இல்லை. எனவே தோல்வியைத் தழுவியது.

ராமன் எத்தனை ராமனடி, எங்கிருந்தோ வந்தாள், சொர்க்கம் ஆகியவை நூறு நாட்கள் ஓடிய வெற்றிப்படங்கள்.




ராஜாமணிஅம்மாள் நடுவே அமர்ந்திருக்க ஒரு புறம் சிவாஜி மறுபுறம் எம்.ஜி.ஆர்.

"எங்கிருந்தோ வந்தாள்" படத்தில் சிவாஜியோடு இணைந்து நடித்தவர் ஜெயலலிதா. இந்தப்படத்தில் ஜெயலலிதாவின் நடிப்பு மிகப்பிரமாதமாக அமைந்து பல பரிசுகளை வாங்கிக் கொடுத்தது.

**திலீப்குமார்**

கங்கா- ஜமுனா என்ற பெயரில் நடிகர் திலீப்குமார் இந்தியில் எடுத்த படத்தை தமிழில் இருதுருவம் என்ற பெயரில் படமாக்கினார் பி.எஸ். வீரப்பா. இதில் சிவாஜிக்கு ஜோடி பத்மினி. இந்திப் படம் ஓடிய அளவுக்குத் தமிழ்ப் படம் ஓடவில்லை.

**சாவித்திரியின் பிராப்தம்**

தெலுங்கில் சாவித்திரி-நாகேஸ்வரராவ் நடித்த மூகமனசுலு (ஊமை உள்ளங்கள்) என்ற படம் மகத்தான வெற்றி பெற்று வெள்ளி விழா கொண்டாடியது. பூர்வஜென்மத்தைப் பற்றிய கதை.

அதை தமிழில் தயாரிக்க விரும்பினார் சாவித்திரி. நாகேஸ்வரராவ் நடித்த வேடத்திற்கு சிவாஜி கணேசன் ஒப்பந்தமானார்.

ஆரூர்தாஸ் வசனம் எழுதினார். கண்ணதாசன் பாடல்களை எழுத எம்.எஸ். விஸ்வநாதன் இசை அமைத்தார். படத்தை சாவித்திரியே டைரக்ட் செய்தார்.

நடிப்பில் தன்னிகரற்று திகழ்ந்த சாவித்திரியின் இந்தப் படம் தெலுங்கில் 25 வாரம் ஓடிய படத்தின் தமிழ்ப் பதிப்பு- அதிர்ச்சி தோல்வியை தழுவியது.

சவாலே சமாளி மல்லியம் ராஜகோபால் கதை வசனத்திலும் டைரக்ஷனிலும் உருவான படம் சிவாஜியும் ஜெயலலிதாவும் இணைந்து நடித்தனர்.

இனிய பாடல்களைக் கொண்ட இப்படம் நூறு நாட்களைக் கடந்து வெற்றிகரமாக ஓடியது.

**வசந்தமாளிகை**

விஜயா சுரேஷ் கம்பைன்ஸ் பிரமாண்டமாகத் தயாரித்த வசந்த மாளிகை சிவாஜியின் மாபெரும் வெற்றிப் படங்களில் ஒன்று. இதில் சிவாஜியின் ஜோடி வாணிஸ்ரீ. பால முருகன் வசனம் எழுத கே.வி.மகாதேவன் இசை அமைத்தார். டைரக்ஷன் கே.எஸ்.பிரகாஷ்ராவ்.

தமிழ்நாட்டில் பல இடங்களில் வெள்ளி விழா கொண்டாடிய வசந்த மாளிகை இலங்கையில் 41 வாரம் ஓடியது.

**தாயார் மறைவு**

வெற்றி பவனி வந்து கொண்டிருந்த சிவாஜியின் வாழ்க்கையில் 1972 ஒகஸ்ட் மாதத்தில் பெரும் சோதனை ஏற்பட்டது.

அவருடைய தாயார் ராஜாமணி அம்மாளுக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டது. டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்தனர். ஆயினும் பலன் இன்றி ஒகஸ்ட் மாதம் 24 ஆம் திகதி இரவு 9 மணிக்கு மரணம் அடைந்தார்.

உயிர் பிரியும்போது சிவாஜிகணேசன், அவர் மனைவி கமலாம்பாள், அண்ணன் வி.சி.தங்கவேலு, தம்பி வி.சி.சண்முகம், தந்தை சின்னையா மன்றாயர் மற்றும் குடும்பத்தினர் உடன் இருந்தனர்.

**கருணாநிதி**

தகவல் தெரிந்ததும் முதலமைச்சர் கருணாநிதி சிவாஜியின் வீட்டுக்கு விரைந்து சென்றார். அவரைப் பார்த்ததும் சிவாஜி அவரைக் கட்டிப்பிடித்துக் கதறி அழுதார். அவருக்கு கருணாநிதி ஆறுதல் கூறினார்.

முதலமைச்சருடன் அரங்கண்ணல், அன்பில் தர்மலிங்கம் ஆகியோர் உடன் சென்றிருந்தனர்.

(தொடரும்)

# இன்னும் 5 ஆண்டுகளுக்கு அரசை அசைக்க முடியாது!

## நீதியமைச்சர் விஜயதாச நம்பிக்கை

(கொழும்பு)

**இன்னும் ஐந்து வருடங்களுக்கு இந்த அரசாங்கத்தை சட்டரீதியாக எவராலும் வீழ்த்த முடியாது. இன்று பிரதான இரண்டு கட்சிகளும் இணைந்து தேசிய அரசாங்கத்தை அமைத்துள்ளன. இந்நிலையில் வேறு கட்சிகள் இணைந்து கூட்டணி அமைப்பதில் பலன் இல்லை என்று நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



மஹறமகவில் நேற்று முன்தினம் நடை பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

நல்லாட்சி அரசாங்கத்தின் அபிவிருத்தி பயணத்தை ஸ்தம்பிக்கச் செய்வதற்கு சுயநல அரசியல்வாதிகள் சிலர் முயற்சித்து வருகின்றனர்.

அவர்கள் தாம் செய்த ஊழல்களை மறைப்பதற்காக அரசாங்கத்தை ஸ்திரமின்மையை நோக்கி இட்டுச் செல்ல முயற்சிக்கின்றனர். இன்னும் ஐந்து வருடங்களுக்கு இந்த அரசாங்கத்தை சட்டரீதியாக எவராலும் வீழ்த்த முடியாது.

கடந்த 70 வருடங்களாக இந்த நாட்டை ஐக்கிய தேசியக் கட்சியும்,ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் மாறிமாறி ஆட்சி செய்தன. இன்று அந்த இரண்டு கட்சிகளும் இணைந்து தேசிய அரசாங்கத்தை அமைத்துள்ளன. இந்நிலையில் வேறு கட்சிகள் இணைந்து கூட்டணி அமைப்பதில் பலன் இல்லை.

எமது தேசிய அரசாங்கம் மக்களின்அடிப்படைத்தேவைகளை பூர்த்தி செய்து வருகிறது.

நாம் இன்று மக்களின் வாழும் உரிமை, ஊடக சுதந்திரம், நீதித்துறை சுயாதீனம் என்பவற்றை உறுதிப்படுத்தியுள்ளோம். இந்த நாட்டில் காணப்பட்ட மிகவும் கீழ்த்தரமான அரசியல் கலாசாரத்தை நாம் இல்லாதொழித்துள்ளோம்.

ஐரோப்பாவிடமிருந்து ஜீ.எஸ்.பி. சலுகையை பெறுக் கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளோம்.

எமது அரசாங்கம் வற்வரியை அதிகரித்து மக்களை சுமைகளுக்குள் தள்ளியுள்ளது என்று சிலர் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர்.

நாம் மக்களின் மீது பொருளாதார சுமையை சுமத்தவில்லை. அத்தியாவசியப் பொருட்களுக்கான வற்வரியை நீக்கியுள்ளோம்.

கடந்த அரசாங்கம் பாரிய கடன்களை பெற்றுவிட்டது. அவற்றின் சாபம் எமது அரசாங்கத்திற்கு வந்துள்ளது.

தேசிய வருமானத்தில் 97 வீதம் கடனும் வட்டியும் செலுத்துவதற்கு பயன்படுத்தப்படுகிறது. அம்பாந்தோட்டை துறைமுகம், மத்தள விமான நிலையம் போன்ற தோல்வியடைந்த திட்டங்கள் எமது அரசாங்கத்திடம்இல்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 780

தர்மா




றஜீவன்

ஆண்களின் சிரிப்பினை விட
பெண்களின் புன்னகை
அழகானது....ஆனால்
பெண்களின் கண்ணீரை விட
ஆண்களின் ஒருதுளி கண்ணீர்
வலி நிறைந்தது.

சுதா



ஒருவர் போதையில் தள்ளாடியபடி
ஒரு கரண்ட் கம்பத்து அடியில
நின்னுகிட்டு.
ஏய் கதவ தொறடி உன் புருஷன்
வந்திருக்கேன்.
ஏய் கதவ தொறடி உன் புருஷன்
வந்திருக்கேன்!
ஏய் கதவ தொறடி உன் புருஷன்
வந்திருக்கேன்!
பக்கத்துல இருந்த மற்றொரு
குடிகாரன்:-ஏம்பா,வீட்டுல
யாரும் இல்ல போல இருக்கு!
இவன்:-இல்ல பிரதர் வீட்டிலதான்
இருக்கா...
மாடில லைட் எரியுது பாருங்க!!!

உஷாந்தன் நெய்மார்



பசித்தவனுக்கு தான் தெரியும்
பசியின் கொடுமை..
விழுந்தவனுக்குத்தான் தெரியும்
வலியின் வேதனை..
இழந்தவனுக்குத்தான் தெரியும்
உறவின் பெருமை..

சர்மி சர்மிளா



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# போதையில் வாகனம் செலுத்திய பிக்கு கைது

அதிக மது போதையில் பிக்கு ஒருவர் செலுத்திய கார் நேற்று முன்தினம் வெலிப்பன பிரதேசததில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

வெலிப்பன - முனமல்வத்த பகுதியில் கார் ஒன்று நேற்றைய தினம் விபத்துக்குள்ளாகியிருந்ததை கண்ட பிரதேச மக்கள் பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து சம்பவ இடத்திற்கு வந்து சோதனைகளை மேற்கொண்ட பொலிஸார் அங்கு பிக்கு ஒருவர் காயமடைந்த நிலையில் இருப்பதை அவதானித்துள்ளனர்.

குறித்த பிக்குவே அதிக மது போதையில் காரினை செலுத்தி வந்துள்ளதாக அறிந்துகொண்ட பொலிஸார் குறித்த பிக்குவை கைது செய்துள்ளனர்.

எனினும் குறித்த பிக்கு எச்சரிக்கையுடன் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வெலிப்பன பிரதேசத்தின் விகாரை ஒன்றைச் சேர்ந்த குறித்த பிக்கு சமய நிகழ்வொன்றில் கலந்து கொண்டே இவ்வாறு மது அருந்திய பின்பு தனது காரில் அதிவேகப்பாதையில் பயணிக்கும் பொருட்டு வெலிப்பன நுழைவாயிலுக்குள் நுழைய முற்படுகையிலே இந்த விபத்து இடம் பெற்றிருப்பதாகவும் வெலிப்பன பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-10)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-16.07.2016

| நாடு | நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| அமெரிக்கா | டொலர் | 144.09 | 147.73 |
| பிரிட்டன் | பவுண்ட் | 192.73 | 199.24 |
| ஐரோப்பிய ஒன்றியம் | ஈரோ | 159.22 | 165.28 |
| சுவிட்சர்லாந்து | பிராங் | 145.87 | 151.72 |
| கனடா | டொலர் | 111.02 | 115.44 |
| அவுஸ்திரேலியா | டொலர் | 109.10 | 113.99 |
| சிங்கப்பூர் | டொலர் | 106.78 | 110.74 |
| இந்தியா | ரூபா | 2.1715 | ------- |
| சீனா | யுவான் | 21.7299 | -------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 384.9212 |
| குவைத் | டினார் | 480.6897 |
| ஓமான் | ரியால் | 377.2237 |
| கட்டார் | ரியால் | 39.8863 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.7292 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.5443 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 130 | 150 | 110 | 120 | 120 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 80 | 110 | 100 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 600 | 800 | 600 | 600 | 600 | 800 | 500 |
| தக்காளி | 180 | 200 | 140 | 200 | 160 | 160 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 100 | 80 | 100 | 90 | 100 | 100 |
| கோவா | 180 | 200 | 120 | 200 | 140 | 160 | 150 |
| கரட் | 200 | 200 | 150 | 240 | 200 | 240 | 200 |
| பூசணி | 140 | 180 | 140 | 160 | 140 | 200 | 150 |
| புடோல் | 120 | 100 | 60 | 100 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 100 | 140 | 100 | 120 | 120 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 100 | 160 | 110 | 120 | 120 | 120 | 140 |
| பெரிய வெங்காயம் | 80 | 110 | 70 | 80 | 80 | 100 | 90 |
| பாகற்காய் | 300 | 400 | 200 | 300 | 240 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 50 | 160 | 80 | 100 | 100 |
| கருணைக் கிழங்கு | 150 | 200 | — | 200 | 130 | 160 | 120 |
| பயற்றங்காய் | 180 | 200 | 120 | 120 | 120 | 100 | 200 |
| லீக்ஸ் | 160 | 200 | 140 | 160 | 160 | 160 | 120 |
| பீற்றூட் | 150 | 120 | 100 | 80 | 120 | 160 | 150 |
| கறிமிளகாய் | 400 | 600 | 320 | 300 | 240 | 320 | 200 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 400 | 500 | 400 | 360 | 500 |
| போஞ்சி | 200 | 300 | 130 | 160 | 160 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 100 | 100 | — | 120 | 100 |
| கீரை – 1பிடி | 30 | 50 | 20 | 30 | 40 | 30 | 25 |
| தேசிக்காய் | 140 | 300 | 120 | 140 | 150 | 160 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 40 | 15-25 | 40 | 25 | 20-30 | 40 |
| இராசவள்ளி | 180 | 300 | 250 | — | 250 | — | 160 |
| வெங்காயப்பூ | 200 | 300 | 140 | 200 | 240 | 240 | 200 |
| முள்ளங்கி | 50 | 100 | 50 | 60 | 80 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 10 | 30 | 40 | 40 | 25 |
| வலலாரை | 10 | 20 | 10 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 50 | 100 | 30 | 60 | 60 | 60 | 60 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் பாலசிங்கம் மரணம் 228



### பதற்றம்

கிழக்கு மட்டக்களப்பின் வாகரையில் நடந்த இராணுவத் தாக்குதலில் அப்பாவி தமிழர்கள் 65 பேர் பலியானதைக் கண்டித்து கொழும்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்தப் போராட்டத்தில் தீவிர பங்கு வகித்தவர் ரவிராஜ் என்பது குறிப்பிடத்தக்கது.

விடுதலைப்புலிகள் கடற்படையினருடன் தீவிர தாக்குதலில் ஈடுபட்டு இருந்த நேரத்தில் ரவிராஜ் சுட்டுக் கொல்லப்பட்டு இருக்கிறார்.

கடந்த கிறிஸ்துமஸ் பண்டிகை தினத்தன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த மற்றொரு எம்.பியான ஜோசப் பரராஜசிங்கம் சுட்டுக்கொல்லப்பட்டார். அவரைக் கொன்றவர்கள் இன்னும் கைது செய்யப்படவில்லை. இந்த நிலையில் மேலும் ஒரு தமிழ் எம்.பி. சுட்டுக் கொல்லப்பட்டது கொழும்பில் பதற்றத்தை ஏற்படுத்தியது.

கொழும்பு நகரில் நடந்த மனித வெடிகுண்டு தாக்குதலில் மகிந்த ராஜபக்ஷவின் தம்பி கோத்தபாய ராஜபக்ஷ உயிர் தப்பினார்.

அன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தம்பி கோத்தபாய ராஜபக்ஷ அந்நாட்டின் பாதுகாப்புத்துறை செயலாளராகவும் பதவி வகித்து வந்தார்.

1-12-2006 அன்று காலை அவர் கொழும்பு நகரில் காரில் சென்று கொண்டு இருந்தார். அப்போது குறி வைத்து வெடிகுண்டு தாக்குதல் நடைபெற்றது.

இந்தத் தாக்குதலில் அவர் காயம் அடைந்ததாக முதலில் இருந்த தகவல்கள் தெரிவித்தன. ஆனால் காயம் எதுவுமின்றி உயிர் தப்பியதாக பின்னர் அதிகாரபூர்வ தகவல்கள் தெரிவித்தன. குண்டு வெடிப்பில் அவர் வந்த கார் கண்ணாடி கதவுகள் நொறுங்கின.

### ஒருவர் பலி

கொழும்பு நகரில் ஜனாதிபதியின் வீட்டிற்கு அருகே பாதுகாப்பு மிகுந்த பகுதியில் நடந்துள்ள இந்த குண்டு வெடிப்பைத் தற்கொலைப் படையினர் (மனித வெடிகுண்டு ) நடத்தி இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இதில் ஒருவர் தலை துண்டிக்கப்பட்டு பலியானார்

இராணுவ வீரர்கள் உட்பட 14 பேர் படுகாயம் அடைந்தனர். பல வாகனங்களும் சேதம் அடைந்தன.

### உயர்மட்ட குழு கூட்டத்துக்கு

கடந்த ஒரு ஆண்டுக்கு முன்பு பாதுகாப்புத்துறைச் செயலாளராக பொறுப்பு ஏற்றது முதல் கோத்தபாய ராஜபக்ஷ விடுதலைப்புலிகளுக்கு எதிராக கடுமையான போக்கைக் கடைப்பிடித்து வந்தார். சமீபகாலமாக தமிழர் பகுதிகளில் நடைபெற்ற முப்படை தாக்குதலுக்கு மூளையாக செயற்பட்டவர் இவர்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற உயர்மட்ட பாதுகாப்பு குழுக் கூட்டத்தில் கோத்தபாய கலந்து கொள்ளச் சென்ற போது இந்தத் தாக்குதல் நடந்தது. வெடிகுண்டு நிரப்பப்பட்ட மூன்று சக்கர டாக்சியில் வந்த தற்கொலை படையினர் தாக்குதலை நடத்தி இருக்கலாம் என்று முதல் கட்ட விசாரணையில் தெரிய வந்தது.

### பிரபாகரன் பிரகடனம்

குண்டு துளைக்காத காரில் குண்டு துளைக்காத கவச உடை அணிந்து பயணம் செய்ததால் கோத்தபாய காயமின்றி உயிர் தப்பினார். உடனடியாக ஜனாதிபதியின் அறைக்குச் சென்ற அவரை மகிந்த ராஜபக்ஷ கட்டித் தழுவி மகிழ்ச்சி தெரிவித்தார். குண்டு வெடிப்பில் காயம் அடைந்தவர்களில் பலருடைய உடல் நிலை கவலைக்கிடமாக இருந்தது.

அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் செய்தபோது மாவீரர் எழுச்சி நாள் விழாவில் உரையாற்றிய விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன், சுதந்திரத் தனித் தமிழீழம் அமைப்போம் என்று மீண்டும் பிரகடனம் செய்தார். அதன் பிறகு நடைபெற்ற முதல் மனித வெடிகுண்டு தாக்குதல் இது என்பது குறிப்பிடத்தக்கது.

◆ ◆ ◆ ◆ ◆

விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் பாலசிங்கம் 14-12-2006 அன்று மரணம் அடைந்தார். விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் ஆலோசகராக இருந்து வந்தவர் அன்ரன் பாலசிங்கம். இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பாக அரசுடன் நடைபெற்ற சமரசப் பேச்சுவார்த்தைகளில் விடுதலைப்புலிகள் சார்பில் கலந்து கொண்ட குழுவுக்கு தலைமை தாங்கி தங்கள் தரப்பிலான கருத்துக்களை ஆணித்தரமாக எடுத்து வைத்தவர்.

### மரணம்

நீரிழிவு நோயினாலும் சிறுநீரக நோயினாலும் பாதிக்கப்பட்ட பாலசிங்கத்துக்கு 10 ஆண்டுகளுக்கு முன் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை நடந்து வந்தது. அவர் புற்றுநோயாலும் பாதிக்கப்பட்டு இருப்பது தெரிய வந்தது. இதற்காக அவர் சிகிச்சை பெற்று வந்தார்.

என்றாலும் சிகிச்சை பலன் இன்றி லண்டனில் உள்ள தனது இல்லத்தில் இங்கிலாந்து நேரப்படி 14-12-2006 அன்று பிற்பகல் 1.45 மணியளவில் பாலசிங்கம் மரணம் அடைந்தார். அவரது இறுதிச் சடங்கு லண்டனில் நடைபெற்றது.

(தொடரும்)

# மத்திய வங்கி ஆளுநர் நியமனத்தை முதன்முதலில் அரசியலாக்கியவர் மகிந்த

(நேற்று முன்தின கட்டுரைத் தொடர்ச்சி)

கடந்த நாட்களில் கொள்வனவாளர்கள் 26 பேரின் முறையான கேள்விப்பத்திர நடைமுறை மூலம் விலைக்கோரல் நடைபெற்றது. இந்தச் சரியான செயற்பாட்டை விமர்சனம் செய்யும் ஒருங்கிணைந்த எதிர்க்கட்சி அன்று வாயே திறக்கவில்லை. அப்படிப்பார்த்தால் தற்போதைய முறை பற்றி விமர்சிக்கும் உரிமை மக்கள் விடுதலை முன்னணிக்கும் மற்றும் சிவில் அமைப்புக்களுக்கும் மாத்திரமே உண்டு.

மோசடி நடைபெற்றிருந்தால் அன்று வாய் மூடியிருந்தவர்கள் பேசக்கூடாதெனச் சொல்லவில்லை. தங்கள் காலத்திலும் தவறுகள் நடைபெற்றதைக் கூறி எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும்.

அர்ஜூன் மகேந்திரன் மைத்துனருக்குச் சொந்தமான நிறுவனம் பர்பெசுவல் டிரஸ்ரீஸ் என அழைக்கப்படுகிறது. இந் நிறுவனம் 30 வருடகாலமாக மத்திய வங்கியின் முறிகள் வழங்கல் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளது. அஜித் நிவாட் கப்ரால் காலத்தில் அவரது சகோதரியும் இந்நிறுவனத்தில் கடமையாற்றியுள்ளார். அன்று கப்ராலின் காலத்திலும் மத்திய வங்கி முறிகள் கொடுக்கல் வாங்கல்கள் செய்யப்பட்டது. ஆகவே அர்ஜூன் மகேந்திரனின் மைத்துனின் நிறுவனம் அவர் ஆளுநராக ஆன பின் உருவான நிறுவனம் ஒன்றல்ல. மேற்கூறிய முறிகள் தொடர்பான நடவடிக்கைகளுக்கு தகுதி பெற்ற நிறுவனமாகும். மைத்துனராக இருந்தாலும் அதிகளவு முறிகளைப் பெற்றுக் கொண்டவற்றில் மத்திய வங்கி ஆளுநரின் விருப்பமும் கிடைக்கப்பெற்றது. இதுவே சந்தேகத்தைச் சமுதாயத்தில் ஏற்படுத்தியுள்ளது. அதன் மூலம் நாட்டிற்குப் பெரும் நட்டம் ஏற்பட்டுள்ளது என்பதும் இன்னொரு குற்றச்சாட்டாகும்.


மேற்கூறிய நிறுவனம் பெரிய தொகைக்கான கேள்வி மனுவைச் சமர்ப்பித்திருந்தது. அவர்கள் அதை இலங்கை வங்கியூடாகச் சமர்ப்பித்தார்கள். இலங்கை வங்கியூடாக அது போன்று பெரிய விலைமனுவைச் சமர்ப்பித்தமை குறித்து ஏனையோருக்கு இருந்த சந்தேகமே மேற்கூறப்பட்ட குற்றச்சாட்டிற்குக் காரணமானது என நான் நினைக்கின்றேன்.

டெண்டர் மூலம் பெறக்கூடிய தொகையை விட அதிகளவு தொகையைக் கொண்ட முறிகளைப் பெற முற்பட்டதே காரணமாகும். இந்நிறுவனம் அரசின் தேவைக்காக அவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவான சட்டத்தரணிகள் கொண்ட குழுவும் இதுதொடர்பாக சரியான விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என ஆலோசனை கூறியுள்ளது. ஒரு சந்தர்ப்பத்தில் அசாதாரணமான விலை மனுக்கோரல் காணப்பட்டதாகச் சட்டத்தரணிகள் குழுக்கள் கூறியுள்ளன.

முன்னாள் வணிகக் கழகத் தலைவர் சந்திரா ஜயரட்ண முறிகள் தொடர்பாக அடிப்படை உரிமைகள் மீறப்பட்டதாக உயர்நீதிமன்றம் சென்றார். அங்கு அடிப்படை உரிமை மீறப்படவில்லை என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. அதனால் நிதித் துஷ்பிரயோகம் நடைபெறவில்லை என்று அர்த்தம் கொள்ளமுடியாது. இன்னும் விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதன் பின்னர் இதற்கான பொறுப்புக்கூற வேண்டியவர்கள் யார்? எவ்வளவு நட்டம் ஏற்பட்டுள்ளது என்பதை அறிந்து கொள்ளலாம். ஆரம்ப விசாரணைகள் கோப் கமிட்டியால் நடத்தப்படுகின்றன. கணக்காய்வாளர்களின் அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ள விடயங்கள் பாரதூரமாக உள்ளன. கோப் கமிட்டியின் முன்னாள் தலைவர் சி.யூ.குணசேகர, முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜூன் மகேந்திரன் பதவிக்கு மீண்டும் நியமிக்கப்படக் கூடாதென்று கூறுவதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கையே போதுமானது எனக் கூறுகிறார்.

**அஜித் கப்ரால் காலத்தில் மத்திய வங்கி நாட்டுக்கு ஏற்படுத்திய நட்டத்தை எவரும் பேசியதில்லை. அன்று ஊழியர் சேமலாப நிதியை பங்குச் சந்தையில் இட்டதால் அடைந்த நட்டம் 700 கோடி ரூபா. ஹெஜின் கொடுக்கல் வாங்கலால் அடைந்த நட்டம் 70000 கோடி ரூபா**







சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கையில் 40 பில்லியன் ரூபா தேவையென அறிவித்துள்ளார்கள். ஆனால் கடனாக 80 பில்லியன் ரூபாய்கள் பெற்றுள்ளார்கள் என நாணய நிதியம் அவர்களின் அறிக்கையில் கேட்கின்றது. நாட்டிற்கு 40 வேண்டுமெனக் கூறி 80 எப்படிப் பெற்றீர்கள் என்றும் 80 பில்லியன் கூடிய வட்டி வீதத்திற்கே பெறப்படுகிறது.

நாணய நிதியம் இதன் மூலம் நிதிக்கொள்கைக்கு பாதிப்பு ஏற்படும் எனக் கூறுகின்றது. (டியூ குணசேகர 28.06. 2016) அதனால் இவ் விடயத்தை நல்லாட்சி அரசாங்கம் ஒருபோதும் புறக்கணிக்க முடியாது.

அன்று கப்ரால் காலத்தில் மத்திய வங்கி நாட்டுக்கு ஏற்படுத்திய நட்டம் பற்றி யாரும் பேசவில்லை. அன்று ஊழியர் சேமலாப நிதியை பங்குச் சந்தையில் இட்டு அடைந்த நட்டம் 2800 கோடி ரூபாவாகும். கிறிஸ் முதலீடு காரணமாக இடம்பெற்ற நட்டம் 700 கோடி ரூபாவாகும். ஹெய்ன் கொடுக்கல் வாங்கலால் அடைந்த நட்டம் 7 ஆயிரம் கோடி ரூபா. அன்று பயத்தினால் இதைப்பற்றி யாரும்கதைக்கவில்லை. ஆனால் இன்று நல்லாட்சி அரசாங்கத்தில் வெளிப்படையாக அனைத்தையும் பேச இயலுமாகவுள்ளது.

ஆனால் முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜூன் மகேந்திரன் தொடர்பாக நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமை அவருக்கும் மத்திய வங்கிக்கும் அரசாங்கத்திற்கும் ஏற்புடையதல்ல. ஆகவே அவருக்கு மத்திய வங்கி ஆளுநர் பதவியை வழங்காமை மத்திய வங்கிக்கும் அரசாங்கத்திற்கும் சிறந்ததே. எதிர்வரும் காலங்களில் இதன் நன்மைகள் இந்நாட்டில் நாம் காண முடியும்.

அரசு புதிய மத்திய வங்கி ஆளுநரை நியமிக்க எடுத்த முடிவு நல்லாட்சிக்கான முடிவாகும். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனநாயகத் தலைவராக எல்லாவற்றையும் ஆராய்ந்து பிரதமரின் ஆலோசனையையும் பெற்றுப் புதிய மத்திய வங்கியின் ஆளுநராக கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமியை நியமித்துள்ளார். தகுதி வாய்ந்த சரியான தெரிவென சரித்திரத்தில் இத் தெரிவு இடம் பெறும்.

**ராம்**

(முற்றும்)

# செய்தித்துளிகள்

## சிறுகதைத் தொகுப்பு வெளியீடு ஞாயிறன்று

க.சட்டநாதன் எழுதிய பொழிவு சிறுகதைத் தொகுப்பு வெளியீடு நாளை ஞாயிற்றுக்கிழமை 17 ஆம் திகதி பி.ப. 3.30 மணிக்கு யாழ். ஆரியகுளம் சந்தியிலுள்ள புதிய உயர்கல்வி மண்டபத்தில் நடைபெறும்.

தி.செல்வமனோகரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் சி.ரமேஷ் தொடக்கவுரையாற்றுவார்.

ச.சத்தியதேவன், இ.இரா ஜேஸ்கண்ணன் ஆகியோர் மதிப்பீட்டுரைகளையும் நூலாசிரியர் ஏற்புரையினையும் வழங்குவார். (இ

## இலங்கையில் இணையம் மூலம் போதைப்பொருள் வியாபாரம்

இலங்கையில்இணையம்ஊடாக முன்னெடுக்கப்பட்ட ஹெரோயின் விற்பனையை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

தெவிநுவர பிரதேசத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றிருப்பதாகவும், மாத்தறை பொலிஸ் நிலையத்தின் போதை ஒழிப்பு பிரிவினர் இதனோடு தொடர்புடைய சந்தேகநபரையும் கைதுசெய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. குறித்த சந்தேகநபர் பாகிஸ்தானில் இருந்து இலங்கை வந்து ஹெரோயின் வியாபாரத்தினை மேற்கொண்டு வந்துள்ளதாகவும் தெரிவித்துள்ள பொலிஸார் குறித்த நபரிடமிருந்து 12கிலோகிராம் ஹெரோயினையும் கைப்பற்றியுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (இ-10)

## இலங்கையில் 8 மாவட்டங்களில் டெங்கு தொற்று ஏற்படும் அபாயம்

இலங்கையில் எட்டு மாவட்டங்களில் டெங்கு நோய் தொற்று ஏற்படக்கூடிய அபாயம் நிலவுவதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார். கண்டி, கொழும்பு, மாத்தளை, இரத்தினபுரி, களுத்துறை, குருநாகல், கம்பஹா மற்றும் காலி ஆகிய மாவட்டங்களிலேயே டெங்கு பரவும் நிலை அதிகமாக காணப்படுகிறது.

குறித்த பிரதேசங்களில் 22 ஆயிரத்து 799 டெங்கு நோயாளர்கள் இந்த வருடத்தில் மாத்திரம் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்துடன் 40 பேர் டெங்கு நோயினால் உயிரிழந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-10)

## இரு குழுக்களிடையே மோதல்

### ஒருவர் உயிரிழப்பு

நுவரெலியா - ஹங்குராங்கெத்த பிரதேச பிரிவிற்கு உட்பட்ட லூல்கந்துர அப்பர் கோனாவ தோட்டத்தில் இரு குழுக்களிடையே நடந்த மோதலில் மூன்று பிள்ளைகளின் தந்தையொருவர் உயிரிழந்துள்ளதுடன் 06 பேர் படுகாயமடைந்துள்ளனர். நேற்று முன்தினம் 7 மணியளவில் இரு குடும்பங்களுக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் மோதலாக உருவெடுத்து கூரிய ஆயுதங்களால் தாக்கிக் கொண்டுள்ளனர். சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் பிரச்சினையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

கத்தி வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த 54 வயதான அய்யாக்கண்ணு என்பவர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார். (இ-10)

## குளவிக்கொட்டுக்கு இலக்கான 100 பேர் வைத்தியசாலையில்

திருகோணமலை - பதவியா பகுதியில் குளவிக் கொட்டுக்கு இலக்கான பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட 100 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பதவிய ஸ்ரீபுர ஜயந்தி மகா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் முற்பகல் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போது குறித்த சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

இந்த சம்பவத்தில் 7 ஆசிரியர்களும் பத்துக்கும் மேற்பட்ட பெற்றோர்கள் மற்றும் பாடசாலையின் சிற்றூழியர்கள் சிலரும் குளவிக் கொட்டுக் காரணமாக காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மேலும் தெரியவந்துள்ளது. (இ-10)

## பிரதேச செயலகத்தின் பெயர்ப்பலகை உடைப்பு

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மண்முனைப்பற்று பிரதேச செயலகத்தின் பிரதான பெயர்ப்பலகை விசமிகளால் உடைத்து நாசமாக்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியில் அமைந்துள்ள குறித்த பிரதேச செயலகத்திற்கு முன்னால் நிர்மாணிக்கப்பட்டிருந்த இப்பெயர்ப்பலகை கடந்த வாரமே புதிதாக திறந்து வைக்கப்பட்டது. இந்நிலையில் நேற்று அதிகாலை பெயர்ப்பலகை இனந்தெரியாத நபர்களால் உடைக்கப்பட்டுள்ளது. சம்பவம் குறித்து காத்தான்குடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ-10)

# ஆடி மாத இராசி பலன்கள்

## 16.07.2016–16.08.2016



*ஆன்மீகத்தின் மீது அதிக நாட்டம் கொண்டிருக்கும் மேஷ ராசி நேயர்களே!*

துாமுகி வருடம் ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் குரு உங்கள் ராசியைப் பார்க்கிறார். ராசிநாதன் செவ்வாய் வக்ர நிவர்த்தியாகி சந்திரனோடு இணைந்து, சந்திர மங்கள யோகத்தை உருவாககு கிறார். சுகஸ்தானத்தில் புதனும், சூரியனும் இணைந்து புத சுக்ர யோகத்தை உருவாக்குகின்றனர்.

எனவே தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். துணையாக இருப்பவர்கள் தோள் கொடுத்து உதவுவார்கள். கல்யாணக் கனவுகள் நனவாகும். கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள். அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் ஒருபுறம் இருந்தாலும், பார்க்கும் குருவால் பல வழிகளிலும் உங்களுக்கு நன்மைகள் ஏற்படும். சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். இடம் வாங்கும் முயற்சியில் இருந்த தடை அகலும். வாங்கிய கடனை திரும்பி செலுத்தும் அமைப்பு ஏற்படும்.

பஞ்சம ஸ்தானத்தில் ராகுவும், லாப ஸ்தானத்தில் கேதுவும் சஞ்சரிக்கிறார்கள். எனவே, அஞ்சாது பேசும் பிள்ளைகளால் அதிக செலவு உருவாகலாம். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது. அவர்களின் கல்வி முயற்சியில் பலன் கிடைக்கும். முக்கிய பிரமுகர்களின் ஒத்துழைப்போடு முன்னேற்றப் பாதையை நோக்கிச் செல்வீரகள்.

என்ன இருந்தாலும் அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் ஒருபுறம் இருந்து கொண்டேயிருக்கின்றது. சனி உங்கள ராசிக்கு 10, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியாவார். எனவே தொழில் மற்றும் லாபத்தைப் பொறுத்தவரை உங்கள் உழைப்பிற்குப் பலன் கொடுப்பது சனியின் கையில்தான் இருக்கிறது. அவர் இந்த மாதத்தில் வக்ர இயக்கத் தில் அல்லவா இருக்கிறார். எனவே கொஞ்சம் கூடுதல் விழிப்புணர்ச்சி தேவைப்படும்.

உத்தியோகத்தில் இருப்பவரகளுக்கு மேல் அதிகாரிகளால் தொல்லை உருவாகலாம். சக பணியாளர்களின் ஒத்துழைப்புக் குறையலாம். வர வேண்டிய பதவி உயர்வு மற்றவர்களுக்கு மாறிச் செல்லும். இவற்றுக்கெல்லாம் விமோசனம் சனியை வழிபடுவது ஒன்றுதான். எனவே சனிக்கிழமை தோறும் விரதமிருந்து சனிபகவானை வழிபடுங்கள்.

தத முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வழக்குகள் சாதகமாக அமையும். பிள்ளைகளின் கல்யாணக்கனவுகளை நனவாக்க எடுககும் முயற்சிகள் பலன் கொடுக்கும்.

**சிம்ம சுக்ரனின் சஞ்சாரம்!**

ஓகஸ்ட் முதலாம் திகதி சுக்ரன், சிம்மத்திற்குச் செல்கிறார். கடின உழைப்பிற்கு கைமேல் பலன் கிடைக்கப் போகிறது. உங்கள்




ராசிக்கு 2,7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்ரன். தனஸ்தானத்திற்கு அதிபதியான சுக்ரன், பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும்

சுபகரகம் என்று வர்ணிக்கப்படும் கிரகம் குரு. அவர் ஓகஸ்ட் 2ஆம் திகதி 6ஆம் இடத்திறகுச் செல்கிறார். உங்கள் ராசிக்கு 9,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குருபகவான். 12க்கு அதிபதி 6இல் சஞ்சரிக்கும் பொழுது விபரீத ராஜயோக அடிப்படையில், திட்டமிடாத காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். உத்தியோக மாற்றமும், ஊர மாற்றமும் தானாகவே அமையலாம். பொது நலததில் இருப்பவரகளுக்கு புதிய திருப்பங்கள் ஏற்படும்.

இந்த மாதம் வியாழக்கிழமை தோறும் குருபகவானை வழிபட்டு வருவது நல்லது.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும் மாதம் இது. குடும்பத்தில் ஏற்பட்ட மனக்கசப்புகள் அகலும். லட்சியங்களை நிறைவேற்றிக் கொள்வதில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள். ஆரோக்கியத் தொல்லைகள் அகல, மாற்று மருத்துவம் கை கொடுக்கும். கணவன மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கும். பிள்ளைகள் மீது அதிக அக்கறை எடுத்துக்

## கல்யாணக் கனவுகள் நனவாகும்!

**சிம்ம புதனின் சஞ்சாரம்!**

இதுவரை கடகத்தில் சஞ்சரித்து வந்த புதன், ஜுலை 24ஆம் திகதி சிம்மத்திற்குச் செல்கிறார். 3,6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் புத்திரஸ்தானததில் சஞ்சரிக்கும் பொழுது, பிளளைகளின் உத்தியோக நலன் கருதி எடு

பொழுது பூர்வீக சொத்துக்களால்லாபம் கிடைக்கும். புதிய திருபபங்கள் உருவாகும். ஆபரணங்கள் வாங்குவதில் கவனம் செலுத்துவீரகள். சுப நிகழ்சசிகள் நடைபெறுவதற்கான அறிகுறி தென்படும்.

**குதூகலம் தரும் குருப்பெயர்ச்சி!**

நவக்கிரகங்களில்

கொள்வது நல்லது. வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்க முன் வருவீர்கள். புதிதாக உங்கள் பெயரில் நிலம் வாங்க முயற்சிப்பீரகள். உத்தியோகஸ்தர்கள் எதிர்பார்த்தபடி ஊர்மாற்றம் வந்து சேரும். 6இல் குரு சஞ்சரித்த பிறகு எண்ணற்ற மாற்றங்கள் வந்து சேரப்போகின்றன. முருகப் பெருமான் வழிபாடு முன்னேற்றத்திற்கு வழிகாட்டும்.

**ஜோதிடக் கலாமணி**
**சிவல்புரி சிங்காரம்**



*துவண்டு வருபவர்களுக்கு தோள் கொடுத்து உதவும் ரிஷப ராசி நேயர்களே!*

துர்முகி வருடம் ஆடி மாதக் கிரக் நிலைகளை ஆராய்ந்து பார்க் கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசியை சந்திரனும், செவ்வாயும், சனியும் பார்க்கின்றனர். சந்திர மங்கள யோகத்தோடும், புத ஆதித்ய யோகத்தோடும், புத சுக்ர யோகத்தோடும் மாதம் தொடங்குவதால், நல்ல காரியங்கள் பலவும் இந்த மாதத்தில் நடைபெற உள்ளது. பொதுவாக விரயாதிபதி செவ்வாய் வக்ர நிவர்த்தி ஆகிவிட்டதால் விரயங்கள் கூடுதலாகத்தான் இருக்கும். என்றாலும் அவை சுப விரயங்களாகவே அமையலாம்.

குடும்பத்தில் மங்கல ஓசை, மழலையின் ஓசை கேட்கவில்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு, தடைகள் அகன்று நற்பலன்காணும் மாதம்இது. ஆடை, ஆபரணங்கள் வாங்குவதில் கவனம் செலுத்துவீரகள. சோர்வு நீங்கி சுறுசுறுப்பாக பணியாற்ற முற்படுவீர்கள். சொத்துப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். நீண்ட நாட்களாக இடம் வாங்கி வீடுகட்ட வேண்டும் அல்லது கட்டிய வீட்டைப் பராமரிக்க வேண்டும் என்ற எண்

ணம் படைத்தவர்களுக்கு அந்த எண்ணம் நிறைவேறுவதற்கான அறிகுறி தென்படும்.

அர்த்தாஷ்டம குருவின் ஆதிக்கம் இருப்பதால் உறவினர் பகை உருவாகலாம். எனவே உற்றார், உறவினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு இலாகா மாற்றங்களோ, இடமாற்றங்களோ எதிர்பார்த்தபடி வந்து சேரும். பாகப்பிரிவினைகளில் பங்கு கிடைக்கவில்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு இப்பொழுது எதிர்பார்த்த பங்குகள் கிடைத்து, அதன்மூலம்லாபம வந்து சேரலாம முன்னேறறத் தடைகள அகல, முக்கிய புள்ளிகள் வந்து உதவிக்கரம் நீட்டுவர். புது முயற்சிகளில் மாதத்தின் பிற்பகுதியல் வெற்றி கிடைக்கலாம். வழக்குகள் வெற்றிகளைத் தேடித்தரும்.

ராகு கேதுக்களின் ஆதிக்கம் உங்களுக்கு உள்ளது. சுக ஸ்தானத்தில் ராகுவும், தொழில் ஸ்தானத்தில் கேதுவும் சஞ்சரிப்பதால் சுய தொழில் செய்பவர்களுக்கு, தசாபுத்தி பலம் பெற்றிருந்

நலலது. விஷ்ணுவின் தசாவதாரப் படங்களில், உங்கள் ஜாதகத்திற்கு ஏற்ற அவதாரப் படத்தை பூஜை அறையில் வைத்து வழிபடுவது உகந்தது. சனிக்கிழமை தோறும் சனிபகவான் சந்நிதியில் எள்தீபம் ஏற்றினால் இனிய பலனை எதிர்கொள்ளலாம்.

**சிம்ம புதனின் சஞ்சாரம்!**

ஜுலை 24ஆம் திகதி சிம்ம ராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் ராசிக்கு 2,5க்கு




அதிபதியான புதன், சுக ஸ்தானத்தில் சஞ்சரிப்பது யோகம்தான். பாதியில் நின்ற கட்டடப்

பெறும். செய்தொழிலில் வளர்ச்சி கூடும். பிரிந்து சென்றவர் பரியமுடன் வந்திணைவர். குலதெய்வப பிரார்த்தனைகளை நிறைவேற்றுவதில் குறிக்கோளாக இருப்பீர்கள். பெண்வழிப் பிரச்சினைகள் அகலும். வேலைக்கான நேர்முகத்தேர்வில் இதுவரை கிடைக்காத வெற்றி, உங்களைத் தேடிவரும்.

**குருப்பெயர்ச்சிக் காலம்!**

ஓகஸ்ட் 2ஆம் திகதி கன்னி ராசியில் குரு சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக பஞ்சம ஸ்தானம் பலம் பெறுகிறது. எனவே குழந்தைகளுக்காக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிக்கு, பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். உங்கள் ராசிநாதனுக்கு, குரு பகைக்கிரகம் என்றாலும் கூட குரு பார்க்கக் கோடி நன்மை என்பதால், அதன் பார்வை பதியும் போது உங்கள் ராசி புனிதம் அடைகின்றது. எனவே கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். பாகப்பிரிவினை சுமுகமாக முடியும்.

இந்த மாதம் பிரதோஷ வழிபாடும், அம்பிகை வழிபாடும் பெருமை சேர்க்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

உங்களுக்கு இனிய மாதம்இது. கொடுக்கல வாங்கல் ஒழுங்காகும். வளர்ச்சி கூடும். தடைப்பட்ட காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும். தெய்வீக நாட்டம் அதிகரிக்கும்.

## உடன் பிறப்புக்களின் உதவி கிடைத்து மகிழும் நேரம்!

தால் கவலை இல்லை. பலமிழந்திருப்பவர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். உயரதிகாரிகளால் தொல்லை உருவாகலாம். ஊர் மாற்றங்களும், இடமாற்றங்களும் திருப்தி அளிக்காது. எனவே நாக சாந்திப்பரிகாரங்களை யோக பலம் பெற்ற நாளில் செய்வது நல்லது.

சப்தம ஸ்தான்த்தில் செவ்வாய், சனி சேர்க்கை பெற்றுள் ளன. இது போன்ற காலங்களில் அனுமன் வழிபாட்டை முறையாகச் செய்வதோடு, ஸ்ரீராம ஜெயம் எழுதுவதும்

பணிகள் தொடரும். பணத் தேவைகள் உடனுக்குடன் பூர்த் தியாகும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேருவர். பணிபுரியும் இடத்தில் ஏற்பட்ட வாக்குவாதங்கள் மாறி வளர்ச்சி கூடும்.

**சிம்ம சுக்ரனின் சஞ்சாரம்!**

உங்கள் ராசிநாதன் சுக்ரன் ஓகஸ்ட் முதலாம் திகதி சிம்மத்திற்குச் செல்கிறார். எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி காண்பீர்கள். இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடை

கணவன் மனைவிக்குள் இருந்த கருத்து வேறுபாடு அகலும். ஒற்றுமை பலப்படும். உரிய விதத்தில் சகோதரர்கள் பாகம் பிரித்துக் கொடுப்பர். பெண் குழந்தைகளின் சுபச் சடங்குகள் எதிர்பார்த்தபடி அமையும். அலுவலகப் பணியாளர்களுக்கு அதிகாரிகளால நன்மை கிடைக்கும். புதிய திருப்பங்களும், ஒப்பந்தங்களும் வந்து சேரும். செவ்வாய் தோறும் விரதமிருந்து அம்பிகையை வழிபடுவது முன்னேற்றத்திற்கு வித்திடும்

(தொடரும்)

உணர்ச்சி வேகத்தில் அறிவாளியும் மடையனாகி விடுவான்.

~ காரவான்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# திசைமுகம் நோக்கிய சம்பந்தரின் திருமுகம்

தனு, கரண, புவன போகங்களைப்படைத்த சிவன் படைத்தல், காத்தல், மறைத்தல், அழித்தல், அருளல் எனும் ஐந்தொழில்களை செய்வதாக சைவ சமயம் கூறுகிறது.

இந்தப் பிரபஞ்சத்தின் இயக்கத்திற்கு சிவனின் ஐந் தொழிலே காரணமாகும் என்பது சைவசமயம் கூறி நிற்கும் தத்துவம்.

ஒருவடிவில்; ஓர் உருவில் ஐந்தொழிலையும் செய்தல் சாத்தியமற்றது என்பதால் ஐந்தொழிலையும் செய்யும் இறைவன் அதற்கேற்றால் போல் வடிவங்களையும் தாங்கிக் கொள்கிறான்.

உருத்திரனாக நின்று அழித்தல் தொழிலை செய்யும் சிவப்பரபொருள் அருளலை செய்வதற்காக சதாசிவ வடிவத்தை எடுத்துக்கொள்கின்றார். இந்த வேறுபட்ட வடிவங்கள் வேறுபட்ட தேவையின் பொருட்டு இறைவனால் எடுக்கப்படுகின்றது. இதை இறைவன் மட்டுமே செய்யமுடியும்.

மனிதர்கள் செய்தால் அதற்கு திருகுதாளம் என்று பொருள்படும். பொதுவில் அரசியலில் இத் திருகுதாளங்கள் நடப்பது வழமை ஆயினும் ஒரு அரசியல்வாதி ~ அரசியல் தலைவன் தன் இனத்திற்கு ஈனம் இழைக்கும் வகையில் திருகுதாளம் செய்தால் அதற்கு வேறோர் பொருள் உண்டு.

சமகாலத்தில் அந்தப் பெயர் எங்கள் தாயகத்தில் அடிக்கடி பேசப்பட்டது என்பதாலும் அந்தச் சொல்லையும் அதன் பொருளையும் நம் இளம் சந்ததி அறியாமல் விடுதல் நன்று என்பதாலும் இதனை வெளிப்படுத்தாமல் அப்படியே விட்டுவிடலாம்.

இது ஒருபுறம் இருக்க வன்னிப் பெரு நிலப்பரப்பில் நடந்த போர்குற்றம் தொடர்பில் இடம்பெறவுள்ள விசாரணையில் சர்வதேச நீதிபதிகள் இடம்பெற வேண்டும் என்பது இனப் பற்றுள்ள தமிழ் மக்களின் உறுதியான முடிவு.

இந் நிலையில் போர்க்குற்ற விசாரணைகளில் சர்வதேச நீதிபதிகள் இடம்பெறுவதற்கு ஒரு போதும் அனுமதியோம் என்கிறது இலங்கை அரசு.

நிலமை இதுவாக இருக்கயைில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தர் அவர்கள் சிங்கள நாளிதழ் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் போர்க்குற்ற விசாரணையில் சர்வதேச நீதிபதிகள் இடம்பெற வேண்டும் என நாம் வலியுறுத்தமாட்டோம் என்று கூறியதாக செய்தி வெளிவந்தது.

இந்த செய்தியை சில தமிழ் ஊடகங்கள் வெளியிட்டபோது அவ்வாறு தான் கூறவில்லை அப்படிக் கூறவும் முடியாது என்று இரா.சம்பந்தர் தெரிவித்ததாக பிறிதொரு செய்தி வெளியாகியது.

நல்லது! கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தரின் இந்தக் கூற்று, பஞ்சகிருத்தியத்தில் எடுத்தவடிவம் போன்றதா என்பது ஆராயப்படவேண்டும்.

வடக்கில் ஒருவடிவம்; தெற்கில் இன்னொருவடிவம், கிழக்கில் பிறிதொரு கோலம் என்றவாறு சம்பந்தர் ஐயாவின் திருமுகங்கள் திசை முகத்திற்கேற்ப மாறுகிறதா என்பதும் அறியப்படுவது மிகமிக அவசியம்.

இந்த ஆராய்வில் தமிழ் இனம் ஈடுபட்டு உண்மையை கண்டறியாவிட்டால் எங்கள் இனத்தின் பேரழிவு இனியும் தொடரும் என்பது உண்மை. இது ஒருபுறம் இருக்க தான் சொல்லாததை சொன்னதாக பிரசுரித்த குறித்த சிங்கள ஊடகத்திற்கு எதிராக சம்பந்தன் ஐயா வழக்குத் தொடுப்பாரா? அவ்வாறு வழக்கு தொடுக்காவிட்டால் அதற்கு என்ன காரணம் என்பதை அறிய தமிழ் மக்கள் விரும்புவதில் தவறில்லை தானே!

## சிரிய உள்நாட்டுப் போரில்

# 12 ஆயிரம் குழந்தைகள் உட்பட இரண்டரை லட்சம் மக்கள் பலி!

## அமெரிக்கா– ரஷ்யா ஆலோசனை

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத் தலைமையிலான அரசை பதவியில் இருந்து இறக்கும் நோக்கத்தில் அவரது அதிருப்தியாளர்கள் தொடங்கிய போராட்டம், உள்நாட்டுப் போராக உருவெடுத்தது. கடந்த நான்காண்டுகளாக நடைபெற்று வரும் உள்நாட்டுப் போரில் இதுவரை சுமார் 12 ஆயிரம் குழந்தைகள் உட்பட இரண்டரை இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் பலியாகியுள்ளனர்.

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்தின் ஆட்சிக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டுவரும் புரட்சிப் படையினர் மற்றும் சிரியாவின் சில பகுதிகளை கைப்பற்றி அங்குள்ள மக்களை கொடுமைப்படுத்திவரும் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக விமானப்படை மூலம தாக்குதல் நடத்த கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் 30ஆம் திகதி ரஷ்யா முடிவு செய்தது.

ஜனாதிபதியின் படைகளுக்கு ஆதரவாக ரஷ்யாவில் இருந்து போர்க்கப்பல்களில் ஏராளமான ஆயுதங்களும், ரஷ்ய ராணுவ வீரர்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். தீவிரவாதத்தை ஒழிக்கும் நோக்கத்தில்தான் சிரியா அரசுக்கு ரஷ்யா ஆயுதங்களை அளித்து, ஆதரித்து வருவதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் கூறியிருந்தார்.

சொந்தநாட்டு மக்களை மிகக்கொடூரமாக நடத்திய ஜனாதப்தி ஆசாத்தின்அணுகு முறைதான், சிரியாவில் உள்நாட்டுப் போரையும், ஐ.எஸ். தீவிரவாதிகள் என்ற இயக்கத்தையும் உருவாக்கி விட்டது என அமெரிக்கா குற்றம்சாட்டிவரும் நிலையில் புடின் இவ்வாறு பேட்டியளித்திருந்தார் என்பது குறிபபிடத்தக்கது.

இதையடுத்து, சிரியாவில் ஜனாதிபதியின் படைகளுக்கு ஆதரவாகவும், ஐ. எஸ். தீவிரவாதிகளின் முகாம்களை அழிக்கும் நோக்கத்திலும் கடந்த மூன்று மாதங்களாக பல்வேறு பகுதிகளின் மீது ரஷ்ய விமானப்படைகள் குண்டுமழை பொழிந்து தாக்குதல் நடத்தி வருகின்றன.

இந்நிலையில், சிரியாவில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஐ.எஸ். தீவிரவாதிகள் மீது ரஷ்யாவுடன் அமெரிக்காவும் இணைந்து தாக்குதல் நடத்துவது தொடர்பாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன் ஆலோசனை நடத்துவதற்காக அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் கெரி நேற்று முன்தினம் மாலை மொஸ்கோ நகருக்கு விரைந்தார்.

ரஷ்ய ஜனாதிபதியின் கிரெம்ளின் மாளிகையில் சுமார் 3 மணிநேரம் விளாடிமிர் புடினும், ஜான் கெரியும் இது தொடர்பாக முக்கிய ஆலோசனையில் ஈடுபட்டனர்.

சிரியாவில் ஐ.எஸ். மற்றும் அல்கொய்தா தீவிரவாதிகளை ஒழித்து, அங்கு நிரந்தரமாக அமைதியை நிலைநாட்டும் வகையில் அமெரிக்காவும், ரஷ்யாவும் அங்கு தனித்தனியாக தலைமை செயலகங்களை நிறுவவும், உளவு தகவல்களை ஒருவருக்கொருவர் பகர்ந்து கொள்வதன் வாயிலாக தீவிரவாதிகள் மீதான உச்சகட்ட தாக்குதலை திட்டமிட்டு செயற்படுத்துவதில் இருநாடுகளும் ஒருமித்த கருத்துடன் இணைந்திருப்பது என்றும் இந்த ஆலோசனை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக தெரியவந்துள்ளது. (இ-10)

## பிரான்ஸ் தாக்குதல்

# இலங்கையர்களுக்கு பாதிப்பு இல்லை

பிரான்ஸின் தென்பகுதி நகரான நைசில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தீவிரவாத தாக்குதலில் இலங்கையர்கள் எவரும் பாதிக்கப்பட்டதாகத் தகவல் கிடைக்கவில்லை என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

பிரான்ஸின் தேசிய நாள் நிகழ்வின் போது, நேற்று முன்தினம் பொதுமக்கள் கூட்டத்தினுள் உச்ச வேகத்தல் பாரஊர்தியைச் செலுத்தி நடத்தப்பட்ட தாக்குதலில், 130 பேர் கொல்லப்பட்டதுடன் 100க்கும் அதிகமானோர் காயமடைந்தனர். சுமார் 2 கி.மீ தூரத்துக்கு வாகனம் செலுத்தப்பட்டு இந்த தாக்குதல் நடத்தப்பட்டது.

இதில் இலங்கையர்கள் எவரும் பாதிக்கப்பட்டதாக தகவல் கிடைக்கவில்லை எனறு வெளிவிவகார அமைச்சு நேற்று தெரிவித்துள்ளது.

எனினும், பிந்திய நிலைமைகள் தொடர்பான தகவல்களுக்கான அங்குள்ள இலங்கை தூதரகத்துடன் தொடர்பில் இருப்பதாகவும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதலை அடுத்து பிரான்ஸில் அவசர நிலைப் பிரகடனம் நீடிக்கப்பட்டுள்ளது. (இ-10)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



உனது உதவி இல்லாததால் ஓர் எறும்பாவது இறக்கும் என்று நீ நினைக்கின் றாயா? எவ்வளவு கீழான எண்ணம்அது! சிறிது கூட என்னை உலகம் வேண்டி நிற்கவில்லை. இறைவனுக்காகப் பணி செய்யும் உரிமையை அவளனித்த பேறு; உதவி புரிவதல்ல. உதவி என்ற சொல்லை உன் மனத்திலிருந்து அறவே நீக்கிவிடு. நீ உதவ இயலாது. அது அபசாரமே. வண ங்கு உலகம் முழுவதையும். அத்தகையை பணிவு நிறைந்த எண்ணத்தோடு பார். அப்போது பூரண பற்றின்மை வரும்.

நான் சிறுவனாய் இருந்த போது செயலிற்கு வேண்டிய ஒரு பெரும் பகுதி முரட்டு வைராக்கியம் என்றெண்ணினேன். ஆனால் எனக்கு வயதாக ஆக, இப்போது அது உண்மையல்ல என்பதை அறிந்து கொள்கிறேன். எந்தச் செயலும் கேலிக்கு உரிய தன்று. செய்யும் செயல்களின் இயல்பால் ஒரு மனிதனை மதிக்கக் கூடாது. செய்யும் முறையைக் கொண்டு மதிப்பிடு. இயன்ற அளவு மிகக் குறைந்த நேரத்தில் உறுதியான அழகான அழகான ஒரு ஜோடிச் செருப்புக்களை உண்டாக்கும் ஒரு செம்மான், அவனது தொழிலையும் வேலையையும் கருதும் போது, ஆயுளில் ஒவ்வொரு நாளும் பிதற்றும் ஒரு ரோசிரியரை விட மேலானவனே. ஒவ்வொரு செயலும் தூயதே. செயலில் ஈடுபாடு கடவுள் வழிபாட்டின் மிக உயர்ந்த முறையாகும்.

# பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும் இன்று

யாழ்.வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் பிரார்த்தனை மண்டபத்தில் இடம் பெறும். பாடசாலையின் அதிபர் ரி.நவரட்ணம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சிவன அறக்கட்டளை நிறுவுநர் கணேஸ்வரன் வேலாயுதம் கலந்து கொள்ளவுள்ளார். (இ)

# துஷ்பிரயோகத்துக்கு இலக்கான சிறுமியை துன்புறுத்திய பொலிஸ்

பாலியல் வன் கொடுமைக்கு உட்படுத்தப்பட்ட தமிழ் சிறுமியை பொலிஸார் தாக்கி அச்சுறுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அண்மையில் ஹப்புத்தளை பிரதேசத்தில் 14 வயதான சிறுமியொருவர் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டதாக முறைபபாடு செய்யப்பட்டுள்ளது.

14 வயதான தமிழ் சிறுமியை 29 வயதான பேருந்துச் சாரதி ஒருவர் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தியுள்ளார்.

இந்த சம்பவத்தை பொலிஸார் மூடி மறைக்க முயற்சித்துள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சட்ட வைத்திய அதிகாரியின விசாரணையின் போது உண்மைகளை வெளிப்படுத்த வேண்டாம் என பெண பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் குறித்த சிறுமியை அச்சுறுத்தி தாக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதல்கள், அச்சுறுத்தல்களுக்கு அஞ்சாது குறித்த சிறுமி கடத்தல் மற்றும் பாலியல் வன்கொடுமை பற்றிய விபரங்களை சட்ட வைத்திய அதிகாரியிடம் அம்பலப்படுத்தியுள்ளதாக ஆசிய மனித வுரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஒரே நாளில் குறித்த சிறுமி 2 தடவைகள் பாலியல ரீதியாக வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இந்த விபரங்களை வெளியிடால் குடும்பத்தையே இல்லாமல் செய்து விடுவதாக பெண் பொலிஸ் உத்தியோகத்தர் அச்சுறுத்தியுள்ளார்.

இந்த பெண் பொலிஸ் உத்தியோகத்தரின் நடவடிக்கை உரிய முறையில் விசாரணை செய்யப்பட வேண்டுமென ஆசிய மனித உரிமை ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது. (இ-10)

# மலசல குழியிலிருந்து குழந்தையின் சடலம் மீட்பு

கெஸ்ட்ரைட்டிஸ்' காரணமாக தனது வயிறு ஊதிக் காணப்படுவதாக வீட்டாருக்குப் பொய் உரைத்த பெண் ஒருவர் சிசு ஒன்றைப் பிரசவித்து மலசலக் குழியில் வீசியிருந்த நிலையில் நேற்று அக்குழந்தை சடலமாக பேராதனைப் பொலிஸார் நீதவான் முன்னிலையில் வெளியே எடுத்தனர். (இ-10)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை **யாழ் பிரதேசத்தில** குளப்பிட்டி, கொக்குவில், சாவற்காடு, ஆனைக் கோட்டை, காக்கைதீவு, நவாலி, அட்டகிரி, ஆஸ்பத்திரி வீதி வேம்படி சந்தியிலிருந்து சத்திர சந்திவரை, கந்தப்ப சேகரம் வீதி, மகாத்மா காநதி வீதி, முனீஸ்வரன் வீதி, கஸ் தூரியார்வீதி ஆஸ்பத்திரி வீதி சந்தியிலிருந்து வின்சர் சந்தி வரை, மின்சார நிலைய வீதி, பெரியகடை வீதி, வேல க்கை, போதனா வைத்திய சாலை, யாழ் கொமர்சல் வங்கி, யாழ். தேசிய சேமிப்பு வங்கி, யாழ் இலங்கை வங்கி, ரில்கோ விடுதி, சுகாதார திணைக் களம், கார்கில்ஸ் பூட் சிற்றி, யாழ் வைத்தியசாலை (மூன்று மாடிக் கட்டடத் தொகுதி), அபி கட்டடம், யாழ் விடுதி, பல்கலைக் கழக தங்கு விடுதி ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** ஆதிவிநாயகர் கோவில் பிரதேசம், ஓமந்தையிலிருந்து புளியங்குளம் வரை, கொம்புவைத்தகுளம் இராணுவமுகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# வடமாகாண விளையாட்டுப்போட்டி துரையப்பா விளையாட்டரங்கில் ஆரம்பம்








வட மாகாண கல்வி. பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டு திணைக்களத்தின் ஏற்பாட்டில், வட மாகாண பாடசாலைகளின் வீர, வீராங்கனைகளுக்கிடையிலான தடகள மற்றும் மைதான நிகழ்வுகள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் முதல் ஆரம்பமாகியது.

ஆரம்ப நிகழ்வு வடமாகாண கல்வி. பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டு திணைக்களத்தின் செயலாளர் ஆர்.இரவீந்திரன் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக இந்திய துணைத்தூதர் ஆ.நடராஜன் கலந்துகொண்டார்.

இந்த விளையாட்டுப்போட்டி நாளை மறுதினம் 18ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ளது. ஐந்து நாட்களிலும் 258 மைதான மற்றும் தடகள போட்டிகள் நடத்தப்படவுள்ளன. தெரிவு, அரையிறுதி மற்றும் இறுதி என்ற ரீதியில் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

வடமாகாணப் பாடசாலைகளின் விளையாட்டுப் போட்டியில் பெரு விளையாட்டுப் போட்டிகள் ஏற்கனவே நடந்து முடிந்திருந்த நிலையில், தற்போது தடகள மற்றும் மைதான நிகழ்வுகள் நடைபெறுகின்றன. இந்தப் போட்டிகளில் பங்குபற்றவுள்ள வீர, வீராங்கனைகள் தங்குவதற்கான இடங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. (க)

# யாழின் கில்லாடி யார்? இறுதிப்போட்டிக்கு சென்.மேரிஸ் தெரிவு



அரியாலைசனசமூகநிலையத்தின் 97 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்டுவருகின்ற யாழின் கில்லாடிஉதைபந்தாட்டத்தொடரின் முதலாவது அரையிறுதிப்போட்டியில் அரியாலை உதைபந்தாட்ட பயிற்சி மைதானத்தில் மின்னொளியில் 12/07/2016 அன்று இடம்பெற்றது.

இடம்பெற்ற முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் வி.க. மற்றும் ஊரெழு றோயல் வி. மோதியது. ஆட்ட நேரமுடிவில் சென்.மேரிஸ் 2:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது.

சென்மேரிஸ் அணி சார்பில் யூட் மற்றும் தங்கன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோல்களை தமது அணிக்காக பெற்றுக்கொடுத்தமை குறிப்பிடத்தக்கது. (க)

# J.P.L.வெற்றிக்கிண்ணம் மானிப்பாய் பரீஸ் வெற்றி



J.P.L.வெற்றிக்கிண்ணத்திற்காக யு.ஆர்.பவுண் டேசன் தொடர்ந்து 4 வருடங்களாக நடத்திவரும் 20 பந்துப் பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டியின் 5 ஆவது போட்டியில் மானிப்பாய் பரீஸ் அணி, திரு நெல்வேலி சி.சி அணியை 6 இலக்குகளால் வெற்றி பெற்றுதனது முதலாவது வெற்றியை பதிவு செய்துள்ளது.

முதலில் துடுப்பெடுத் தாடிய திருநெல்வேலி சி.சி. அணி 19.3 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 151 ஓட்டங்களை பெற்றது.லவகாந்-23,றொகான்-24,யசிந்தன்-13,கீர்த்திகன்-18,சுரேந் திரன்-42 ஓட்டங்களை பெற்றனர்.

களத்தடுப்பில் பரீஸ் அணியை சார்ந்த கிசோ-01,கோபிரசாத்-01,வினோத்-05,டிலக்ஸன்-02 இலக்கினை கைப்பற்றினர்.பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பரீஸ் அணி 17.4 ஓவர்களில் 4இலக்குகளை இழந்து 155 ஓட்டங்களை பெற்றது.


கோபிரசாத்-35, வினோத்-46,கிசோ-28, சுபாஸ் ஆட்டமிழக்காது 11, ஓட்டங்களை பெற்றனர். சுரேந்திரன்-02,றொகான் ,பிரபு தலா 1 இலக்கினை கைப்பற்றினர்.இப்போட்டியில் சிறந்த வீரராக வினோத் தெரிவு செய்யப்பட்டார்.


இப்போட்டியின் மூலம் யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் தரவரிசை பட்டியலுக்கு பரீஸ் அணி 5.15 புள்ளிகளையும் திருநெல்வேலி சி.சி.அணி 1.91 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. (க)

# வளர்மதி வி.க. கரப்பந்தாட்டம்

புத்தூர் வளர்மதி சனசமூக நிலையம் வியையாட்டுக்கழகங்களுக்கிடையே நடத்தும் மின்னொளியிலான கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் அண்மையில் நடைபெற்ற முதலாவது போட்டியில் அச்சுவேலி கலாநிதி அணியை எதிர்த்து போட்டியிட அச்சுவேலி கலைமகள் B2 அணி முதலாவது செற்றை 25:18 எனவும் தொடர்ந்து இரண்டாவது செற்றையும் 25:20 எனவும் கைப்பற்றி 2:0 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றுள்ளனர் அச்சுவேலி கலைமகள் B2 அணியினர். (க)

# வல்லவன் உதைபந்தாட்ட தொடர் ஊரெழு றோயல் வெற்றி







பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் வி.க நடத்தும் வடமாகாண வல்லவன் உதைபந்தாட்ட தொடரில் 09.07.2016 அன்று நடைபெற்ற சுப்பர் 8சுற்றுக்குள் நுழைவதற்கான போட்டியில் ஊரெழு றோயல் வி. கழகத்தினை அந்தோனியார்புரம் சென்.அன்ரனீஸ் எதிர்த்தாடியது.போட்டியின் ஆரம்பத்தில் மூன்றாவது நிமிடத்தில் றோயல் கஜகோபன் முதலாவது கோலினை அடித்து உற்சாகப்படுத்தினார். தொடர்ந்த 10 ஆவது நிமிடத்தில் சென்.அன்ரனீஸ் சுதர்சன் கோலினை அடித்து மீண்டும் சமப்படுத்தினார்.றோயல் வி. கழகத்திற்கு 40 ஆவது நிமிடத்தில்கிடைக்கப்பெற்ற தண்ட உதையினை கஜகோபன் கோலாக மாற்ற முதற்பாதி ஆட்டத்தில் 2:1 என்ற கோல் கணக்கில் றோயல் வி.க முன்னிலை பெற்றது.

இரண்டாம் பாதி ஆட்டத்தின் 54 ஆவது நிமிடத்தில் றோயல் நேசன் மேலும் ஒரு கோலினை அடித்து அணிக்கு பலம் சேர்த்தார். ஆட்டத்தின் இடையில் அந்தோனியார்புரம் சென்.அன்ரனீஸ் வீரர்கள் மத்தியஸ்தர்கள் தவறாக தீர்ப்பு வழங்குவதாக கூறி தொடர்ந்து விளையாடாது மைதானத்தினை விட்டுவெளியேறினர்.அதனை தொடர்ந்து 3:1 என்ற கோல் கணக்கில் றோயல் வி.க வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

போட்டியின் ஆட்டநாயகனாக றோயல் வி.க வீரர் கஜகோபன் தெரிவு செய்யப்பட்டு பணப்பரிசு மற்றும் பதக்கத்தினை கழக நலன்விரும்பி சி.செல்வமாணிக்கம் வழங்கி கௌரவித்தார். (க)

# நல்லுறவை முன்னிட்டு துடுப்பாட்ட போட்டி

யாழ்.மத்திய கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு மாணவர்கள், பாடசாலைகளுக்கிடையே நல்லுறவை உருவாக்கும் நோக்கில் 11பேர் கொண்ட 10 பரிமாற்றங்கள் கொண்ட துடுப்பாட்டப்போட்டி யாழ்ப்பாணத்தில் உள்ள 12 பிரபல பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கங்களுக்கு இடையே இன்று, நாளை மற்றும் எதிர்வரும் சனி மற்றும் ஞாயிறு தினங்களில் காலை 8.30 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

**பங்குபற்றும் பழைய மாணவர் சங்கங்கள்**

சென்.ஜோன்ஸ் கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி, கனகரத்தினம் மகா வித்தியாலயம், யாழ். இந்துக்கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி, ஸ்கந்தவரோதய கல்லூரி, ஜூனியன் கல்லூரி, மகாஜனா கல்லூரி, ஹாட்லி கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி. (க)

# இன்றைய போட்டிகள்

J.P.L. வெற்றிக்கிண்ணத்திற்காக யு.ஆர். பவுண்டேசன் 4 வருடமாக நடத்தி வரும் 20 பந்துப் பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்ட போட்டியில் இன்று சனிக்கிழமை யாழ்.இந்துக்கல்லூரி மைதானத்தில் காலை 8 மணிக்கு நடைபெறும் போட்டியில் ஜூனியன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகமும் தொடர்ந்து 11 மணிக்கு நடைபெறும் போட்டியில் சிறிகாமாட்சி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து திருநெல்வேலி சீ.சீ.விளையாட்டுக்கழகமும் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும் போட்டியில் K.C.C.C. விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மானிப்பாய் பரீஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (க)

# அச்சுவேலி முக்கொலை வழக்கு

# இரு வருடங்கள் விளக்கமறியலில் இருந்தாலும் அவசரமாக அவருக்கு பிணை வழங்க முடியாது

## யாழ்.மேல் நீதிமன்றம் வழக்கை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி முக்கொலை வழக்கில் இரண்டு வருடங்களாக விளக்கமறியலில் இருந்து வரும் சந்தேக நபரை பிணையில் விட வேண்டும் எனக் கோரி தாக்கல் செய்யப்பட்ட பிணை மனுவின் விண்ணப்பம் மீது அவசரமாக முடிவெடுக்க முடியாது என கடந்த புதன்கிழமை யாழ் மேல் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இந்த மனு மீதான விசாரணைகளை நடத்திய யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன், இது பற்றிய முற்று முழுதான பிணை கட்டளை குறித்து அடுத்த மாதம் 31 ஆம் திகதி வரை வழக்கை ஒத்தி வைத்துள்ளார். யாழ் குடாநாட்டை பெரும் பர பரப்புக்கு உள்ளாக்கிய யாழ்ப் பாணம் அச்சுவேலியில் கதிரிப்பாய் என்ற இடத்தில், கடந்த 04.05.2014 அன்று நித்தியானந்தன் அருள் நாயகி, நித்தியானந்தன் சுபாங் கன், யசோதரன் மதுஷா ஆகிய மூவரைக் கொலை செய்ததாக கோப்பாய் ஊரெழு மேற்கு அம்மன் கோவிலடியைச் சேர்ந்த பொன்னம் பலம் தனஞ்செயன் எனபவர் கைது செய்யப்பட்டு கடந்த 2 ஆண்டுகளுக்கு மேலாக விளக்க மறியலில் இருந்து வருகின்றார்.

இந்த கொலை வழக்கு சம்பந்தமான நீதவான் நீதிமன்ற விசாரணைகள் முடிவடைந்துள்ளன.

ஆயினும் இந்த வழக்கின் சந்தேக நபராகிய பொன்னம்பலம் தனஞ் செயன் கடந்த இரண்டு வருடங்களாக விளக்கமறியலில் இருந்து வருகின்றார்.

எனவே அவரை பிணையில் செல்ல அனுமதிக்க வேண்டும் என கோரி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் பிணை மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்தமனுமீதானவிசாரணையை மேற்கொண்ட யாழ் மேல் நீதிமன்ற நீதிபதியிடம், 2 வருடங்களாக விளக்கமறியலில் இருப்பவரை மேலும் தாமதிக்காமல் உடன் பிணையில் செல்ல அனுமதிக்குமாறு விண்ணப்பம் செய்யப்பட்டது.

நீண்ட காலமாக விளக்கமறியலில் ஒரு சந்தேக நபர் இருக்கின்றார் என்ற காரணத்திற்காக அவசரமாக பிணை வழங்க முடியாது என நீதிபதி இளஞ்செழியன் தெரிவித்தார். அத்துடன் இது ஒரு முக் கொலை வழக்கு என்பதால் பல சட்ட நடைமுறைகள் பல பிரச்சினைகள் இருக்கின்றன என்பதையும் சுட்டிக்காட்டினார். இது தொடர்பில் நீதிபதி கூறுகையில்,

இந்த மனு தொடர்பான குற்றச் செயலில் மூன்று பேர் கொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

இந் தக் கொலைச் சம்பவங்கள் நடை பெற்றதையடுத்து, யாழ்ப்பாணம் பெரும் பரபரப்படைந்தது.

மக்கள் ஒருவித அச்ச நிலைக்கு உள்ளாகினார்கள். இவ்வாறு சமூகத்தைப் பாதிப்புக்கு உள் ளாக்கி சமூகத்தின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்திருந்த இந்தச் சம்பவம் தொடர்பாக நீதவான் நீதிமன்றத்தையடுத்து, மேல் நீதிமன்ற நடைமுறைகளுக்கு இந்த வழக்கு உட்படுத்தப்பட வேண்டியிருக்கின்றது.

அது மட்டுமல்லாமல், மூன்று பேரைக் கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டில் சந்தேக நபர் இரண்டு வருடங்களாக நீதவான் நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் இருந்து வருகின்றார். இந்த பிணை மனு தொடர்பான வழக்கில் இந்த விடயமும் முக்கியத்துவம் பெறுகின்றது.

எனவே, இந்த பிணை மனு மீது அவசரமாக இந்த நீதிமன்றம் முடிவுகளை மேற்கொள்ள முடியாது.

பல விடயங்களை மன்று ஆராய்ந்து தீர்மானம் எடுக்க வேண்டியிருப்பதனால், இந்த பிணை மனு தொடர்பில் இந்த சந்தேக நபருக்கு பிணை வழங்கலாமா இல்லையா என்பது குறித்த முற்றுமுழுதானகட்டளை 31.08.2016 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்படுகின்றது என்றார் நீதிபதி இளஞ்செழியன். (செ-4)

# அத்தியாவசிய பொருட்களின் விலை வர்த்தமானியில் நேற்று வெளியானது

(கொழும்பு)

அரசாங்கத்தினால் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்ட 16 அத்தியாவசிய பொருட்களின் ஆகக் குறைந்த சில்லறை விலை அடங்கிய வர்த்த மானி பத்திரம் நேற்று வெளியாகியுள்ளது.

இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ள அத்தியாவசிய பொருட்களை வர்த்தகர்கள அதிக விலைக்கு விற்பனை செய்தால், அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த 16 வகையான பொருட்களும் பொதிகள் செய்யப் பட்டு விற்பனை செய்யப்பட்டால், அதற்காக 5 ரூபாயுக்கும் குறைந்த அளவான விலை அதிகரிப்பையே மேற்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மைசூர் பருப்பு, கடலை, பாசிப் பயறு, நெத்தலி, வெள்ளை சீனி, கோதுமைமா, காய்ந்த மிளகாய், கருவாடு மற்றும் மாசி உள்ளிட்ட பொருட்கள் பொதி செய்யப்பட்டு விற பனை செய்யப்படுகின்றன.

இதற்கமைய சீனி கிலோ ஒன்றின் கட்டுப்பாட்டு விலை 95 ரூபாய் என வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கோதுமை மா கிலோ ஒன்று 87 ரூபாவாகவும், சிவப்பு பருப்பு கிலோ ஒன்று 169 ரூபாயாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தாய்லாந்தில் இருந்து இறக்குமதி செய்யப்படும் நெத்தலி கிலோ ஒன்று 495 ரூபாயாகவும், டுபாயில் இருந்து இறக்குமதி செய்யப்படும் நெத்தலி கிலோ ஒன்றின் கட்டுப் பாட்டு விலை 410 ரூபாயாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாசிப்பயறு கிலோ ஒன்றின் கட்டுப்பாட்டு விலை 220 ரூபாயாகவும், தோலுடனான கோழி இறைச்சி கிலோ ஒன்றின் விலை 410 ரூபாயாகவும், தோலற்ற கோழி இறைச்சி கிலோ ஒன்றின் கட்டுப்பாட்டு விலை 495 ரூபாயாகவும் விலையிடப் பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் உருளை கிழங்கு கிலோ ஒன்றின் கட்டுப்பாட்டு விலை 120 ரூபாயாகவும், பெரிய வெங்காயம் கிலோ ஒன்றின் விலை 78 ரூபாயாகவும், காய்ந்த மிளகாய் கிலோ ஒன்றின் கட்டுப்பாட்டு விலை 385 ரூபாயாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுதவிர, கடலை கிலோ ஒன்று 260 ரூபாயுக்கும், இறக்குமதி செய்யப்படும் முழு ஆடைப் பால்மா கிலோ ஒன்று 810 ரூபாயிற்கும் விற்பனை செய்யப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் பால்மா கிலோ ஒன்றின் கட்டுப்பாட்டு விலை 735 ரூபாய் என வர்த்தமானியில் குறிப் பிடப்பட்டுள்ளது. அத்துடன் கட்டா கருவாடு கிலோ ஒன்றின் விலை ஆயிரத்து 100 ரூபாயாகவும், மாசி மற்றும் சஸ்டஜன் சத்துணவு பால்மா ஆகியவற்றின் கட்டுப்பாட்டு விலை ஆயிரத்து 500 ரூபாய் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ-11)

# தனியார் பேருந்தை வழிமறித்து தாக்குதல்

## கண்ணாடிகள் சேதம்; சாரதி; பயணி காயம்

(மிருசுவில்)

மூன்று பேர் கொண்ட இனந் தெரியாத குழு தனியார் பேருந்தை வழி மறித்து தாக்கியதில் பஸ் சாரதியும் பயணி ஒருவரும் சிறு காயங்களுக்கு உள்ளானதோடு பஸ் கண்ணாடியும் சேதம் அடைந்துள்ளது.

இச்சம்பவம் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் கிளிநொச்சி தர்ம புரம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவு நோக்கி பிரயாணமான தனியார் பேருந்தை பிற்பகல் 3 மணியளவில் ஒரு மோட்டார் சைக்கிளில்வந்த இனந் தெரியாத மூன்று பேர் பஸ்சினை கல்லால் எறிந்து தாக்குதல் நடத்தியுள்ளனர்.

தொடர்ந்து பஸ் பயணிக்க முற்படுகையில் ஒரு முச்சக்கர வண்டி பஸ்சினை இடை மறித்துள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த மூவரும் பேருந்தின் கண்ணாடியை அடித்து நொருக்கியதோடு பஸ்சின் சாரதியையும் தாக்கிவிட்டு அருகில் இருந்த ஒழுங்கை வழியாக தப்பி சென்றுள்ளனர்.

இதில் பஸ் சாரதி மற்றும் பயணி ஒருவரும் சிறு காயங்களுக்கு உள்ளாகி தர்மபுரம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இது தொடர்பில் தர்மபுரம் பொலிஸில் முறைப்பாடு பதியப்பட்டுள்ளது.

பேருந்தில் பயணித்த ஏனைய பயணிகள் வேறு ஒரு பேருந்து மூலமாக அவர்களது இடங்களிற்கு பயணமாவதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (செ-85)

# நெருக்கடியைச் சமாளிக்க...

வாக பரிந்துரைக்கப்பட்டுள்ள சர்வதேச நீதிபதிகள் உள்ளடக்கிய விசாரணை குழுவின் சட்டத்தன்மை தொடர்பாக ஊடகங்களிடம் தெளிவுப்படுத்தும் போதே முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா இவ்வாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்தும் கூறுகையில்,

இலங்கையின் அரசியலமைப்பை மூலச்சட்டமாக கொண்டே நாட்டின் அனைத்து துறைகளும் நிர்வகிக்கப்படுகின்றன.

சட்டவாக்கச்சபைக்கும் நீதி துறைக்கும் இடையில் பகிரப்பட்டுள்ள அதிகாரம் முக்கியமானதாகும்.

மக்கள் ஆணையின் பிரகாரம் சட்டவாக்கச்சபைக்கு சட்டங்களை உருவாக்கும் அதிகாரம் காணப்பட்டாலும் அதனை அமுலாக்கும் அதிகாரம் நீதி துறைக்கே காணப்படுகின்றது.

சட்டங்களை மறுசீரமைப்பிற்கு உட்படுத்தப்படும் போது உச்ச நீதிமன்றின் வியாக்கியானம் கோரப்பட வேண்டும்.

இவ்வாறு மூலச்சட்டத்தில் அனைத்து விடயங்களுக்கும் முக்கியத்தும் அளிக்கப்பட்டுள்ளது.

இதனை மீறி செயற்படும் போது தான் அது சட்டத்திற்கு முரணானது என்ற நிலைப்பாடு ஏற்படுகின்றது.

கடந்த ஆண்டு ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

அதற்கு இலங்கை அரசாங்கம் இணை அனுசரணையும் வழங்கியது. இது அனைவரும் அறிந்த விடயமாகும்.

ஆனால் அந்த தீர்மானத்தில் காணப்படுகின்ற பல விடயங்கள் இலங்கையின் சட்டத்தின் பிரகாரம் நடைமுறையில் எந்தளவு சாத்தியப்படும் என்பது ஆராயப்பட வேண்டியதொன்றாகும்.

அன்றைய சூழலில் சர்வதேச நீதிபதிகள் விவகாரம் என்பது நெருக்கடியைச் சமாளிக்க அரசாங் கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமாக காணப்பட்டாலும் அது தற்போது செயலுருப்பெறுவது சாத்தியப்படாதது என சரத் என் சில்வா தெரிவித்தார். (செ-11)

# 6 கைக்குண்...

பகுதி வாசி ஒருவர் கிராம அலுவலர் ஊடாக ஓமந்தைப் பொலிஸாருக்கு அறிவித்தார்.

சம்பவ இடத்திற்குச் சென்ற விஷேடஅதிரடிப்படையினர் ஆறு குண்டினையும் மீட்டு செயலிழக்கச் செய்ததாக ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர். (செ-60)

# கத்திக்குத்துக்கு இலக்காகி 5 பிள்ளைகளின் தாய் மரணம்

(கொழும்பு)

அயல் வீட்டுப் பெண்ணின் கத்திக்குத்துக்கு இலக்காகி திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஐந்து பிள்ளைகளின் தாய் நேற்றுமுன்தினமிரவு 8.45 மணியளவில் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த கத்திக்குத்துச் சம்பவம் திருகோணமலை சேனையூர் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் 3.15க்கு இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் சம்பூர்- சேனையூர் பகுதியைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தாயாரான இளங்குமார் சாந்தமலர் (41 வயது) என, பொலிஸார் தெரிவித்தனர்.

கத்திக்குத் துக்கு இலக்கான குறித்தபெண், இரண்டு வருடங்களுக்கு முன்னர் பக்கத்து வீட்டுப் பெண்ணின் மகளுக்கு இரண்டு இலட்சம் ரூபாயை, வட்டிக்குக் பெற்றுக்கொடுத்துள்ளார். அந்தப் பணத்தை மீளச் செலுத்தாமையால் அதுதொடர்பில், பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அவ்வாறு முறைப்பாடு செய்யப் பட்டதில் இருந்து, பக்கத்துவீட்டுப் பெண்ணுடன் ஒவ்வொரு நாளும் முரண்பாடு இருந்து வந்துள்ளது.

சம்பவ தினமும் வாக்குவாதம் ஏற்பட்டு, அது கைகலப்பாக மாறியுள்ளது. இந்நிலையிலேயே, இந் தக் கத்திக்குத்துச் சம்பவம் இடம் பெற்றுள்ளது என்று விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாக குறிப்பிட்ட பொலிஸார்,

மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தனர். (செ-11)

## முன்னாள்...

ஆண்டு காலப்பகுதியில் மிக் ரக விமானக் கொள்வனவின் போது இடம்பெற்ற மோசடி தொடர்பில் விசாரணை செய்வதற்காக அவரைக் கைது செய்யவேண்டிய தேவையிருப்பதாக நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவினர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

நீதிமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை முன்னிலையாகுமாறு உதயங்க வீரதுங்கவின் வதிவிட முகவரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் உக்ரைன் பிரிவினைவாதிகளுக்கு ஆயுதம் வழங்கியதாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டின் பேரில் 2006ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரை ரஷ்யாவுக்கான இலங்கையின் தூதுவராக கடமையாற்றியிருந்த உதயங்க வீரதுங்கவை பொலிஸார் தேடி வருகின்றனர்.

இவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை இலங்கையின் நீதித்துறை முயற்சிகளை மேற்கொண்டு வரும் நிலையில், குற்றவாளிகளை பறிமாற்றிக் கொள்ளும் உடன்படிக்கை ஒன்றில் இலங்கையும், உக்ரேனும் கடந்த மாதம் 25ஆம் திகதி கைச்சாத்திட்டிருந்தன.

இந்நிலையில், மகிந்த ராஜபக்ஷ அண்மையில் மேற்கொண்ட தாய்லாந்து மற்றும் ஜப்பான் விஜயங்களின் போது உதயங்க வீரதுங்கவை சந்தித்தமைக்கு சான்றாக சில புகைப்படங்கள் வெளியாகியிருந்தன. இதனையடுத்து, தாம் உக்ரைனில் வாழ்ந்து வருவதாக உதயங்க வீரதுங்க அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்.

இதனையடுத்து, குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டு உக்ரைனில் தங்கியுள்ளவர்களை தாய்நாட்டிற்கு ஒப்படைக்கும் வகையிலான ஒப்பந்தம் ஒன்றைக் கைச்சாத்திடுவதற்கு இலங்கை அமைச்சரவை முன்னதாக அங்கீகாரம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## பிரதமர் நாளை...

பங்கேற்கவுள்ளார்.

மூன்றாவது தடவையாக நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்ற அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தெற்கு ஆசியாவில் சட்டம் மற்றும் சமாதானம் எனும் தொனிப்பொருளில் முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க உரையாற்றவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மாநாடு பிராந்திய வர்த்தகம், பொருளாதாரம் மற்றும் கொள்கைகள் தொடர்பிலான சவால்களை வெற்றி கொள்ளும் நோக்கில் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டு அமர்வுகளில் சிங்கப்பூர் பிரதமர் லீ ஹ்சியென் லூங் உள்ளிட்ட பிராந்திய அரசியல்வாதிகள், கல்வி மற்றும் சிவில் அமைப்புக்களின் தலைவர்கள், வர்த்தகர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சு மற்றும் வர்த்தக மற்றும் தொழிற்துறை அமைச்சின் கூட்டு ஏற்பாட்டில் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் தெற்கு ஆசிய கற்கைகள் நிறுவகத்தின் ஆதரவில் இந்த மாநாடு இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## சர்வதேச...

வர் அனுரகுமார திசாநாயக்க யாழ்ப்பாணத்தில் தெரிவித்துள்ளார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் வற்வரி அதிகரிப்பு தொடர்பில் யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நேற்றைய தினம் துண்டுப் பிரசுர விநியோகம் நடைபெற்றது. இதன் போது மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) தலைவர் அனுரகுமார திசாநாயக்க கலந்து கொண்டு துண்டுப்பிரசுரங்களை வழங்கி வைத்தார்.

இதன் போது ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை மீது சர்வதேச விசாரணை வேண்டும் எனவும், இலங்கை மீதான போர்க்குற்றங்களை சர்வதேச நீதிபதிகளே விசாரணை செய்ய வேண்டும் எனவும், தமிழ்த்தரப்புக்கள் வலியுறுத்தி வரும் நிலையிலும்,

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர், மனிதவுரிமை ஆணையாளர், ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அறிக்கையாளர்கள், மற்றும் சர்வதேச நாடுகள் இலங்கை மீது சரவதேச தரத்திலான விசாரணை வேண்டும், எனவும் அந்த விசாரணையை சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்க மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தப்பட்டு வரும் நிலையில், ஊடகவியலாளர்களால் மேற்கண்ட கேள்வி கேட்கப்பட்டது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். எமது நாட்டில் இருக்கும் அரசியல் அமைப்புக்கு ஏற்ற வெளிநாட்டு நீதிபதிகளுடனான ஒரு நீதிமன்றை அமைப்பதற்கு, இலங்கையில் நடைபெற்ற குற்றங்கள் தொடர்பில் விசாரிக்க வேண்டிய காரணம் ஏதும் இருக்குமானால், அதனை விசாரிக்க வேண்டியிருப்பது இலங்கையில் உள்ள சட்டமும் அரசியல் அமைப்பும் தான்.

இலங்கையின் அரசியல் அமைப்புக்கு முரணாக இது நடைபெறுமானால் கட்டாயமாக சர்வஜன வாக்கெடுப்பை நோக்கி செல்ல நேரிடும். எனவே இவ்வாறன சிக்கலான பிரச்சினைகளுக்காக நீதியை நிலை நாட்டுவதற்காக இருக்கின்ற யந்திரத்தை பயன்படுத்துவதே சரியான முறையாகும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார். (செ-4)

## இலங்கைக்கு சீனா...

வாங்க் இங்கி இதனை தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு சாத்தியமான விடயங்களிலும் இலங்கைக்கு உதவ சீனா தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நட்பு நாடு என்ற அடிப்படையில், தேவைப்படும் நேரத்தில் இலங்கைக்கு சீனா உதவி அளிக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

சீன தூதரகத்தில் நேற்று இடம்பெற்ற சீன மொழி பயிற்சி மைய திறப்பு நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் இந்த தகவலை வெளியிட்டார். (செ-11)

## 'தடம் மாறுகிறதா...

வுற்றதா?,குறுகிப்போகும் தமிழர் தாயகமும் குறையாத மேட்டிமைவாதமும்,"2009ம் ஆண்டிற்கு பிந்திய தமிழ் மென்சக்தியின் நகர்வியல் ஆகிய தலைப்புகளில் ஆக்கபூர்வமான கருத்துப்பகிர்வு இடம்பெறவுள்ளது.

ஆறு தசாப்பத்திற்கு மேற்பட்ட இன விடுதலைப் போராட்டத்தின் நகர்வியல் சார்ந்த நிகழ்தகவின் தமிழ் தேசிய தலைமைகளும் உயர் நிலை சிந்தனைக்குழாமினரும் ஒருங்கிருப்பில் பங்கேற்கும் நிறை நிலை கருத்துக்களம் இது ஆகும். எனவே அழைப்பாளர்கள் அனைவரையும் இதில் பங்கேற்று ஆக்கபூர்வமாக கருத்துறவாடுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உட்பட கூட்டமைப்பின் பங்காளிகட்சித் தலைவர்கள் மற்றும் வட கிழக்கு மதத் தலைவர்கள் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பல துறைசார்ந்த வல்லுநர்கள் கலந்துகொள்ளவுள்ளனர் என தெரிவித்த மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ். சிவகரன், இக்கலந்துரையாடலில் அழைக்கப்பட்ட பிரமுகர்கள் மாத்திரமே கலந்து கொள்ள முடியும் என குறிப்பிட்டுள்ளார். (செ-4)

## நாமலுக்கு...

மற்றவர்கள் சந்திக்க முடியாத பாதுகாப்பு வசதிகளும் இந்த சிறைக்கூடத்தில் உள்ளது.

இந்நிலையில் நாமல் ராஜபக்ஷவைப் பரிசோதித்த சிறைச்சாலை மருத்துவமனை மருத்துவர்களின் சிபாரிசுக்கமைய அவருக்கு சொகுசு மெத்தையொன்றை பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதற்காக அவர் தன் வீட்டிலிருந்து சொகுசு மெத்தையொன்றை தருவித்துக் கொண்டுள்ளார். அதனை உள்ளே எடுத்து வந்து பயனபடுத்திக் கொள்ள சிறைச்சாலை நிர்வாகமும் அனுமதியளித்துள்ளது.

எனினும், நாமல் ராஜபக்ஷ தொடர்ந்தும் சிறைச்சாலை நிர்வாகம் வழங்கிய தலையணையை பயன்படுத்தி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## 18 ஆயிரம்...

கையும் எடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

முப்படைகளிலிருந்து தப்பிச் சென்ற வீரர்கள் உத்தியோகபூர்வமாக் பதவி விலகுவதற்கு அரசாங்கத்தால் கடந்த யூன் மாதம் 13 ஆம் திகதி முதல் இம்மாதம் 12ஆம் திகதி வரை பொதுமன்னிப்பு காலம் வழங்கப்பட்டது.

இதனடிப்படையில் இராணுவ வீரர்கள் அவர்கள் பணியாற்றிய இராணுவ படைப் பிரிவுக்கும், விமானப்படை-விமானப் படை தலைமையகத்துக்கும், கடற்படை வீரர்கள் வெலிசறை கடற்படை முகாமிற்கும் வருகைத் தர வேண்டும் என அறிவிக்கப்பட்டது.

இந்நிலையிலேயே குறித்த பொதுமன்னிப்பு காலத்தில் ஆஜராகிய 18 ஆயிரத்து 417 இராணுவ வீரர்களே சட்டரீதியாக நீக்கப்பட்டுள்ளனர். (செ-11)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

A/L - 2016
இறுதிக் கருத்தரங்கு
தமிழ்
ஆசிரியர் - க.சந்திரலிங்கம்
B.A (Hons), Ta - Spl, PGDE, M.A (Tamil) - Ind, MED (Hons)
ஆரம்பம் -
18 - 07 - 2016 திங்கள் 2.30 பி.ப
(தொடர்ந்து 6 தினங்கள் நடைபெறும்)
வெளிமாணவர்களும் பங்குபற்றலாம்
தினம் ஒரு கையேடு வழங்கப்படும்
அனுமதிகள் வழங்கப்படுகின்றன
DCM யாழ்.நகர்

உடனடி வேலை வாய்ப்பு
- விளம்பரத்துறையில் ஆர்வமும் ஆற்றலும் அனுபவமும் உள்ள ஆண்,பெண் இருபாலருக்கும் உடனடி வேலைவாய்ப்பு.
- 6 மாத காலத்திற்குள் உங்கள் திறமையை பொறுத்து குறைந்தது 2 லட்சம் ரூபாயை பெறக்கூடிய வாய்ப்பு.
- தகுதி - O/L

V2 Travels and Tours (Pvt) Ltd.
5 வருடங்களுக்கு மேல் சிறந்த சேவையாற்றி வரும் எமது ஸ்தாபனத்துடன் தொடர்பு கொண்டு நன்மை பெறுங்கள்.
0768226243 49 A சப்பல் லேன் யாழ்ப்பாணம்
(1610-ச)

துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரியின் புகழ்பூத்த பழைய மாணவனும்
பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் நீண்டகால
முன்னாள் செயலாளருமாகிய **பேராசிரியர்**
**கந்தையா தேவராசா** அவர்களின்
பாசமிகு தாயார்
திருமதி கந்தையா அன்னம்மா
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
அவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம், பாடசாலை நம்பிக்கை நிதியம்.
(சி-5191)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



Dr.S. வசீகரன்
மாகாணப் பணிப்பாளர்
கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம், வட மாகாணம்



Dr. (Mrs) சி.கிரிஜகலா
உதவிப் பணிப்பாளர் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம், முல்லைத்தீவு



Dr.T. மாறன்
கால்நடை வைத்தியர்
கால்நடை வைத்திய அலுவலகம், யாழ்ப்பாணம்

16ஆம் திகதி இன்று BMICH இல் நடைபெறும் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் எமது மதிப்பிற்குரிய மாகாணப் பணிப்பாளர் Dr.s.வசீகரன், உதவிப் பணிப்பாளர், Dr.(Mrs) சி.கிரிஜகலா, கால்நடை வைத்தியர் Dr.T. மாறன் ஆகியோர் பொது நிர்வாக முதுமாணி (MPA) பட்டத்தினை பெற்றுக் கொள்வதையிட்டு பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் பல பட்டங்களைப் பெற்று பாரில் புகழுடன் வாழ மனம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.
**வாழ்த்துவோர்:**
**நலன்புரிச்சங்கம் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம், முல்லைத்தீவு.**
(5216)

வீடு வாடகைக்கு
பலாலி வீதி, கந்தர்மடத்தில் 6 அறைகள் மற்றும் இரண்டு விறாந்தைகளுடன் கூடிய வீடு வாடகைக்கு விடப்படவுள்ளது. அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.
(4 அறைகள் குளிரூட்டப்பட்டுள்ளன)
தொடர்பு :- 0779566761 0775365155
(5229)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.07.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.